COMMISSIONER OF TAMIL NADU
ARCHIVES AND HISTORICAL RESEARCH
25 நவ 1978
EGMORE, MADRAS-8.

திருக்கோயில்

நவம்பர் 1978 ரூ. 1-25

இந்து சமய அறநிலைய (ஆட்சி)த் துறை வெளியீடு

5—9—1978

முடி காணிக்கை மண்டபம் திறப்பு விழா

முன்மண்டபம் திருப்பணிக்கு ரூபா நன்கொடை ஈந்த திரு சிவந்தி ஆதித்தன் அவர்களுக்கு மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் இராம. வீரப்பன் அவர்கள், பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல் உடன் இருப்பவர் வருவாய்த்துறைத் துணை அமைச்சர் மாண்புமிகு திரு. முசிறிப்புத்தன் அவர்கள்.

முகப்பு:
அருள்மிகு ஞானசரசுவதி,
கங்கைகொண்ட சோழபுரம்
திருக்கோயிலின் புகழ்மிக்க
அழகிய சிற்பம்

திருக்கோயில்

மாலை : 21 || காளயுக்தி ஆண்டு-கார்த்திகைத் திங்கள்—நவம்பர்-1978 || மணி : 2

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப்பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. **15—00** உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங்களுக்கு, ஒரு இதழ் ரூ. **1—25** வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் ''சந்தாதாரர்'' ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொருவரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும் பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் *[PINCODE]* எண்ணுடன் தெரிவிக்குமாறும், கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப் படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறையாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற்பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. **9—60** ஆகின்றது. ஆதலால் வெளிநாட்டுச் சந்தா, ரூ. **20—00**-ல் இருந்து ரூ. **25—00** ஆக ஜனவரி **1978** முதல் மாற்றி அமைக்கப்பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பொருளடக்கம்

அறநிலையத்துறை அலுவலர்களுக்கு
—மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள்
தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 10/78 ன்படி அறநிலைய ஆட்சித் துறையின் கீழ்ச் சேர்க்கப்பட்ட ஆலயங்களின் விவரம்
கனவு நிலை —திருமுருக கிருபானந்தவாரியார்
நால்வர் பாடல் —திரு குருகுலம் அழகரடிகள்
சேரவாரும் செகத்தீரே
—திரு சுத்தானந்தபாரதியார்
இருவகை அழகு
—திரு கி. வா. ஜகந்நாதன் எம்.ஏ.,
வடக்கு திருவீதிப்பிள்ளை வைபவம்
—திரு பி. ப. அண்ணங்கராசார்ய சுவாமிகள்
திருக்குடமுழுக்கு விழா நிகழ்ச்சிகள் —ஆசிரியர்
சக்தி தோத்திரங்கள்
—திரு பெ. திருஞானசம்பந்தம், எம்.ஏ., எல்.டி.
வள்ளலாரின் திருவுள்ளம்
—திரு கி. ஆ. பெ. விசுவநாதம்
சீர்காழிக் கோவை
—திரு ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.
வித்தகப் பெருங்கவிஞர் மீனாட்சிசுந்தரனார்
—ஆசிரியர்
நாயன்மார் தோன்றிய நற்பெருந் தலங்கள்
—ஆசிரியர்
வில்லி பாரதம் —திரு ம. பொ. சிவஞானம்
திருக்கண்ணமங்கை ஆண்டான் —ஆசிரியர்
தொல்காப்பியத்தில் தத்துவநெறிக் கொள்கைகள்
—திரு க. வெள்ளைவாரணனார்
வேதமும் வேதாந்தமும்
—திரு. இராம. பட்டாபிராமன்
நாதமுனிகளும், ஆளவந்தாரும்
—திரு எம். எல். இராசகோபாலாச்சாரியார்
தென்காசிக் கோபுரக் கல்வெட்டுக்கள்
—திரு மா. செந்தில் செல்வக்குமரன், எம்.ஏ.,
ஈசன் உருவம் —திரு தத்புருஷ தேசிகர்

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

இந்து சமய அறநிலைய (ஆட்சி)த் துறை வெளியீடு

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

அறநிலையத்துறை அலுவலர்களுக்கு

அமைச்சரின் சிறப்புரை

158636

மாண்புமிகு **இராம. வீரப்பன்** அவர்கள்
சுற்றுலா மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்

கோவையில் 6-10-1978 அன்று நடந்த இந்து சமய அறநிலைய (ஆட்சித்) துறை அலுவலர்கள் மாநாட்டில் மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் நிகழ்த்திய உரையின் தொகுப்பு :

''கோவை, நீலகிரி சேலம் மற்றும் தர்ம புரி மாவட்டங்களைச் சேர்ந்த அறநிலையத் துறையில் பொறுப்பு வாய்ந்த பணியில் ஈடு பட்டிருக்கும் உங்களை யெல்லாம் இன்றைக்குச் சேர்ந்து பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தமைக்கு நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

அறநிலையத் துறையில் இதற்கு முன்னால் அதிகாரிகளைச் சந்தித்துக் கருத்துக்களைப் பரி மாறிக் கொள்ளுதல் போன்ற இது மாதிரியான கூட்டம் நடந்ததாகத் தெரியவில்லை. முதன் முதலாக இது மாதிரியான கூட்டம் மதுரையில் நடந்தது. மதுரை மாவட்டத்தைப் பொறுத்த வரை அங்குள்ள துணை ஆணையர் இது வரை அமைச்சர்கள் இப்படிப்பட்ட கூட்டங்களை யாரும் நடத்தவில்லை என்று எனக்குத் தெரிவித் தார். இன்றைக்குக் கடந்த ஒரு ஆண்டுக் கால மாக, இந்தத் துறை முதல் அமைச்சரின் கீழ் இருந்து வந்ததை நீங்கள் அறிவீர்கள். இது ஒரு முக்கியமான துறை. அன்றாடம் ஆலயங் களுக்கு ஆயிரக் கணக்கான பக்தர்கள் தரிசனத் திற்கு வந்து கொண்டிருப்பதை நாம் எல்லோ ரும் அறிவோம். புரட்சித் தலைவர் அவர்கள் இந்தத் துறையைத் தங்களின் கீழ் வைத்துக் கொண்டதற்கு மிக முக்கிய காரணம், இந்தத் துறையைப் பொறுத்த வரையில் பொது மக்க ளிடம் ஒரு தவறான அபிப்பிராயம் ஏற்பட்ட காரணத்தினாலோ அல்லது இந்தத்துறை பொது மக்களிடம் நேரிடையாகத் தொடர்பு கொண்டு இருப்பதாலும் அன்றாடம் கோடான கோடி பக்தர்கள் ஆலய தரிசனம் செய்து கொண்டிருப் பதாலும் அவர்களுக்கு ஆன்மீகத் திருப்தி ஏற் பட வேண்டுமென்கின்ற ஒரு காரணத்தாலோ இருக்கக் கூடும். இந்த உண்மையை யாரும் மறுக்க முடியாது. இன்றைக்கு இந்தத் துறை யில் அறங்காவலர்கள் நியமனம் செய்ய வேண் டியுள்ளது. Fit person என்று சொல்லப்படுகின்ற வர்கள், வேறு துறையைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். சிற்சில சமயம் அவர்கள் சில காரியங்களைச் சட்டப்படி அணுகுவதில்லை என்று பொது மக்களிடமிருந்து ஒரு சில புகார்கள் என்னிடம் வந்துள்ளன. முந்தைய ஆட்சியில் பல புகார்கள் பொது மக்கள் எழுப்பியதாலும், ஆளுநர் ஆட்சியின்போது தக்கார்கள் நியமனம் செய்யப்பட்ட போதிலும் முதல்வர் அவர்கள் இந்தத் துறையைப் பொறுத்த வரையில் பழைய கருத்துக்களை மாற்றிப் பொது மக்களின் முன்பு ஒரு நல்ல அபிப்பிராயத்தை உண்டாக்க வேண்டும் என்று கருதுவதாலும், நான் இந்தத் துறையின் அமைச்சராகப் பணி புரிய ஆர்வமுடன் ஒப்புக் கொண்டேன்.

உங்கள் மத்தியில் நான் ஒன்றை மட்டும் கூறிக் கொள்ள விரும்புவேன். அதாவது எந்த ஒரு நிர்வாக அதிகாரியானாலும் சரி, ஆய்வர் ஆனாலும் சரி, உதவி ஆணையர் ஆனா லும் சரி, துணை ஆணையர் ஆனாலும் சரி, ஆணை யர் ஆனாலும்சரி, அவர்கள் தத்தம் கடமையை உணர்ந்து இந்தத் துறையில் ஏற்பட்டிருக்கின்ற ஒரு தவறான கருத்தை மாற்றப் பாடுபட வேண்டும். பொது மக்களின் ஆன்மீக உணர் வை மேலும் மேலும் வளர்க்க வேண்டியது உங்கள் பொறுப்பாக வேண்டும். பொது மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக வேண் டும். அதிகாரிகள் தான் இந்தத் துறையின் முதுகெலும்பு. அவர்கள் தமது கடமையைச் செவ்வனே ஆற்றினால்தான் இந்தத் துறையில் புதிய மறுமலர்ச்சி ஏற்படும். புதிய உணர்ச்சி பிறக்கும். சமுதாயத்தின் மத்தியில் ஒவ்வொரு குடிமகனின் மனதில் உண்டாகி இருக்கின்ற அந்தத் தவறான கருத்தை வேருடன் களைந்து எடுக்கப்பட ஏதுவாக இருக்கும். ஒவ்வொரு நிர்வாக அதிகாரியும் ஆலயத்தின் வருமானத் தைப் பெருக்குவதற்கு வேண்டிய முயற்சி எடுக்க வேண்டும். இன்றைக்கு இந்தியாவி

லேயே தமிழ் நாட்டில்தான் அதிகமான ஆல யங்கள் இருக்கின்றன. கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று சொல்வர். ஆகையால் தான் நமது மூதாதையர் கோயில் களைக் கட்டி வைத்தனர். ஒவ்வொரு அதிகாரி யும் அறநிலைய முதலீடுகளைப் பெருக்க வேண் டும். நிர்வாக அதிகாரிகள்தான் ஆலயச் சொத் துக்களைப் பாதுகாக்கும் டிரஸ்டி ஆவர். அவர் கள்தான் ஆலயங்களை நல்ல முறையில் கண் காணிக்க வேண்டும். ஒவ்வொரு நிர்வாக அதிகாரியும் தமது கோயிலுக்குச் சொந்தமான நிலங்களையும் இதர உடைமைகளையும் அறிந்து இருக்க வேண்டும். சட்ட விதிகளின்படி செயல் பட்டு வருமானத்தைப் பெருக்க வேண்டும். அதிகாரிகள் இயந்திரத்தைப் போல் இருக்கக் கூடாது. ஒவ்வொரு நிர்வாக அதிகாரியும் அந்தந்த இடத்திற்குச் சென்று நேரிடையாக ஆட்களைச் சந்தித்துக் குறைகளைக் கேட்டறிந்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும். ஆலயத்தையும் ஆலயச் சொத்துக் களையும் பாதுகாக்க வேண்டும். அறங்காவலர் களை நியமிப்பதற்கு அரசாங்கம் வேண்டிய நட வடிக்கை எடுத்து வருகிறது. அதிகாரிகள் அர சாங்கத்திற்குத் தங்கள் முழு ஒத்துழைப்பைத் தந்து அறங்காவலர் நியமனம் செய்வதற்கு வேண்டிய முறையில் தங்கள் விபரங்களைத் தர வேண்டும். அறங்காவலர் நியமனம் செய்வ தற்கு 'அறங்காவலர் நியமனக் குழு' ஏற்பாடு செய்திருக்கிறோம். பொது மக்களிடமிருந்து புகார் வராத வண்ணம் அதிகாரிகள் தமது விவரங்களையும் குறிப்புக்களையும் தந்து அரசாங் கத்திற்கு ஒத்துழைப்புத் தர வேண்டும். எங்க ளுடைய கருத்துக்களையும், செய்ய வேண்டிய பணிகள் குறித்தும் அவ்வப்போது ஆணையர் அவர்கள் சுற்றறிக்கை மூலம் உங்களுக்குத் தரு கிறார். பொதுவாக ஆலயச் சொத்துக்களைப் பாதுகாத்து ஆலயத்திற்குத் தரிசனம் செய்ய வரும் சேவார்த்திகளுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் குறிப்பாகக் குடிநீர் வசதி, குளிக் கும் வசதி மற்றும் கழிவறை வசதி முதலியவை களைச் செய்து கொடுக்க வேண்டும். ஆலய தரிசனம் செய்து முடிந்தவுடன் ஒவ்வொரு சேவார்த்திக்கும் ஒரு ஆன்மீகத் திருப்தி ஏற் படும் வகையில் ஆலய தரிசனம் அமைய வேண்டும். இன்று உங்கள் மத்தியில் எனது கருத்துக்களைக் கூறுவதற்கு இந்தச் சந்தர்ப்பம் கொடுத்த உங்கள் அனைவருக்கும் நன்றி கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

வணக்கம்.

இக்கூட்டத்தின் துவக்கத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களை வரவேற்றுப் பேசிய திரு யு. சுப்ரமணியன், ஐ.ஏ.எஸ்., ஆணையர், இந்து சமய அறநிலையத் துறையின் நிர்வாகத்தினைச் சீர்படுத்துவதற்காக,

திருக்கோயில்களில் நடைபெறும் பூசை, விழாக்கள் போன்ற நிரந்தர காரியங்கள், திருக்கோயில்களின் பராமரிப்பு,

திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்களின் சௌகரியத்திற்காகச் செய்யப்படும் வசதிகள்,

திருக்கோயில்களின் சகல சொத்துக்களைப் பாதுகாத்து வருவாய் பெறுவதற்கான வகை யில் பயன்படுத்துவது,

திருக்கோயில்களுக்கு வரவேண்டிய வரு வாய்களைத் துரிதமாக வசூல் செய்வது, திருக் கோயில்களிலிருந்து இத்துறைக்குக் கொடுக்க வேண்டிய தொகைகளைக் கொடுப்பது,

திருக்கோயில்கள் சம்பந்தப்பட்ட வழக்கு கள்,

ஆகிய ஐந்து முக்கிய தலைப்புகளில் சில மாதங் களாக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை சுருக்கமாகக் குறிப்பிட்டு, இத்துறையின் ஒவ்வொரு மட்டத்திலும் உள்ள அலுவலர்களின் வேலைகளைப் பட்டியலிட்டு நிர்ணயம் செய்து, அவரவர் வேலையைச் செவ்வனே நிறைவேற்றுவ தற்கான முறைகளையும், பல சுற்றறிக்கைகளின் மூலம் வலியுறுத்தப்பட்டுள்ளது என்று கூறினார்.

இந்த வேலைகளை நிறைவேற்றுவதில் காணப்படும் குறைகளையும் எடுத்துச் சொல்லி, விறுவிறுப்போடும் ஊக்கத்தோடும் குறைகள் ஏற்படாதவாறு செயல்பட்டு, நிறைவேற்றப் படவேண்டிய வேலைகளைச் செய்து முடித்துக் காண்பிப்பதுதான் ஒவ்வொரு அலுவலரின் கடமையும், பொறுப்பும் ஆகும் என்றும், அவர் கள் செய்கின்ற வேலைகளின் முன்னேற்றத்தை ஆய்வு, காலமுறை அறிக்கைகள் மூலம் கண் காணிக்கும் அரசு அலுவலக நடைமுறையினை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தையும் எடுத்துக் கூறினார்.

முடிவில், அவரவர் கடமையையும், பொறுப்பையும் திறமையோடும், நேர்மையோ டும் நெறியோடும், ஒழுக்கத்தோடும் நிறை வேற்றி, மாண்புமிகு முதல் அமைச்சர், மாண்பு மிகு அறநிலையத் துறை அமைச்சர் மற்றும் பொதுவாக அமைச்சரவை எதிர்பார்க்கும் தூய் மையான, திறமையான நிர்வாகத்தினை இத் துறையில் ஏற்படுத்த வேண்டுமென்றும் அலுவ லர்களை ஆணையர் கேட்டுக் கொண்டார். *

தமிழ்நாடு, அவசரச் சட்டம் எண் 10/78ன்படி அறநிலைய ஆட்சித் துறையின் கீழ்ச் சேர்க்கப்பட்ட ஆலயங்களின் விவரம்

(உதவி ஆணையர்கள் வாரியாக)

உதவி ஆணையர்கள்	46(I)	46(II)	(46III)	கூடுதல்
1. சென்னை	86	14	15	115
2. காஞ்சிபுரம்	51	7	12	70
3. வேலூர்	55	2	3	60
4. கடலூர்	86	5	8	99
5. திருச்சிராப்பள்ளி	116	7	10	133
6. புதுக்கோட்டை	27	2	3	32
7. தஞ்சாவூர்	107	7	3	117
8. கும்பகோணம்	108	18	16	142
9. நாகப்பட்டினம்	104	17	11	132
10. மதுரை	74	3	8	85
11. இராமநாதபுரம்	54	7	14	75
12. திருநெல்வேலி	83	26	8	117
13. நாகர்கோயில்	36	3	2	41
14. கோயம்புத்தூர்	69	8	5	82
15. ஈரோடு	49	5	6	60
16. சேலம்	58	2	5	65
கூடுதல்	1,163	133	129	1,425

பல்வேறு ஆண்டுகளில் அறநிலைய ஆட்சித் துறையின் படிப்படியான வளர்ச்சி நிலை

ஆண்டு	நிறுவனங்களின் எண்ணிக்கை
1951	5,046
1952	5,125
1953	5,290
1954	5,350
1955	5,527
1956	5,936
1957	5,997
1958	6,251
1959	6,347
1960	6,398
1961	6,452
1962	6,543
1963	6,732
1964	6,916
1965	7,217
1966	7,325
1967	7,654
1968	8,104
1969	8,132
1970	10,239
1971	10,040
1972	10,865
1973	13,027
1974	15,068
1975	20,246
1976	23,358
1977	23,507
1978	

கனவு நிலை

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்

நமக்கு விழிப்பு நிலை, கனவு நிலை, உறக்க நிலை என்று மூன்று நிலைகள் உண்டு. சாக்ரம், சொப்னம், சுழுப்தி என்பார்கள். கனவு என்பது மிகவும் சிந்தனைக்குரிய ஒன்று. கனா சாஸ்திரம் என்று வியாழ பகவான் எழுதியிருக்கிறார். கனவதிகாரம் ஒன்று பாம்பன் அடிகளாரும் எழுதியிருக்கிறார்கள்.

கனவிலே மூன்று வகை உண்டு. ஒன்று பகலிலே கண்டவை—விட்டும் தொட்டும் வரும். ஒன்று பித்த மயக்கத்தால் வருவது. ஒன்று எதிர்காலத்தில் விளையக்கூடிய நிகழ்ச்சிகளை விளக்குவது.

இந்தத் தூல உடம்புக்குள் இன்னும் ஓர் உடம்பு இருக்கிறது. அது சூட்சும சரீரம் எனப்படும். அதற்குக் கண் காது முதலிய அவயவங்கள் உண்டு. மெல்லிய பட்டுச் சட்டைக்கு மேல் கோட்டுத் தரித்திருப்பதுபோல், ஆன்மா சூட்சும சரீரத்துக்கு மேல் இந்தத் தூல சரீரத்தைத் தாங்கிக் கொண்டிருக்கிறது. சூட்சும சரீரந்தான் கனாவில் தொழிற்படுவது. முதல் சாமத்தில் கண்ட கனா ஓர் ஆண்டில் பலிக்கும். இரண்டாம் சாமத்தில் கண்ட கனா எட்டு மாதத்திலும், மூன்றாம் சாமத்தில் கண்ட கனா மூன்று மாதத்திலும், நாலாம் சாமத்தில் கண்ட கனா நாற்பது நாட்களிலும் பலிக்கும். முப்பது அல்லது பத்து நாட்களிலும் பலிப்பதுண்டு.

பூமி சம்பந்தமான கனா, நீர் சம்பந்தமான கனா, நெருப்புச் சம்பந்தமான கனா, காற்றுச் சம்பந்தமான கனா, ஆகாய சம்பந்தமான கனா என்று பல வகையான கனவுகள் உண்டு. இன்ன இன்ன கனாக் கண்டால் இன்ன இன்ன பலன் என்று கனா நூல் விரிவாக விளம்புகிறது.

ஞானேந்திரியங்கள் 5, கன்மேந்திரியங்கள் 5, சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற புலன்கள் 5, வசனம், கமனம், தானம், விசர்க்கம் ஆனந்தம், என்ற கன்மங்கள் 5, வாயுக்கள் 10, மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற அந்தக்கரணங்கள் 4, புருடன் 1, ஆக 35. இந்த 35 தத்துவங்களுடன் புருவ நடுவில் ஆன்மா நின்ற நிலை சாக்கிரம். வாயுக்கள் 10, புலன்கள் 5, வசனாதிகன்மங்கள் 5, அந்தக்கரணம் 4, புருடன் 1 ஆக 25. இந்த இருபத்தைந்து தத்துவங்களுடன் ஆன்மா கண்டத்தில் நின்ற நிலை கனவு. பிராணன் 1, சித்தம் 1, புருடன் 1, ஆக மூன்று. இந்த மூன்று தத்துவங்களுடன் இதயத்தில் ஆன்மா நிற்கும் நிலை உறக்கம் (சுழுப்தி).

இனி, கனவுகளில் சிலவற்றின் பயன்களைக் கூறுகிறேன். பாம்பு தேள் சிலந்தி இவைகளைக் கண்டால் வெற்றி உண்டாகும். தவளை முதலியவற்றைக் கண்டால் நன்மை. பூனையைக் கண்டால் தீமை. தங்கத்தைக் கண்டால் சுபம். வெள்ளியைக் கண்டால் எண்ணிய கருமம் கெடும். ஈயத்தைக் கண்டால் விவாதம். இரும்பைக் கண்டால் நன்மை. இறந்துவிட்ட பெரியோர்களைக் கண்டால் காரிய சித்தி. மயானத்தைக் கண்டால் நல்லது.

நூல்களில் கனவு நிலைகளைப் பற்றிய செய்திகள் வருகின்றன. அவற்றுள் சிலவற்றை இங்கே தருகிறேன்.

(1) சிந்தாமணி என்ற பழம் பெரும் நூலில் சச்சந்தனுடைய மனைவி விசயை பூங்கொத்துக்கள் நிறைந்த அழகிய அசோக மரம் அடிபெயர்ந்து வீழ்ந்ததாகவும், அதன் அடியில் ஒரு முளை தோன்றியதாகவும் கண்டாள்.

தொத்தணி பிண்டி தொலைந்தற வீழ்ந்ததென்
முத்தணிமாலை முடிக்கிட னாக
ஒத்ததன் தாள்வழி யேமுளை யோங்குபு
வைத்தது போல வளர்ந்ததை யன்றே

இந்தக் கனா நிலையை அவள் தன் கணவனிடம் கூறி, ''அதற்கு என்ன பயன்?'' என்று கேட்டாள்.

''அசோக மரம் வீழ்ந்தது எனக்கு அழிவு உண்டாகும் என்பதையும், பல மாலைகட்கு இடனாக ஒரு முளை தோன்றியது, பல மனைவியருடன் உன் மகன் சிறப்புறுவான் என்பதையும் குறிக்கின்றன'' என்று சச்சந்தன் தன் மனைவியிடம் கூறினான்.

(2) கேகய நாட்டில் வசித்த பரதர் தீய கனவுகள் கண்டார். ''என் தந்தை தலை மயிரை விரித்துக் கொண்டு அழுக்குத் துணியுடன் ஒரு மலையின் உச்சியிலிருந்து சாணம் நிறைந்த மடுவில் குதித்து நீந்தி விளையாடுவதாகக் கண்டேன். கைகளால் எண்ணெயை வாரிக் குடித்துக் கொண்டு அடிக்கடி உரக்கச் சிரித்துக் கொண்டிருந்தார். உடம்பில் எண்ணெய் பூசிக் கொண்டிருந்தார். எள்ளன்னத்தைத் தின்றுகொண்டு எண்ணெய் நிறைந்த கடலில் தலைகீழாக விழுந்து முழுகினார். கடல் வற்றியது. சந்திரன் விண்ணிலிருந்து விழுந்தான். எங்கும் இருள் மூடியது. பட்டத்து யானையின் கொம்பு துகளாகியது. தீ அணைந்

தது. பூமி வெடித்தது. மரங்கள் பட்டுப் போயின. மலைகளில் புகை கிளம்பியது. தயரதர் கரிய உடை உடுத்துக் கொண்டு இருப்பு ஆசனத்தில் அமர்ந்திருந்தார். கறுப்பு நிறமுள்ள பெண்களும், மஞ்சள் நிறமுள்ள பெண்களும் அவரைச் சுற்றி நின்று கொண்டு கை கொட்டிச் சிரித்தார்கள். சிவப்புச் சந்தனமும் சிவப்பு மாலையும் தரித்துக் கொண்டு கழுதைகள் பூட்டிய தேரில் அவர் அமர்ந்து தெற்கே சென்றார். இத்தகைய கொடிய கனவுகளைக் கண்டேன்'' என்று பரதர் கூறினார்.

(3) சுந்தர காண்டத்தில் காட்சிப் படலத்தில் திரிசடை கண்ட கனவைப் பற்றிக் கம்ப ராமாயணத்தில் வருகின்றது. ''அம்மா, ஜானகி, இப்போது நான் சில கனவுகள் கண்டேன். என் கனவுகள் பொய்யாக மாட்டா. பலிக்கக் கூடியவை.

எண்ணெய் முடிதொறும் இழுகி ஈறிலாத்
திண்ணெடுங் கழுதைபேய் பூண்ட தேரின்மேல்
அண்ணல்அவ் விராவணன் அரத்த ஆடையன்
நண்ணினன் தென்புலம் நவையில் கற்பினாய்.

''குற்றமற்ற கற்புடைய தாயே! என் பெரிய தந்தையாகிய இராவணன், சிவந்த ஆடையை உடுத்திக் கொண்டு, கழுதைகளும் பேய்களும் பூட்டிய தேரின் மீது ஏறித் தென் திசை சென்றதாகக் கனாக் கண்டேன். சுற்றமும் புதல்வர்களும் இராவணனைத் தொடர்ந்து சென்றார்கள். இராவணன் வீட்டில் வளர்க்கும் நெருப்பு அணைந்தது. இடி விழுந்து அழகிய அரண்மனை இடிந்தது. அரக்க மாதர்களின் தாலிகள் அறுபட்டு வீழ்ந்தன. மண்டோதரியின் கூந்தல் கீழே விழுந்தது. மேலும் அக் கூந்தலில் தீப்பிடித்து எரிந்து நாறியது. யானைகள் வாழும் காட்டில் புலிக் கூட்டங்களுடன் இரண்டு சிங்கங்கள் வந்து அரித்தன. அந்தக் காட்டில் வாழ்ந்த மயில் அந்தச் சிங்கங்களுடன் சென்றது.

ஆயிரந் திரிவிளக் கமைய மாட்டிய
சேயொளி விளக்கதொன் றேந்திச் செய்யவள்
நாயகன் தனிமனை நின்று நண்ணுதல்
மேயினள் வீடணன் கோயில் மென்சொலாய்

''ஆயிரம் திரிகள் எரிகின்ற சிவந்த விளக்கினை ஏந்திக் கொண்டு ஒரு பெண் இராவணனுடைய வீட்டிலிருந்து விபீஷணருடைய வீட்டிற்கு வந்ததாகக் கனாக் கண்டேன்''. இவ்வாறு இன்னும் பல கனா நிகழ்ச்சிகளைக் கூறினாள்.

(4) கந்த புராணத்திலும் இக் கனவு நிலையைப் பற்றிய செய்தி உண்டு. இந்திரன் மகனாகிய சயந்தன் வீர மகேந்திரபுரியில் சிறையில் கிடந்து இடர்ப்பட்டான்; அழுதான்; சிவபெருமானை வேண்டித் தொழுதான். அவனுடைய துயரைக் களையுமாறு, கந்த வேள் கருணையுடன் அவனுடைய கனவில் காட்சியளித்தருளினார்.

வீறு கேதனம் வச்சிரம் அங்குசம் விசிகம்
மாறி லாதவேல் அபயமே வலம் இடம் வரதம்
ஏறு பங்கயம் மணிமழுத் தண்டுவில் இசைந்த
ஆறி ரண்டுகை அறுமுகங் கொண்டுவேள் அடைந்
தான்

முருகப் பெருமான் ஆறுமுகம் பன்னிரு கரங்கள் அமைந்த திருவுருவுடன் கனவில் காட்சியளித்தருளினார்.

சயந்தன் இந்தத் தூல உடம்புக்குள் இருக்கிற சூட்சும உடம்பிலுள்ள கண்களால் கண்டு தொழுதான்.

தாதை யில்லதோர் பரமனைத் தாதையா வுடைய
கந்தன் ஏகியே யனையதன் உருவினைக்காட்ட
இந்தி ரன்மகன் உளப்படும் யாக்கையுள் இருந்த
முந்து கண்களால் கண்டனன் தொழுதனன் மொழி
வான்.

(5) பரமஞான அநுபூதிமானாகிய தாயுமானார் தம் கனவு நிலையை அருளிச் செய்துள்ளார். அவருடைய தலையின் மீது சிவபெருமான் திருவடி சூட்டியதாகக் கனவு கண்டார்.

மால்வைத்த சிந்தை மயக்கறஎன் சென்னிமிசைக்
கால்வைக்க வும்கனவு கண்டேன் பராபரமே.

மற்றும் ஒரு நாள்இறைவன் தோன்றிச் சின் முத்திரையைக் கரத்தால் காட்டி அருள் புரிந்தான்.

மைகாட்டு மாயை மயக்கமற நீகுருவாய்க்
கைகாட்ட வும்கனவு கண்டேன் பராபரமே
மண்ணீர்மை யாலே மயங்காதுன் கையால்
கண்ணீர் துடைக்கவும்நான் கண்டேன் பராபரமே.

(6) ஆண்டாளம்மையார் திருமாலை நினைந்து நினைந்து உள்ளம் நெகிழ்ந்து நெகிழ்ந்து வழிபட்டார். எம்பெருமாட்டியின் கனவில் அரங்கத்தில் அரவணையில் அறிதுயில் அமர்ந்த அரிமுகுந்தன் காட்சி தந்து அருளினார். அதனை அந்த அம்மையார் அமுதத் தமிழால் அருளிச் செய்தருளினார்.

மத்தளங் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழீநான்.

(7) திருநாவுக்கரசு சுவாமிகள் வேதாரண்யத்தில் தங்கியிருந்தபோது அவருடைய கனவிலே சிவபெருமான் சென்றருளி, ''நம் வாய்மூருக்கு வா'' என்று அருளிச் செய்தார்.

(8) திலகவதியாருடைய கனவிலே சிவபெருமான் தோன்றி, ''உன் தம்பி சமண சமயம் புகுந்தான் என்று நீ வருந்தற்க. அக்கவலையை ஒழி. இவன் முன்னமே முனியாக என்னை அடையத் தவஞ் செய்தான். அவனைச் சூலை வலியால் ஆட்கொள்வோம்'' என்று அருளிச் செய்தார்.

(9) திருவொற்றியூர்ச் சிவபிரான் சங்கிலி நாச்சியார் கனவில் தோன்றியருளினர்.

(10) அருணகிரிநாத சுவாமிகள் வயலூரில் கண்துயிலும் போது முருகவேள் கனவில் தோன்றி, நம் விராலிமலைக்கு வருக'' என்று அருள் புரிந்தார்.

கனவிலாள் சுவாமிநின் மயில்வாழ்வும்
கருணைவாரி கூரேக முகமும்வீர மாருத
கழலுநீப வேல்வாகு மறவேனே.

—திருப்புகழ்.

நால்வர் பாடல்

தவத்திரு குருகுலம் அழகரடிகள், மதுராந்தகம்

இயற்கைச் சமயம்:

நமக்கு எதிரில் உலகம் இருக்கிறது. அதைக் கொண்டுதான் அமைப்பு நிலைகளை நாம் அறிந்து கொள்ள வாய்ப்பிருக்கிறது. வேறு வாய்ப்பு எதுவும் இருப்பதாகத் தெரிய வில்லை. உலக இயற்கைப்படி இயற்கைகளைப் பலர் பல நாட்டிலும் ஆராய்ந்து இருக்கிறார் கள். அவ் வாராய்ச்சிகளை யெல்லாம் படிமுறை யில் வைத்து 24 சமய நெறிகளாக ஆன்றோர் பிரித்திருக்கிறார்கள். இவையெல்லாம் சேர்ந் ததே. இன்னும் சில உண்மைகளும் கூடியதே, முழுச் சமயமாகும். நாம் அதைச் சைவ சமயம் என்று பெயர் வைத்திருக்கிறோம்.

''சைவ சமயம்'' சமயங்கள் கடந்தது ; சமயத்துக்குச் சமயமாகவும், ''சமயங் கடந் தும்'' விளங்குகிறது. இது தாயுமானார் கருத்து.

''சைவ சமயமே சமயம், சமயாதீதப் பழம் பொருளைக்
கைவந்திடவே காட்டும்; இக் கருத்தை விட்டுப்
பொய்வந்திடச் சமயநெறி புகுதவேண்டா''

என்பது அவர் திருமொழி. நெறியும் துறையும் அதுவே. இப்படி இருக்கும் பழமையான சிவ நிலையில் 'சிவம்' என்னும் முழு முதற் கடவுள் பெயரில் சிறப்பாக வருகின்றது.

மூவகை உருவ நிலைகள் :

உலகத்தில் உருவமும் அருவுருவமும் அருவ மும் காண்கிறோம். நிலமும் நீரும் உருவங்கள். கண்ணுக்குத் தெரிகின்றன. கைக்குப் பிடிபடு கின்றன. தீ என்னும் சோதி அருவுருவத்தைச் சேர்ந்தது. உருவமாதலால் கண்ணுக்குத் தெரியும்; அருவமாயும் மறைந்திருக்கும். காற்றும் ஆகாயமும் கண்ணுக்குத் தெரியாத அருவங்கள்.

நிலமும் நீரும், உருவங்களிலேயே ஒன்றை விட ஒன்று மேலானவை. அப்படியே காற்றும் ஆகாயமும் அருவங்களில் ஒன்றை விட ஒன்று மேலானவை. இப்படி ஐந்தும் வரவர மேன் மையும் நுட்பமும் உயர்வும் வாய்ந்தவை. ஆகாயத்திலிருந்து நிலத்துக்கு வரும்போது வர வரப் பருமனாய் உள்ளன.

பருவரல்:

பருமனுக்கு வர வரத் துன்பங்கள் மிகுதி. அதனால் 'பருவரல்' என்னும் சொல் துன்பத் தை உணர்த்திற்று. இது சான்று; இதனால், நுட்பமாகப் போகப் போக இன்பம் மிகுதி யாய்க் கொண்டே இருக்கிறதென்பதும், ''அருத் தாபத்தி''யால் அறியலாம். ஒன்றை விட ஒன்று நுட்பமாகும்போது, அதன் பரப்பும் மிகுதியா கின்றது. எடுத்துக் காட்டாக, மிகப் பரும னுள்ள நிலம் ஒரு பங்கானால், அதனினும் நுட்பமாய் உயர்ந்த நீர் மூன்று பங்காயிருக் கிறது. தீ அதனினும் பரவலுடையது. காற்று அதனினும் பரவலுடையது. ஆகாயம் அதனி னும் பரவலுடையது. மேலும், மனம் முத லான உட்கருவிகள் இந்த ஐம்பூதங்களிலும் பரவுதலும் நுட்பமும் உடையது. அப்படியே 36 தத்துவங்களும் ஒன்றைவிட ஒன்று பரவலும் நுட்பமும் உடையன. இத் தத்துவங்களையெல் லாம் கடந்த முழுமுதல் அம்மையும் சிவமும் மிக மிக நுட்பமாய், எங்கும் பரவலாய் இருக்கு மென்பதில் தடையுண்டோ? உலக முழுதும் ஒரு ஒழுங்கில் நிகழ்வதனால், பேரறிவுடைய ஒன்று, கட்டாயம் இருக்க வேண்டும். இவ் வாறு துணிந்து முன்னோர் அதன் இயல்புகள் எப்படியிருக்கக் கூடும் எனவும் ஆராய்ந்து தெளிந்து, பேரின்பம் பெற அதன் கருத்து வழி ஒழுகி, அடியராதல் வேண்டுமென்றுந் துணிந் தனர்.

அத்தகைய சிவத்தின் இயல்பை அடைந் தால் 'இன்பம் மிகுதி' என்று சொல்லவும் வேண்டுமா? அதன் இன்பத்தை அதனால் 'பேரின்பம்'—வரம்பற்ற இன்பம் என்று பெரி யோர்கள் சொன்னார்கள்.

அவ்வாறு நுட்பத்தை அடைய அடையப் பரவுதலும் மிகுதியாக இன்பம் மிகுதலால் இப்படிப் பேரின்பம் பெற வழிகாட்டுவதே சமய நிலையாய் உள்ளது.

ஒடுக்கி நுணுகுதல் :

மேல் நுட்பத்தை அடையும்போது ஒன்றி னுள் ஒன்று ஒடுக்கமாய் எல்லாம் ஒடுங்கிப் பரவ லும் நுட்பமும் மிகுந்து, இன்பம் பெருகுகிறது.

இலக்கியம் என்பது ஐம்பொறிகளின் எழில் நிலேயைக் கூறுவது. விஞ்ஞானம் என்னும் அறிவியலும் ஐம்பொறிகளுக்கு அகப்பட்ட மண்ணையும் விண்ணையும் ஆராய்வதாய் இருக்கிறது. சமய நிலே ஒன்றுதான். மேலும் சென்று நுணுகி நுணுகி நுட்பமும் பரவலும் இன்பமும் உடையதாய் விளங்குகிறது. ''சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்ருகும்'' என்பது திருவாசகம்!

இங்ஙனம் நுட்பங் கொள்ளுதல் ஆகிய நிலே சமய நெறியாயிருத்தலால், மிகு நுட்பத்தை, கடைசி நுட்பத்தை முழு முதலே, எய்தி விட்ட சமய நெறி, சமயத் துறையாகவும் விளங்குகிறது. இந்நிலேயை இம்மையிலேயே, இவ்வுலக வாழ்க்கையிலேயே அடைய வேண்டுமென்பதுதான், சமயாசிரியர்களின் கொள்கை. அடைந்தவர்கள் 'சீவன் முத்தர்' எனப்படுவர்.

கோயில் நாகரிகம் :

நாகரிகமான இந் நுட்பச் சமய நெறியைக் கொண்டது இத் தமிழகம்! இதற்கு அடையாளம் இதன்கண் கோயில்கள் மிகுந்திருப்பதேயாம் ; இந்தியா தமிழகமாய் இருந்தபோது இந்தியாவின் பிற இடங்களிலும் கோவில்கள் அமைந்தன. தமிழகம் குறுகியபோது, குறுகிய காலத்திலிருந்து தமிழகத்தில் மட்டும் கோயில்கள் மிகுந்தன. முதலில் சிவபிரான் கோயில்களும், அடுத்துத் திருமால் கோயில்களும், அதன்பின் மற்றக் கோயில்களும் பெருகிவிட்டன. கோயில்கள் அருவம் அருவுருவம் உருவம் அமைந்தவை. திருமால் கோயில்கள் உருவம் அமைந்தவை. கருவறைகளேப் பார்த்தாலும் சுற்றுக்களேப் பார்த்தாலும் இவை விளங்கும். நின்ருன் இருந்தான் கிடந்தான் என்பது திருமாலின் உருவ நிலேகள். இவற்றிற்கு அப்பாற்பட்ட நிலே சிவத்தின் அருஉருவ நிலேகள்.

தமிழகத்தில் இங்ஙனம் நாகரிகம் மிகுந்து, நாகரிகம் மிகுந்ததன் அடையாளமாகச் சிவபிரான் திருக்கோயில்களும் மிகுந்து, சமய குரவர்களால் பாடலும் பெற்றுக் 'கோயில் நாகரிகம்' என்னும் 'தமிழ் நாகரிகம்' திகழ்கிறது.

பாடல் தலங்கள்:

சிவபிரானுக்கு அமைந்த ஆயிரக்கணக்கான கோயில்களிலும், சமயக் குரவர் நால்வர் பாடலுடையன 275 என்பர். இந்தியாவின் பிற இடங்களில் ஐந்தும், இலங்கையில் இரண்டுமாக நிற்க. மற்ற 268 தலங்களேயும் ஒரு காலத்தில், குருகுலத்தார் கண்டு வணங்கி இருக்கின்றனர்!

பாடல் பெற்ற தலங்களிலும், நால்வர் சமய குரவர் பாடலும் பெற்ற தலங்கள், அப்பர் சுந்தரர் சம்பந்தர் என மூவர் பாடல் பெற்ற தலங்கள், சம்பந்தர், அப்பர் என இருவர் பாடல் பெற்ற தலங்கள். சம்பந்தர் பாடல் மட்டும் பெற்ற தலங்கள் உள்ளன. இவ் வெல்லாவற்றிலும், சம்பந்தர் பாடல் பெற்றதானல், அப்பர் முதலியோர் பாடல் இல்லாதவையும் உண்டு ; அப்படியே அப்பர் சுந்தரர் பாடலுடையவை, மாணிக்கவாசகர் பாடல் மட்டும் உடையவை உண்டு.

இவற்றில் நால்வர் பாடலும் உடையவை திருக்கழுக்குன்றம் முதலிய சில தலங்களே. அவற்றிலும் இது மலேத் தலம். இறைவன் காதலிக்கும் தலம். மாணிக்கவாசகர் வைத்த திருவடித்தலம்.

சிவஞான பீடம் :

திருவடி வைக்கப்பட்டமையால், இதன் ஞான பீடமும் அமைக்க நினேவு. முன் ஆணையர் நால்வர் கோயிலுக்கு நால்வர் பேட்டையில் வித்திட்டார். இப்போதுள்ள ஆணையர் ஞான பீடத்துக்குத் திருப்பணி செய்வித்தால் நலமாயிருக்கும். பெரும் புண்ணியங்கள் உண்டாகும். நால்வரில் மாணிக்கவாசகர் ஞானத்துக்குரியவர். ஞானத்திலும் ஞானம் வாய்ந்தவர். இறைவனே நேரே கண்டவர். ஞான பீடம் என்னும் சிவஞான மடம் திருக்கழுக்குன்ற ஆதீனமாக அமைதற்குரிய இடம் திருக்கழுக்குன்றத்தில் திருவடிப்பேட்டை என்னும் தேசுமுகிப்பேட்டையில் உள்ளது. திருவருள் உதவுக.

சமயம் எனும் சொல்

இலகுறு சமயம் என்னும் எழிலியல் இறைமைச் சொல்லில்,
நிலேபெறு நிதிய வைப்பின் சிறப்பெலாம் நிகழ்த்தற் காமோ?
உலேவில்பொன் வெள்ளி மற்றும் உலகில்உள் பொருள்கள் எல்லாம்,
விலேமதித் திடற்கி டாகா, வியன்பெரு மாட்சித் தாமே!

—தமிழாக்கம், ந. ரா. முருகவேள்.

Religion ! What a treasure untold !
Resides in that heavenly word !
More precious than silver and gold !
Or all that this world can afford !

—William Cowper

சேரவாரும் செகத்தீரே

கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியார்

உலகம் பலவிதம்

உலகம் பலவிதம் ; உயிர்கள் பலவகை ; ஒன்றுபோல் மற்றொன்றில்லை ; ஒருவர் கொள்கை மற்றொருவர் கொள்வதில்லை . ஒருவர் உணவு மற்றொருவருக்கு விலக்கு. ஒரே நிலத்திலிருந்தே செடி கொடிகள் தழைக்கின்றன. எனினும் இதன் பூ வேறு, அதன் பூ வேறு ; இதன் கனி வேறு, அதன் கனி வேறு ; இதன் சுவை வேறு, அதன் சுவை வேறு. ஒரு தோப்பில் மாவும் புளியும் வளர்கின்றன. அதன் கனி இனிப்பு, இதன் கனி புளிப்பு. இதே மாதிரி எந்தச் சமயமும் எல்லாரையும் ஈர்ப்பதில்லை. எந்தப் பெரியாரும் எல்லாரையும் கவர்ந்தது இல்லை. ஒருவனின் உண்மை மற்றொருவனுக்கு இன்மையாகிறது. ஒரேசெடியின் இலைகளில்கூட வேறுபாடு காண்கிறது. வானில் கோடி கோடி விண்மீன்கள் பவனி செல்கின்றன ; என்றாலும் ஒரு விண்மீன் கூட்டத்திற்கும், மற்றொன்றிற்கும் வேறுபாடுண்டு.

மன வேறுபாடு

ஒரே உலகில் உயிரினங்கள் மண்ணிலும், தண்ணீரிலும் வாழ்கின்றன ; ஆனால் அவற்றிற்குத் தனித் தனி இனமுண்டு, செயலுண்டு. மனித மரபு ஒன்றே ; ஆனால் கருத்தும் கலாசாரமும் வெவ்வேறு. மனம் என்பது ஒரே தத்துவம். ஆனால் அதன் விருப்பு வெறுப்புகள் வெவ்வேறு. இசைக் கலை ஒன்றே ; ஆனால் பண்கள் பல, தாளங்கள் பல, குரல்கள் பல. தோடிக்கும் காம்போதிக்கும் பாகேஸ்ரீக்கும் பேஹாக்குக்கும், சீனக்காரன் மியாமியாவுக்கும், ஆங்கிலேயன் ஸோலோவுக்கும் எத்தனையோ வேறுபாடு உண்டு. இந்தக் காதுக்கு அந்தப் பாட்டுச் சுவைக்காது. கர்னாடக சிட்டாசுரம், கஜல் பாடகருக்குப் புரியாது.

சீரியர் துயரம் :

மக்கள் மதிக்கும் மகாத்மாவை ஒரு கோட்சே சுடுகிறான். அன்பு மயமான லூதர் கிங்கைச் சுடுகிறான் வெண் வெறியன். இந்தக் கன்னத்தில் அடித்தால் இன்னொரு கன்னமும் காட்டச் சொன்ன ஏசுநாதரைக் கொடிய சிலுவை ஏற்றினர் பகைவர். அல்லாவுக்கே ஆட்பட்ட நபி நாயகத்தைக் கல்லெறிந்து துரத்தினர் குரேசியர். தூய்மையும் வாய்மையுங் கொண்ட ஐரதுட்டிரருக்கு வாள் குத்து ; தயவே வடிவான தயானந்தரையும் ஞானச் சுடரான சங்கரரையும் நஞ்சூட்டிக் கொன்றனர் நயவஞ்சகப் பகைவர். உலகைத் திருத்த வந்த பெரியாருக்கெல்லாம் ஆபத்து காத்திருந்தது. எந்தப் பெரியாரும் முழு மகிழ்ச்சியுற்றதில்லை. எவர் மனமும் முழு நிறைவுற்றதில்லை. ''சேர வாரும் செகத்தீரே'' என்னும் தாயுமானம் எங்கும் முழங்குகிறது. ''நான் கண்ட இன்பம் பெறுக இவ் வையகம்'' என்று மூலயோகி பாடுகிறார். இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்ற அப்பருக்கு வந்த இடர்கள் எத்தனை. வேதம், கீதை, பைபிள், குரான், குறள், யோக சித்தி எல்லாம் உள்ளன. விஞ்ஞான யுகத்தில் அச்சுப் பொறிகள் நூல்களை அடித்துக் குவிக்கின்றன. நாலணாவுக்குப் பைபிளும் குறளும் வாங்கலாம். கீதை வாங்கலாம். ஆனால் இவற்றில் பத்து வரியாவது பயின்று நிற்பவர் எத்தனை பேர்? ஏசு நாதர் மலையுபதேசத்தை உணர்பவர் எத்தனை பேர்? அவர் சமயம் பரவிய நாடுகள் இன்று அணுக்குண்டு, (நூட்ரன் குண்டு), குவித்து உலகப் போரைத் தூண்டுகின்றன. வீட்டுக்கு வீடு, தெருவுக்குத் தெரு, நாட்டுக்கு நாடு, மதத்துக்கு மதம், மடத்துக்கு மடம், மன வேறுபாடு, இனவேறுபாடு, பித்தம், பிணக்கம்-இணக்கம் எங்கே?

நமது தமிழ்மொழி

இத்தனை வேறுபாடுகளுள்ளும் ''சேரவாரும் செகத்தீரே''; பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும், எல்லாரும் இன்புற வாரீர்'' என்று தீங்குரல் எழுப்புகிறது நமது தமிழ் மொழி. தமிழ்க் காவியங்கள், உலகெலாம், உலகம் யாவையும், ஒன்றே குலம் ஒருவனே தேவனும், யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று பண் மிழற்றுகிறது. பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் என்று உறுதி கூறுகிறது. சமஸ்கிருதத்தில் உள்ள நாலு வேதமும் ''சேர்ந்து செல்க, சேர்ந்து வாழ்க'', மனம் ஒத்து இயற்றுக'' (ஸம்கச்சத்வம், ஸம்வதத்வம், ஸம்ஞமனும் ஸிஜானதா) என்கிறது. ஆனால் எப்படியோ சாதி என்ற இடர்க்கட்டை இடையே புகுந்து கலாம் விளைக்கிறது. சாதி என்ற மொழி வேதத்தில் இல்லை. கீதையில் இல்லை, திருக்

குறளில் இல்லை, திருவாசகத்தில் வருகிறது. மணிவாசகர் வழி காண்கிறார் :

சாதி குலம் பிறப்பென்னும்
சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை
அல்லறுத்து ஆட்கொண்டு
பேதைகுணம் பிறர் உருவம்
யான் எனதென் உரைமாய்த்துக்
கோதில் அமுதா னானைக்
குலவு தில்லை கண்டேனே''

''இந்தப் பாசுரத்தை நான் ஐரோப்பியர் கூட்டத்திற்கு மொழி பெயர்த்தேன். பாடினேன், பியானோவும் தொடர்ந்தது.

Caught in the Whirlpool of
Caste clan and pedigree
This helpless slave-dog
Suffered a good lot
I saw Him in the luminous Tillai
He was to me a spotless nectar
He chose me for His grace
He rooted out my misery,
He gave a death blow to ignorance
To otherness and I-and-mineness !

உலகம் எல்லாம் சேர்ந்து வாழும் வழி இது தான்.

என்னது யான் என்னலற்றோர்
எங்கிருந்து பார்க்கினும் உன்
சந்நிதியாம் நீ பெரிய
சாமீ பராபரமே

எனது, யான், எனது சாதி, என் மடம், என் மதம், என் சாமி, என் புகழ், என் உடைமை என்னும் ஆசையான பற்றுள்ள மட்டும் இறைவன் அருள் எப்படி வரும்? திருவருள் இன்றி ஆன்ம நேய ஒருமை வராது ; அஃதின்றி சாதி குலம், பிறப்பு வேறுபாடுகளும் தற்போதமும் எப்படி நீங்கும்? ஆதி சங்கரரும் சாதி குலம் கோத்திரம் ஆகிய மாசுகளை ஒழி. உள்ளத் தானகிய கடவுளை ஒன்றுபட்டு நினை என்கிறார். அந்தோ, அந்தோ! கேட்பது யார்? நடப்பது யார்?

சீவன் சிவமாகும் நிலை

எனது யான் எனும் ஆசையை யடக்கி
இருவிகற் பற்றவர் யாவர்
தனகன வாழ்வின் சாம்பலைக் கண்டு
சகவிப் பறிந்தவர் யாவர்
மனதினை வென்ற மாசிலார் யாவர்
மமதையை மாற்றினர் யாவர்
எனதிரு கரத்தால் அவரடி பிடித்தே
இறைஞ்சலின் இன்பமொன் றுளதோ?

இத்தகைய தூய சிவருள் திருவருள் தோன்றிச் சித்தமலம் அறுவித்துச் சிவமாக்குவது உண்மை. இந்த நிலை வந்ததுமே, 'சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரப் பொய்களிலே தட்டழிந்து அமைதி கெட்டழிந்து போகாத சமநிலை, சன்மார்க்க நிலை எய்தும்.

இன்ப நிலை

அப்போதுதான் அன்பும் அறமும் பண்பும் பயனும் நிரம்பி, வையத்தில் வாழ்வாங்கு வாழலாம். அந்த வாழ்விலேதான் அமைதியின் பம் வரும்.

''இன்பத்துள் இன்பம்
எனைத்திலும் கட்டின்மை;
துன்பத்துள் துன்பம் தொடர்பு''

என்றும் இன்பமான சிவவுணர்வுடன் சீவன் வாழ்ந்தாலே, பாசம் நீங்கிப் பதியறிவு மலர்ந்தாலே, கட்டில்லாத விடுதலை வாழ்வு எய்தும், அச்சம் ஒழியும் ; அருளன்பு பொழியும். அத்தகைய வாழ்வைப் பெற்ற திருநாவுக்கரசர் வீறு கொண்டு பாடுகிறார். பாடிப் பாடிப் பின்பற்றுவீர்! பிறகு நடமாடும் கோயில்கள், படமாடும் கோயில்களில் ஒரே மக்கள் கூட்டமாகக் கூடலாம். பாடலாம், ஆடலாம்.

''நாமார்க்கும் குடி அல்லோம்
நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம்
நடலை இல்லோம்
ஏமாப் போம்; பிணியறியோம்
இன்பமே எந்நாளும்
துன்பம் இல்லை''.

இந்தப் பாசுரத்தை ஆங்கிலத்திலே ஐரோப்பியர் முன் பாடினேன்.

Subjects we are to none
Death we fear not
Hell we suffer not
Weaklings we are not
Disease we know not
Serfs we are to none
We enjoy lasting bliss
Misery is not for us
We are servitors
Of the unique king
Shankara who is bound to none!

இந்த வீர உணர்வுள்ள நாட்டை யார் அடிமை யாக்க முடியும்? என்றனர் வெண்ணாட்டார்.

கோயிலில் ஒற்றுமை

உலகம் கோயில்; உயிர்த்தொகை கடவுள்
எல்லா வுயிர்க்கும் இறைவன் ஒருவனே
எல்லா வுடலும் இறைவ னாலயமே.

சேரவாரும் செகத்தீரே. எல்லாரும் இன்புற்று இருப்பதுவே சமயம் என்று எக்காளம் புரிவது தமிழ்க் கலை. தமிழர் பண்பாடு. எல்லாரும் ஒரே மனித சங்கமாகச் சேர்ந்து ''அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு'' என்று பாடும் பொதுமன்றம் திருக் கோயிலே. எல்லா நாயன்மாரையும், ஆழ்வார்

களையும் சாதி இன வேறுபாடில்லாமல் கோயிலில் வைத்து மதிக்கிறோம். இந்த அழகிய கோயிற் கலை நாட்டிலே பரவுக!

திருவிழாத் தேர்

பூரியில் சைதன்யர் இருந்தார். அதன் மன்னன் பிரதாப ருத்திரன் மந்திரியை விட்டு அவரை அழைத்துப் பார்த்தான். சைதன்யர் அசையவில்லை. தேர்த் திருநாள் வந்தது; சைதன்யர் தேரோடும் தெருவை நீவத் தொடங்கினர். மன்னன் பிரதாப ருத்திரனும் அரசுடைகளைக் களைந்து இடுப்புத் துண்டுடன் தெருக் கூட்டினன். இருவர் துடைப்பமும் கூடின. அப்போது அரசன் சைதன்யரைக் காண நேர்ந்தது. இருவருக்கும் அன்பு பிறந்தது. இருவரும் அருகேயுள்ள தோட்டத்திலே சேர்ந்தனர், உணர்ந்தனர், அறிந்தனர், அகம் மகிழ்ந்தனர். கோயிலும் தொண்டும் மக்களை ஒன்று சேர்ப்பன. திருவிழாத் தேரை எல்லாரும் வடம் பிடித்து இழுப்பது காண்க.

ஆன்மநேய ஒருமை

திருப்பாவையும் திருவெம்பாவையும் ''உற்றோமே யாவோம் உனக்கேயாம்'' என்பதையே பல்லவியாகக் கொண்டன. சாத்திரம் கோத்திரம் சாதிச் சழக்குகளெல்லாம் தீர, உள்ளம் உள்ளத்தானுடனே ஒன்றுபட வேண்டும். அதுதான் ஆன்மநேய ஒருமை. நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து, நெகிழ்ந்து அன்பே நிறைந்த உள்ளத்திலே, கள்ளத்தனமான ஆசை ஆணவ மனவேறுபாடுகளும் இனவேறுபாடுகளும் எப்படித் தோன்றும்? அப்பர் அறிந்து சொல்லுகிறார் சிந்தியுங்கள்.

ஏதும் ஒன்றும் அறிகில ராயினும்
ஓதும் அஞ்செழுத்தும் உணர்வார்கட்குப்
பேதம் இன்றி அவரவர் உள்ளத்தே
மாதும் தாமும் மகிழ்வர் மாற்பேறரே

ஈர அன்பினர் யாதும் குறைவிலா வீரர். அன்பின் வழியது உயிர்நிலை. நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே புக்கு நிற்கும் புண்ணியனை நினைப்பவர்க்கு அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை. இறைவனையே நினைத்து அவனே அனைத்தும் என்று உணர்வார்க்கு இன்பமே; எந்நாளும் துன்பமில்லை. இந்த உணர்வு நிலைபெறுமாறு நித்தம் எம்பிரானுடைய கோயில் புகுதல். (உள்ளக் கோயில் புகுதல்) ஒரு சிறந்த சாதனமாகும். சேரவாரும் செகத்தீரே!

கடவுளுணர்ச்சியும் வழிபாடும்

''கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக, என்னுடைய ஒரே சமயமாக, மனித நலக் கோட்பாடே இருந்து வந்தது. 'மனிதன் அறிவை வழிகாட்டியாகக் கொண்டு நடந்து வந்தால், அதுவே அவனுக்குப் போதும்.' 'அறிவியல் முன்னேற்றமடைதல் ஒன்றே, தானாக ஒரு சிறந்த உலகத்தைக் கொண்டு வரும்' என்ற நம்பிக்கை எனக்கு இருந்து வந்தது. ஆனால், இந்த 20ஆம் நூற்றாண்டின் உலகாயத முன்னேற்றங்களையும், கடவுள் இன்றி வாழ்ந்து வருகின்ற நாடுகளின் அழி செயல்களையும் பார்த்த பிறகு, வெறும் மனித நலக் கோட்பாடு மட்டும் போதாது; மனிதன் தான் தப்பிப் பிழைத்து உயிர் வாழ்தல் ஒன்றற்கே கூட, தனக்குப் புறம்பாகத் தன்னைவிடப் பெரியதாக உள்ள ஒரு பேராற்றலுடன் தொடர்பு கொள்ள வேண்டியவனாக இருக்கிறான் என்பதனை, நான் இப்போது மிகவும் தெளிவாக நன்குணர்ந்து கொண்டுவிட்டேன். அதனால்தான், நான் மீண்டும் கிறித்தவ சமயத்திற்குத் திரும்பி விட்டேன். இயேசு பெருமான் எளிய முறையிலும், தெளிவான நிலையிலும், கற்பித்தருளிய கடவுள் உணர்விலும், கடவுள் அன்பிலும், யான் மீண்டும் சென்று சேர்தலை விரும்புகின்றேன்'' என்று சீன நாட்டுப் பேரறிஞராகிய லின் யூ டாங் கூறியிருப்பது, ஒரு வகையில் நம்முடைய மாணிக்கவாசகப் பெருமான் இறைவனை ''வாழ்முதல் ஆகிய பொருள்'' என்று குறிப்பிட்டு அருளியதின் சிறப்பையும் உண்மையையும் தெளிவுற விளக்குகின்றது எனலாம். மனித குல வாழ்க்கை நலத்திற்குக் கடவுளுணர்வும், வழிபாடும் மிக மிக இன்றியமையாதவையாக உள்ளன என்றே, பேரறிஞர்கள் பலரும் கருதுகின்றனர்.

—தமிழாக்கம், ந. ரா. முருகவேள்

"For over 30 years my only religion was humanism ; the belief that man, guided by reason, was sufficient unto himself ; that progress only in knowledge would automatically bring a better world. But, having witnessed the advances of 20th century materialism, and the doings of nations living without God, I am now convinced that humanism is not enough — that man, for his very survival, needs contact with a power outside and greater than himself. And that is why I have returned to Christianity. I wish to re-enter that knowledge and love of God which Jesus taught with such clarity and simplicity."

—DR. LIN YU-TANG,
"*My Steps Back to Christianity*"

இருவகை அழகு

''செந்தமிழ்ச் செல்வர்''

திரு கி. வா. ஜகந்நாதன், எம்.ஏ.

திருஞான சம்பந்தர் தென் திருமுல்லை வாயிலுக்கு வருகிறார். அந்தக் குழந்தை பிரபஞ்சம் முழுவதையுமே அழகாகப் பார்க்கும் இயல்புடையது. பொதுவாக இளங் குழந்தைகள் எதைப் பார்த்தாலும் ஆவலோடு பார்க்கும். ரெயில் வண்டியில் போகும்போது நாம் ஏதோ ஒரு நாவல் புத்தகத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு படித்துப் பொழுது போக்குவோம்.

ஆனால், குழந்தையோ பலகையின் ஓரத்தில் இடம் வேண்டுமென்று முரண்பிடித்து உட்கார்ந்து, திறந்த புத்தகமாகிய வெளிக் காட்சிகளைப் பார்த்துச் சுவைத்துக் கொண்டிருக்கும். முள் வேலியைக் கண்டும் களிக்கும்; அதில் படர்ந்த முல்லைக் கொடியையும் மலரையும் கண்டு களிக்கும். எல்லாம் அதற்குப் புதுமை.

ஞானசம்பந்தக் குழந்தையும் அப்படித்தான் பார்க்கிறது. ஒரு தலத்துக்குப் போனால் அங்கே திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவனைக் கண்டு இன்புறும்; எம்பெருமானின் அங்க அடையாளங்களை ஊன்றிக் கவனித்து அவற்றின் அழகிலே சொக்கி நிற்கும். கோயிலுக்கு வெளியில் ஊரிலும் ஊர்ப் புறத்திலுள்ள சோலைகளிலும் வயல்களிலும் உள்ள இயற்கையழகையும் கண்டு களித்துக் கவி பாடும்.

தென் திருமுல்லைவாயில் சோழ நாட்டில் சீகாழிக்கு அருகில் உள்ளது. அங்கே சென்று வழிபட்ட போது இறைவனையும் தரிசித்தார்; இயற்கையையும் கண்டு களித்தார். அவருடைய உள்ளம் இந்த இருவகைக் காட்சியாலும் நிரம்பி இன்பப் பொங்கலிடுகிறது. நாமாக இருந்தால் அந்த அழகைச் சொல்ல முடியாமல் திணறுவோம். சம்பந்தப் பெருமானே நற்றமிழ் வல்லவர் ; அற்புதமான கவிதை பாடுபவர். அவர் உள்ளத்தே தேங்கியிருந்த அழகு வெள்ளம் கவிதை மடை வழியாகப் பாய்கிறது.

இறைவனுடைய திருக்கழுத்தைக் காண்கிறார். அது நீலகண்டம். ஆலகால நஞ்சை இறைவன் உண்டு அதைத் தன் கண்டத்தில் வைத்திருக்கிறான். 'கறை நிறுத்திய கண்டன்' அவன். அந்தக் கண்டத்தைத் தேவர்கள் கண்டால் பழைய நினைவு வரப்பெற்று அஞ்சுவார்கள். நல்ல வேளை! இறைவன் அதைத் தன் கழுத்தில் சிறைப்படுத்தி விட்டதனால் நாம் உயிர் பிழைத்தோம்' என்று ஆறுதல் பெறுவார்கள்.

ஆனால் உண்மையை உணர்ந்த புலவர்கள் இறைவனுடைய கருணையை அந்த நீலகண்டத்தில் காணுவார்கள். திருமேனி முழுவதும் சிவப்பாக உள்ள இறைவன் திருக்கழுத்தில் அந்தக் கறுப்பு நீலமணி போல அழகாக இருக்கிறது.

''கறை மிடறு அணியலும் அணிந்தன்று''

என்று புறநானூற்றில் பெருந்தேவனார் பாடுகிறார். அந்தக் கறுப்பு, இறைவன் திருக்கழுத்தை அழகு செய்கிறதாம். 'அணியலும் அணிந்தன்று' என்று அழுத்தமாகச் சொல்கிறார்; மிக்க அழகைத் தருகிறது என்பது பொருள். 'போயே போய்விட்டான்' என்று நாம் சொல்கிறோம். அவன் நிச்சயமாகப் போய்விட்டான் என்று அழுத்தம் கொடுக்கவே அப்படிச் சொல்கிறோம். அவ்வண்ணமே ''அணியலும் அணிந்தன்று'' என்பதற்கு நிச்சயமாக அழகு செய்கிறது என்று பொருள் கொள்ள வேண்டும்.

அந்த விடம் தோன்றிய போது தேவர்கள் நடுங்கினர். யாவரும் அதன் பக்கத்தில் போக அஞ்சினர். ''ஒருவரும் உண்ணாத நஞ்சு'' என்று இளங்கோவடிகள் பாடுவார். அந்த நஞ்சை உண்டான் இறைவன். ''தலைவிதியே'' என்று உண்டான்? ஆவலோடு உண்டான். 'நம்முடைய குழந்தைகள் பிழைக்க வேண்டுமே!' என்ற கருணை உள்ளத்திலே பொங்க அதை உண்டான். அதன் கரிய நிறம் அந்தக் கழுத்திலே நன்றாகத் தெரிகிறது. அது புதிதாக வந்த நிறம். இதை ஞானசம்பந்தர் சொல்கிறார்.

''துளி மண்டி உண்டு நிறம் வந்த கண்டன்''

நஞ்சின் துளியைக் கருணை மிகுதியால் உண்டு, அதன் நிறம் புதிதாக வந்த திருக்கழுத்தை உடையவன் என்பது பொருள். ஆலகாலவிடம் எந்த அளவில் இருந்தது? நமக்குத் தெரியாது. தேவர்களைக் கேட்டால், அடேயப்பா! அது மலை போல அல்லவா பூமிக்கும் வானத்துக்கும் பரந்து நின்று பயமுறுத்தியது! என்று இப்போது சொல்லும்போது கூட அஞ்சிக் கொண்

டே சொல்வார்கள். இறைவனுக்கு அது ஒரு துளியாகத்தான் இருந்தது. தேன் துளியை மிகவும் ஆவலோடு எளிதில் உண்டது போல உண்டுவிட்டான். அதனால் அதைத் துளி என்கிறார் தமிழ் விரகர்.

'கழுத்திலே இயற்கையாகவே கறுப்பு மச்சம் இருக்கிறதோ?' என்று ஐயுற வேண்டாம்; அது புதிதாக வந்த கறுப்புத்தான் என்று தெரிய வைக்கிறார் சம்பந்தர். தேவர்களுக்கு வந்த கண்டத்தை அந்தக் கண்டம் போக்கியது. அதை விழுங்கி விட்டால் அவன் திருவயிற்றிலிருக்கும் உயிர்கள் சாம்புமாகையால் அதைக் கண்டத்திலே நிறுத்தினான். அது மட்டுமன்றி; அதைக் கண்ட போதெல்லாம் தேவர்கள் தம் வலிமையின்மையையும் இறைவனின் கருணையையும் நினைந்து, அகந்தையின்றி அவனைப் போற்றுவார்கள் அல்லவா? அந்த நஞ்சை உண்டதனால் இறைவனுக்குச் சோர்வு உண்டாயிற்றா? இல்லை, இல்லை. ஆனந்தமே உண்டாயிற்று. நம் குழந்தைகள் பிழைத்துக் கொண்டார்களே என்ற ஆனந்தம்; அதனால் ஆனந்தக் கூத்தே ஆடுகிறான். அப்போது அவனுடைய சோதி வடிவம் சுடர்விட்டு ஒளி விடுகிறது. கலங்கரை விளக்குச் சுழலும்போது அதன் ஒளி எங்கும் பரவுவது போல, ஆனந்தக் கூத்தாடும் ஐயன் ஒளிவிடும் சுடரோனாக விளங்குகிறான்.

''நடம் மன்னு துன்னு சுடரோன்''

ஆனந்தக் கூத்தை நிலையாகச் செய்து நிற்கும், நெருங்கிய சுடரை உடையவன். அவன் இந்த உலகத்தில் திருக்கோயில்களில் எழுந்தருளியிருக்கிறான். உலகத்திலுள்ள பொருள்களினூடும் இருக்கிறான். அமரர் தலைவனாக வீற்றிருக்கிறான். அவனுடைய ஆட்சி இவற்றையும் கடந்தது. அவனுடைய பேரொளி தேவர் உலகத்தையும் கடந்து பெருகுகிறது.

அந்தப் பெருமான் கருணையே வடிவான உமாதேவியை ஒரு பக்கத்தில் வைத்திருக்கிறான், கழுத்திலே நீலம்; திருமேனி முழுவதும் ஒரே ஒளிச் சிதறல்; இடப்பக்கம் மரகத மணிப் பச்சை. இந்த இணைப்பிலே அழகு கொஞ்சிக் குலவி நடமிடுவதில் என்ன வியப்பு.

ஒளிமண்டி உம்பர் உலகம் கடந்த
உமைபங்கன்.

மண்டி-பெருகி. உலகம் கடந்தவன், உமை பங்கன். உமை பங்கன் என்பது சிவனென்னும் துணையாய் நின்றது.

உமாதேவியார் தந்த ஞானப்பாலை உண்ட பெருமான் அந்தத் தேவியாரை மறப்பாரா? 'இப்படி உள்ள அழகுக் கூத்தன் எங்களுக்குச் சொந்தமானவன்; எங்கள் அரன். அவன் ஊர் எது தெரியுமா?' என்று சொல்லித் திருமுல்லைவாயிலைப் பற்றிச் சொல்லத் தொடங்குகிறார்.

எங்கள் அரன் ஊர்

இப்படி ஒரு பாசுரத்தின் முற்பாதியில் இறைவனுடைய அழகையும் பெருமையையும் கூறினார்.

துளி மண்டி உண்டு நிறம் வந்த கண்டன்,
நடம் மன்னு, துன்னு சுடரோன்,
ஒளிமண்டி உம்பர் உலகம், கடந்த,
உமை பங்கன், எங்கள் அரன் ஊர்

ஊர் எப்படி இருக்கிறது? ஊரைச் சுற்றிச் சோலைகள், அவற்றை யடுத்து நெற்கழனிகள். சோலைகள் அடர்ந்து, தண்ணிழல் பரந்து, மலர்களும் கனிகளும் குலுங்குகின்றன. இறைவனுடைய பக்தர்கள் இறைவனுக்கு அருச்சனை செய்ய மலர் எடுக்கவும், நிவேதனம் செய்யக் கனி செய்யவும் அங்கே வருகிறார்கள். தங்களுக்கு வேண்டிய பொருள்கள் கிடைக்கும் அந்தச் சோலையை அடைந்தவுடன், அவர்கள் உள்ளம் பூரிக்கின்றன; களிப்பு நிரம்புகிறது. அப்படியே உள்ளம் ஒன்றிய காதலர்கள் அங்கே வந்து தங்குகிறார்கள்; பொழிலாட்டு அயர்கிறார்கள்; அவர்களிடத்தும் களி மண்டுகின்றது. அது பலருக்கும் களி மண்டு சோலையாக உள்ளது. அங்கே உள்ள நீர் நிலையில் கமல மலர்கள் பூத்துப் பொலிகின்றன.

சோலையை அடுத்துத் தோன்றுபவை கழனிகள். அங்கே நெல் விளைகிறது. ஓரக் கால்களில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. சேறும் தண்ணீரும் உள்ள அந்த மருத நிலத்தில் மருதப் பெருமாட்டியின் திருமுகத்தைப் போலக் கமல மலர்கள் மலர்ந்திருக்கின்றன. சேற்றில்வளரும் இயல்பு தாமரைக்கு உண்டு; அதனால்தானே அதற்குப் பங்கஜம் (சேற்றில் தோன்றுவது; பங்கம்—சேறு; ஜம்—பிறப்பது) என்ற பெயரும் உண்டாயிற்று? அந்தக் கழனிகளும் இரண்டு வகையில் களி மண்டும் இடமாக இருக்கின்றன. ஒன்று நல்ல களிமண் நிரம்பிய வயல்கள். அவை உணவுக்கு இன்றியமையாதநெல்லை விளைவிப்பதனால் மக்களுக்குக் களிப்பை மண்டச் செய்யும் கழனிகளாகவும் இருக்கின்றன.

களி மண்டு சோலை கழனிக் கலந்த
கமலங்கள்.

களிப்பு நிரம்பிய சோலைகளிலும், களி மண்டுவதற்குக் காரணமான கழனிகளிலும் இணைந்து மலர்ந்த தாமரை மலர்கள். களி-களிப்பு. களிமண்.

நீர் வளமும் நில வளமும் நிரம்பிய இவ்விடத்தில் வளரும் கமல மலர்கள் பெரியவையாய் மணம் நிறைந்து, மதுவுடன் விளங்குகின்றன; தேன் வைத்த கிண்ணங்களைப் போலத் தோற்றம் அளிக்கின்றன.

தேன் எங்கே இருக்கிறதென்று வண்டுகள் தேடி நாடி வருகின்றன. ''கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பிகள்'' அவை. எங்கே யிருந்தாலும் இங்கே பறந்து வருவதற்குரிய சிறகுகளை உடையவை அவை. கமலங்களில் மதுவானது தேங்கித் தங்கித் தெளிந்து இருக்கிறது. பல வண்டுகள் பறந்து வந்து மண்டுகின்றன; விருந்துண்ணக் கூட்டமாக வருபவர்களைப் போல முந்திக் கொண்டு வருகின்றன. எத்தனை வண்டுகள் வந்தால் என்ன? இங்கே தேனுக்குப் பஞ்சமா? மதுவின் தெளி

வை உண்ட பிறகு அந்த வண்டுகளுக்குக் களிப்பு மிகுகின்றது. ஒரே ஆனந்தம். நன்றாக உண்ட குழந்தை ஆடிப்பாடுவது போல, இந்த வண்டுகள் பாடத் தொடங்குகின்றன. உண்ட தேனின் சுவையினாலே ஊக்கமுற்று முரலுகின்றன. அவை உண்டது நாவிலே சுவைக்கும் தேன்; அதன் விளைவாக அவை வெளிப்படுத்துவன காதாலே சுவைக்கும் இசைத் தேன். திருமுல்லைவாயிலாகிய இந்த ஊரில் இந்தக் காட்சியைக் காணலாம்.

கமலங்கள் தங்கும் மதுவில்
தெளி மண்டி உண்டு சிறை வண்டு பாடு
திருமுல்லை வாயில் இதுவே!

தாமரை மலர்களில் தங்கிய தேனின் தெளிவைக் கூட்டமாக வந்து உண்டு சிறகையுடைய வண்டுகள் பாடுகின்ற திருமுல்லைவாயில் இதுவே. தெளி - தெளிவு. சிறை - சிறகு.

முதற் பகுதியில் இறைவன் அழகைச் சொன்ன ஞானசம்பந்தர் பிற்பகுதியில் இயற்கையின் அழகைச் சொன்னார். இரண்டையும் அநுபவிக்கத் தெரிந்தவர் அவர். இறைவனிடத்தும் அழகைக் கண்டு, அந்த அழகன் படைத்த இயற்கையிலும் அழகைக் கண்டு, தேனுண்ட வண்டு பாடுவதுபோல, இந்த அழகுத் தேனை உண்ட சம்பந்தப் பிள்ளையாகிய மது கரம் பாடுகிறது. பாட்டு முழுவதையும் பார்ப்போம்.

துளிமண்டி உண்டு நிறம்வந்த கண்டன்,
நடம்மன்னு துன்னு சுடரோன்;
ஒளிமண்டி உம்பர் உலகம் கடந்த
உமைபங்கன், எங்கள் அரன்ஊர்
களிமண்டு சோலை கழனிக் கலந்த
கமலங்கள் தங்கும் மதுவில்
தெளிமண்டி உண்டு இறைவண்டு பாடு
திருமுல்லை வாயில் இதுவே

அரனூர் திருமுல்லைவாயில் இதுவே என்று கூட்டுக. கழனிக் கலந்து—கழனியிலே ஒன்றி வளர்ந்த, களி மண்டு சோலை, களி மண்டு கழனி என்று இரண்டிடத்தும் கூட்டுக. இரண்டாவதில் களி என்பதற்குக் களி மண் என்றும், களிப்பு என்றும், இரு பொருளும் கொள்ளலாம்.

சிறை வண்டு என்ற அடையினால், இந்தத் தேனை உண்ணும் ஆவலால் நெடுந்தூரத்திலிருந்து பறந்து வந்த வண்டு என்ற குறிப்பைப் பெறலாம். ''தண்டா மரையின் உடன் பிறந்தே தண்டேன் உண்ணா மண்டூகம் ; வண்டோ கானத் திடையிருந்து வந்தே கமல மதுவுண்ணும்'' என்பதைக் காண்க.

எங்கெங்கோ உள்ள அன்பர்கள் இந்தத் திருத்தலத்துக்கு வந்து ஆனந்த நடமாடும் இறைவன் திருவடியாகிய கமலத்தில் ஊறும் ஆனந்தமாகிய தேனை உண்பார்கள் என்ற குறிப்பும் இதனால் பெறப்படும். ''அனைத்தெலும்புண்ணெக ஆனந்தத் தேன் சொரியும், குனிப்புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ'' என்ற திருவாசகம் இங்கே நினைப்பதற்குரியது.

இந்தத் திருப்பாட்டு 2ஆம் திருமுறையில் வருவது.

“தெய்வம் தெளிமின்”

தெய்வம் உண்டு எனத் தெளிந்து ஒழுகுதல், நம் மனித வாழ்க்கை சிறப்புறுதற்குப் பல்லாற்றானும் துணை புரியும். சமயவுணர்வும், தெய்வ நம்பிக்கையும், சிறந்துயர்ந்த பண்பு நலங்கள் பலப்பல வெளிப்பட்டு மேலோங்கித் திகழ்தற்குக் காரணமாக அமைகின்றன, எனத் துணிந்து கூறலாம் (1). சமய வுணர்வில்லாத ஒருவன் வேறு பிற துறைகளில் எவ்வளவுதான் சீரும் சிறப்புமுற்று விளங்கினாலும், சமயவுணர்வும் தெய்வ நம்பிக்கையும் உடைய ஒருவன் முன்னிலையில் சிறிது தாழ்ந்தே நிற்பான். முன்னையவனிடம் இல்லாத ஏதோ ஒரு சிறந்த தனிப் பெருஞ் சிறப்பு, பின்னையவனிடம் அமைந்திருக்கக் காணலாம் (2). எனவே, நாம் அனைவரும் இத்தகைய தெய்வவுணர்வும் நம்பிக்கையும் மிக்கவர்களாய் விளங்கி, வையத்து வாழ்வாங்கு வாழ்வோமாக!

—ஆசிரியர்.

(1) “The highest flights of charity, devotion, trust, patience, bravery etc., to which the wings of human nature have spread have been for religious ideals.”

—Prof. William James

(2) “When one compares the deeply religious and spiritual person with the best and bravest of those who are not religious, one sees, it must be confessed, that the former possesses something which others black.”

—Prof. J. B. Pratt

வடக்குத் திருவீதிப்பிள்ளை வைபவம்

'மகாவித்வான்' திரு. பி. ப. அண்ணங்கராசார்ய சுவாமிகள்

ஆனி மாதத்தில் பெரியாழ்வாருடைய திருவவதார நன்னாளாகிய சுவாதி நட்சத்திரத்தில் இப்பேராசிரியர் அவதரித்தருளினர். சீர் வசன பூடணம் முமுட்சுப்படி முதலிய அஷ்டாதச ரகசியங்களை அருளிச் செய்த பிள்ளை லோகாச்சாரியர்க்கும், ஆசார்ய இருதயம் அருளிச் செய்த அழகிய மணவாளப் பெருமாள் நாயனர்க்கும் திருத்தந்தையார் இவர். இவருடைய இயற்பெயர், ஸ்ரீ கிருஷ்ணமகா குரு என்பதாம். இந்தத் திருநாமமே, பெரியவாச்சான் பிள்ளை என்கிற மற்ருேர் ஆசிரியர்க்கும் இருந்ததனல், நம்பிள்ளை திருவடிகளில் ஆச்ரயித்திருந்த இவர்களுக்குள் வாசி தெரிவதற்காக இவர் வடக்குத் திருவீதிப் பிள்ளை என வழங்கப்பட்டு வந்தார். திருவரங்கம் பெரிய கோயிலில் வடக்குத் திருவீதியில் இவர் வாழ்ந்து வந்ததுவே, இத் திருநாமத்திற்குக் காரணம்.

இப் பேராசிரியருடைய திவ்விய சரித்திரங்களைப் பற்றி முன்னேர்கள் விசேஷமாக எழுதி வைக்கவில்லையாதலால், இவருடைய ஞானப் பெருமைகளை இங்கு விசேடமாக அநுபவிப்போம். பகவத் விஷயமென வழங்கப்படுகிற, (திருவாய்மொழி வியாக்கியானமான) ஈடுமுப்பத்தாருயிரப் படியை, இவ் வாசிரியரே பட்டோலை கொண்டவர். உபதேச ரத்தின மாலையில், ''தெள்ளியதா நம்பிள்ளை செப்பு நெறி தன்னை, வள்ளல் வடக்குத் திருவீதிப் பிள்ளை, இந்த நாடறிய மாறன் மறைப் பொருளை நன்குரைத்தது, ஈடுமுப்பத்தாருயிரம்'' என்று அருளிய பாசுரத்தின்படி, நம்பிள்ளையின் பகவத் விஷய உபந்நியாசங்களைக் கேட்டுத் திருவுள்ளத்தில் தரித்துக் கொண்டிருந்து அற்புதமாகப் பட்டோலை கொண்ட பெருமை இவ்வாசிரியர்க்கு அசாதாரணமானது. சிலர் கூறுவதாவது, நம்பிள்ளை சோதிவாய் திறந்து அருளிய பங்க்திகள் எப்படியோ, அப்படியே என்று. இதில் ஔசித்யம் சிறிதுமில்லை. பேச்சு வழக்கு நடைவேறு ; நூல் எழுதுகின்ற நடைத் திறன் வேறு. கங்கையாற்றில் பெரு வெள்ளம் போல் நம்பிள்ளையருளிச் செய்தவையாய், கரைகட்டாக் காவேரி என்னும் படியாய் அமைந்த ஸ்ரீசூக்திகள், அப்படியே ஏற்படுத்தப் பட முடியாதவை. மகோபந்நியாசங்களில் குறிப்பெடுத்துக் கொள்ளும் முறையில் அமைந்தது ஈடு. ஈட்டின் பங்க்தி ஸந்நிவேசம் வேறு எந்தக் கிரந்தத்திலும் கண்டறியாததும், காண முடியாததுமான அத்விதீய விலட்சண சந்தர்ப்பம். சமஸ்கிருத வித்துவான்களும், தமிழ் வித்வான்களும் தனித் தனியே உள் குழையத் தக்க உயர்ந்த ரசனா விசேஷம். ''ககநம் ககநாகாரம் ஸாகரஸ் ஸாகரோபம'' என்கிருப் போலே, ''ஈட்டுக்கு உவமை ஈடே'' என்ன வேண்டுமத்தனை. மணிப் பிரவாள நடையில் மற்றும் பல ஆசிரியர்களும் எழுதியுள்ளார்கள் எனினும், இவருடைய ரசனாவைகரி தேனும் பாலும் நெய்யும் கன்னலும் அமுதும் ஒத்து விளங்கும் அழகு, அநுபவ ரசிகர்களுக்கே அறிய எளிது. அர்த்தம் தெரியாமற் போனாலும், பங்க்திஸந்நிவேசத்தைச் சேவித்த மாத்திரத்திலே, இரும்புபோல் வலிய நெஞ்சும் இறை யிறையுருகும். பெரிய புலவர்கள் பத்தெட்டு வரிகளில் எழுத வேண்டிய பொருள்களை, ஒரு வரியில் வெகு கம்பீரமாக அடக்கி எழுதுந் திறன் இவ்வாசிரியர்க்கே அமைந்தது.

மணவாள மாமுனிகள் இவ்வாசிரியர்க்கு வள்ளல் என்று விசேஷணம் இட்டு அருளினர். (உதாரர் என்றபடி). ஔதார்யம் மிக்கவர்கள் உலகில் பலர் புகழ் பெற்றிருந்தாலும், இவர் ஒருவருடைய ஔதார்யமே உண்மையில்கொண்டாடத் தக்கதும், ஒப்புயர்வற்றதும் ஆகும். ஏற்கெனவே திருக்குருகைப்பிரான் பிள்ளான் அருளிச் செய்த ஆருயிரப்படி வியாக்கியானமும், நஞ்சீயர் அருளிச் செய்த ஒன்பதினுயிரப் படி வியாக்கியானமும் இருந்தாலும், அவை மிகவும் சுருக்கமானவைகள் ஆகையாலே, அநுபவ ரசிகர்களுக்குப் பரிபூர்ண திருப்தியை விளைவிக்கப் போதாதவை. நம்பிள்ளை தம்முடைய நல்லருளால் ஏவிவிடப் பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்த இருபத்தினலாயிரப்படி வியாக்கியானம், அவைபோலச் சுருக்கம் அன்றிக்கே சிறிது விரிவாகவே இருந்தாலும், ஈடு முப்பத்தாருயிரப்படி திருவவதரித்த பின்பு, அதுவும் சுருக்கமே என்னும்படியாயிற்று: அனேக தலங்களில் இருபத்தினலாயிரப் பங்க்திகளும், ஈட்டுப் பங்க்திகளும் ஒற்றுமைப் பட்டிருக்கையாலே, முன்னம் அவதரித்ததான அந்த வியாக்கியானத்தைத் துணை கொண்டே, ஈடு எழுதியருளப்பட்டது எனத் தெரிகின்றது. ஆயினும், ஸ்ரீசூக்தி காம்பீர்யமும், அர்த்த பௌஷ்கல்யமும், ஈட்டுக்கு அநிதர சாதாரணமாயிருப்பது பற்றியே. இதுவே எங்கும் காலட்சேபக்ரந்தமாகக் கொள்ளப்பட்டுக் குலாவப் பெறுகின்றது. இராமாயணம் முதலிய இதிகாச புராணங்களிலிருந்து மேற்கோளாக ஆங்காங்குப் பலபல சுலோகங்களை எடுத்து இனிமையே வடிவெடுத்ததாக வியாக்கியானஞ் செய்தருளும் அழகு ஈட்டுக்குச் சிறந்த அணிகலன்.

திருவிருத்தத்திற்கும் இங்ஙனே ஈடு வியாக்கியானம் அமைந்துள்ளது. அஷ்டச் சுலோகி பெரியபடி வியாக்கியானத்திலே ''வடக்குத்திரு வீதிப் பிள்ளை அஷ்டாட்சர தீபிகையிலே அருளிச் செய்தருளினர்'' என்று காண்கையாலே, அஷ்டாட்சர தீபிகை என்கிற கிரந்தமும், இவ்வாசிரியர் கிருதியென்று தெரியவருகின்றது. (அது லுப்தம்). இப்பேராசிரியருடைய பெருமைகளில் ஒன்றே நாம் உள் குழைந்து போற்றத் தக்கது. அது யாதெனின்; அஃது இவர் உலகுக்கெல்லாம் உயிரான பிள்ளை லோகாசார்யரையும், அழகிய மணவாளப் பெருமாள் நாயனரையும் பெற்றுக் கொடுத்தருளியதே ஆகும். வடக்குத் திருவீதிப் பிள்ளை திருவடிகளே சரணம்.

**

திருக்குடமுழுக்கு விழா நிகழ்ச்சிகள்

(1978 ஜனவரி முதல் அக்டோபர் வரையில் மாவட்ட வாரியாக)

1.	அருள்மிகு விநாயகர் சந்நிதி, (இணைப்பு) கங்காதரேசுவரர் திருக்கோயில், புரசைவாக்கம், சென்னை.	சென்னை மாவட்டம்	27—3—78
2.	அருள்மிகு சீநிவாசப் பெருமாள் ஆலயம், பெரியமேடு, சென்னை.	சென்னை மாவட்டம்	21—4—78
3.	அருள்மிகு ஆதிவிநாயகர் ஆலயம், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.	சென்னை மாவட்டம்	19—1—78
4.	அருள்மிகு தேவராசசுவாமி திருக்கோயில் காஞ்சிபுரம்	செங்கற்பட்டு மாவட்டம்	12—4—78
5.	அருள்மிகு தேவி கடும்பாடி அம்மன் ஆலயம், ஆலந்தூர், சைதைப்பேட்டை வட்டம்.	,, ,,	19—6—78
6.	அருள்மிகு பெரிய பாளையத்தம்மன் கோயில், நசரத்பேட்டை, பூந்தமல்லி.	,, ,,	19—6—78
7.	அருள்மிகு நால்வர் திருக்கோயில் (வேதகிரீசுவரர் ஆலயம்), திருக்கழுக் குன்றம்.	,, ,,	7—9—78
8.	அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி ஆலயம், சின்னம்பேடு, பொன்னேரி வட்டம்.	,, ,,	19—6—78
9.	அருள்மிகு வரசித்தி விநாயகர், சிவ-விஷ்ணு ஆலயங்கள், காந்தி நகர், குடியாத்தம் வட்டம்.	வடஆற்காடு மாவட்டம்	12—5—78
10.	அருள்மிகு ஆனந்தவல்லி சமேத சுந்தர சோதீசுவரர் ஆலயம், புளிச்சப்பள்ளம், திண்டிவனம் வட்டம்.	தென்னாற்காடு மாவட்டம்	21—8—78
11.	அருள்மிகு முக்குறுணி விநாயகர் ஆலயம், சிதம்பரம்.	,, ,,	8—9—78
12.	அருள்மிகு கனகவல்லி நாயகி சமேத இலட்சுமி நாராயணப் பெருமாள் திருக்கோயில், கஞ்சனூர், விழுப்புரம் வட்டம்.	,, ,,	7—9—78
13.	அருள்மிகு பிருகந்நாயகி சமேத ஆடவல்லீசுவரர் திருக்கோயில், முன்னூர், திண்டிவனம் வட்டம்.	,, ,,	19—6—78

14.	அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயம், திண்ணனூர், துறையூர் வட்டம்.	திருச்சிராப்பள்ளி மாவட்டம்	1—6—78
15.	அருள்மிகு வடகாளியம்மன் ஆலயம், புக்கதுறை, சுனைப்புகழ்நல்லூர், லால்குடி வட்டம்.	,, ,,	9—6—78
16.	அருள்மிகு விநாயகர் கோயில், புரத்தாக்குடி, லால்குடி வட்டம்.	,, ,,	17—8—78
17.	அருள்மிகு பாலதண்டாயுதபாணி சுவாமி ஆலயம், குமரமலை.	புதுக்கோட்டை	21—4—78
18.	அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், தம்பிக்கோட்டை.	தஞ்சாவூர் மாவட்டம்	21—4—78
19.	அருள்மிகு மெய்கண்டமூர்த்தி குமரன் ஆலயம், நாகப்பட்டிணம் வட்டம்.	,, ,,	19—5—78
20.	அருள்மிகு பழநியாண்டவர் மற்றும் சண்முகநாத சுவாமி ஆலயம், (அட்சயலிங்கசுவாமி கோயில்), கீவளூர், நாகப்பட்டிணம் வட்டம்	,, ,,	29—3—78
21.	அருள்மிகு இராமலிங்க சுவாமி திருக்கோயில், 108 சிவாலயம், பாபநாசம் வட்டம்.	,, ,,	21—4—78
22.	அருள்மிகு கூத்தப்பெருமான் அய்யனார் ஆலயம், வாரக்குப்பம், நன்னிலம் வட்டம்.	,, ,,	9—6—78
23.	அருள்மிகு மாதவப் பெருமாள் சந்நிதி, கீழச்சாலை, நாங்கூர், சீர்காழி வட்டம்.	,, ,,	9—6—78
24.	அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி ஆலயம், (அட்சயலிங்கசுவாமி கோயில்), கீழ்வேளூர், திருவாரூர் வட்டம்.	,, ,,	9—6—78
25.	அருள்மிகு பிரசன்ன வெங்கடாசலபதிப் பெருமாள் ஆலயம், சிவராயர் தோட்டம், மகர்நோன்புச்சாவடி, தஞ்சாவூர்.	,, ,,	14—9—78
26.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி ஆலயம், நெற்குப்பை.	இராமநாதபுரம் மாவட்டம்	14—9—78
27.	அருள்மிகு அன்னை திருநெல்லை உடனமர் கொற்றவாளீசர் ஆலயம், கோவிலூர், சிவகங்கை சமத்தானம்.	,, ,,	21—4—78
28.	அருள்மிகு கோதண்டராமர் திருக்கோயில், இராமேசுவரம்.	,, ,,	12—5—78
29.	அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோயில், சங்கரன்கோயில்.	திருநெல்வேலி மாவட்டம்	9—6—78
30.	அருள்மிகு மீனாட்சிசுந்தரேசுவரர் திருக்கோயில், செவ்வாய்ப்பேட்டை.	சேலம் மாவட்டம்	19—6—78

—oOo—

அறநிலையத் துறையின் சார்பில், தமிழகக் கோயில்களில் நடைபெற்று வருகின்ற

திருப்பணிகள் மற்றும் பிற வேலைகள் பற்றிய சில தகவல்கள்

வ.எண்	மாவட்டம்	வேலைகளின் எண்ணிக்கை	மதிப்பீட்டுத் தொகை	மொத்தச் செலவு
			ரூ.	ரூ.
1.	சென்னை	13	15,66,680	7,37,715
2.	செங்கற்பட்டு திருத்தணிகை சுப்பிரமணியசுவாமி கோயில், திருவேற்காடு தேவி கருமாரி அம்மன் கோயில்	36	90,15,500	20,37,306
3.	வட ஆர்க்காடு	13	5,29,500	2,52,866
4.	தென் ஆர்க்காடு	7	4,48,500	4,01,500
	சிதம்பரம் சபாநாயகர் கோயில்	1	45,00,000	4,01,500
5.	திருச்சிராப்பள்ளி (திருவரங்கம், சமயபுரம், புதுக்கோட்டை)	36	11,28,400	65,436
6.	தஞ்சாவூர்	42	17,20,850	5,06,385
7.	மதுரை (பழனி)	26	33,74,000	11,14,993
8.	இராமநாதபுரம் (சமத்தானம், இராமேசுவரம்)	47	34,83,000	12,83,973
9.	திருநெல்வேலி (திருச்செந்தூர்)	43	19,53,500	1,88,060
10.	கன்னியாகுமரி	17	1,25,000	58,620
11.	கோயம்புத்தூர் & நீலகிரி	21	17,97,000	8,03,852
12.	சேலம் & தர்மபுரி	7	4,84,600	9,555
		309	3,00,96,530	74,60,261

சக்தி தோத்திரங்கள்

'மும்மொழிக் கொண்டல்'

பேராசிரியர் திரு. பெ. திருஞானசம்பந்தம், M.A., L.T., சென்னை.

இந்தியாவில் சக்தி வழிபாடு எக்காலத்திலும் இருந்ததென்றாலும், குப்தர் காலம் தொடங்கித்தான் அது முக்கியத்துவம் பெற்றது. பழந்தமிழ் இலக்கியத்தில் கொற்றவை வழிபாட்டைக் காண்கிறோம். எனினும் அம்பிகைக்குத் தனிக் கோயில்களும், சிறப்புப் பூசனைகளும் பிற்காலத்திலேதான் தோன்றியிருக்கின்றன. சக்தியின்றிச் சிவமில்லை என்ற கருத்தைத் திருமந்திரத்தில் காண்கிறோம். சக்தியின்றேல் பிரமன், விஷ்ணு, உருத்திரன் ஆகியோர் தத்தம் தொழில்களைச் செய்ய வல்லவர் அல்லர் என்று ஆதிசங்கரர் சௌந்தரிய லகரியில் பாடியிருக்கிறார். சக்தியும் சிவமும் ஒன்றினின்றும் மற்றொன்று பிரிக்க வொண்ணாதவை என்பதைக் குறிக்கும் வண்ணம் கலைஞர்கள் அர்த்தநாரீசுவர வடிவத்தைப் படைத்தனர். சிவலிங்கத்தினிடமும் சக்தியும் சிவனும் ஒன்றியிருப்பதைக் கண்டனர். சிவ சக்தியைத் தனியே பார்வதி, மகாதேவி, சதீ, கௌரி, மீனாட்சி, காமாட்சி, விசாலாட்சி, அன்னபூர்ணா, துர்க்கை, காளி, சண்டி முதலான பல பெயர்களில் அவ்வப்பகுதிகளில் மக்கள் வழிபட்டனர். இம்மூர்த்தி பேதங்களில் சாந்தமூர்த்திகளும் உக்கிரமூர்த்திகளும் உண்டு. தேவி பக்தர்களுக்கு அருள் பாலிக்கும்போது சாந்த மூர்த்தியாகவும், தீயோர்களை ஒறுக்கும் போது உக்கிர மூர்த்தியாகவும் காட்சி தருகிறாள். அவரவர் தமக்கு இஷ்ட தேவதையாக ஒவ்வொரு மூர்த்தியைத் தேர்ந்து வழிபட்டு வந்தனர். அபிராமபட்டர் அபிராம வல்லியையும், குமரகுருபரர் மீனாட்சியம்மையையும் மற்றும் பல தமிழ்க் கவிஞர்கள் அன்னையின் பல்வேறு வடிவங்களையும் போற்றிப் பாடியிருக்கின்றனர். வடமொழியிலும் சக்தி தோத்திரங்கள் என்ற வகையில் பல உண்டு.

காஞ்சியில் வாழ்ந்த மூக கவி, காமாட்சி மீது ஐந்நூறு சுலோகங்களைப் பாடியிருக்கிறார். ஸ்ரீ சங்கரர், காசி அன்னபூரணி மீதும், மதுரை மீனாட்சியம்மை மீதும் சுலோகங்கள் பாடியிருக்கிறார். பாணபட்டர் என்ற வடமொழிக் கவிஞர், சண்டியின் மகிஷாசுர வதம் குறித்து நூறு சுலோகங்களைப் பாடியிருக்கிறார். இவ் வடமொழித் தோத்திரங்களுள் ஒரு சிலவற்றைக் காண்போம்.

பாணபட்டர் ஹர்ஷ வர்த்தனர் காலத்தில் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர். சமஸ்கிருத உரைநடைக் காப்பியம் எழுதியவர்களுள் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத கவிஞர். அவர் ஒரு சைவர். ஆகவே மக்களால் பெரிதும் பயபக்தியுடன் வழிடப்பட்ட சண்டி தேவியைக் குறித்து கவி நயம் மிக்க நூறு பாடல்களைப் பாடியுள்ளார். அதுவே சண்டி சதகம் எனப்படுவது. அதில் ஒரு சுலோகத்தைக் காண்போம்.

அன்றொரு நாள் பார்வதி சிவனைக் கணவனாக அடைய வேண்டும் என்ற நோன்பை ஏற்றுக் கொண்டு, யோகத்தில் அமர்ந்திருந்த சிவபெருமானுக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தாள். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு மன்மதன் மலர்க் கணைகளைச் சிவபெருமான் மீது எய்தற்குக் குறி பார்த்தான். இதையறிந்த சிவயோகி நெற்றிக் கண்ணைத் திறந்து மன்மதனை எரித்தார். இச் செயல், தன் குறிக்கோளுக்குக் குந்தகம் விளைவித்ததால், பார்வதி சினம் கொண்டாள். சிவனாலேயே அடக்க முடியாத மகிஷாசுரனை வதம் செய்த பெருமிதத்தில், அன்று சிவபெருமான் மன்மதனை எரித்துத் தன்னை உதாசீனப்படுத்தியதற்குப் பதிலாக, இன்று பார்வதி அவரைத் தன்னடியில் விழும்படி செய்தாளாம். அதே கணம் இப்படிச் செய்து விட்டோமே என்று கண்ணீரும் உகுத்தாளாம். மதி சூடிய பெருமானின் தலையிலுள்ள சந்திரனின் மீது மையுண்ட கண்ணினளாகிய பார்வதியின் மை கலந்த கண்ணீர் விழ, அதுவே சந்திரனின் களங்கமாயிற்று எனக் கவிஞன் கற்பனை செய்கின்றான். வெண்மையான சந்திரனில், தன் வெற்றி குறித்துத் தன் பெயரையே அக் கருமையினால் எழுதினாளோ என்றும் கவி நினைத்துப் பார்க்கிறான். இத்தகைய சண்டி தேவி அனைவரையும் காப்பாளாக என்று வேண்டுகிறார் பாண கவி (சுலோகம் 49).

மூக கவி ஊமையாகப் பிறந்தவர்; காமாட்சி தேவியின் அருளால் கவி பாடும் வல்லமை பெற்றவர். தேவியைப் பற்றிப் பாடிய 500 பாடல்களில் தேவியின் திருவடிப் பெருமையைக் கூறும் 'பாதாரவிந்த சதகம்' என்ற பகுதியில் ஒரு சுலோகத்தைக் காண்போம்.

'தாயே, இவ்வேழை மனிதன் உலக வாழ்க்கை என்னும் கொடிய சூரிய வெப்பத்தால் தாக்குண்டு தத்தளிக்கிறான். பரஞானம்

என்னும் குளிர்ந்த நீர்த் தாரையின் ஒரு சொட்டாவது கிடைக்காதா என்று ஏங்குகிறான். அறியாமை இருளில் உழன்று கொண்டிருக்கிறான், இவ்வுலகில் இப்பிறவியில் யாத்திரை செய்கின்றவனான மனிதன். பரமசிவனின் துணைவியான காமாட்சி தேவி! நினது பாத கமலமாகிற குளிர்ந்த நிழலைப் புகலடையக் கருதி, இவ்வேழை மனிதன் அதனைத் தேடிக் கொண்டிருக்கின்றான் என்று கூறி, புகலிடம் வேண்டுகிறார் கவிஞர். (பாதாரவிந்த சதகம், 61).

கடாட்ச சதகம் என்ற பகுதியில் காமாட்சி தேவியின் அருள் நோக்கை நூறு சுலோகங்களில் வருணித்துள்ளார் மூக கவி. அம்மையின் அருள் நோக்கே ஒரு அருங் கலை. அது ஒரு மேலான அருமருந்தாகப் பயன்படுகிறது. மருந்து பல வகையில் பயன்படும். உயிரூட்டும் சக்தி அதற்கு உண்டு என்பதை அநுமன் சஞ்சீவி மலையிலிருந்து கொண்டுவந்த மூலிகையால் இராம லட்சுமணர்களின் மூர்ச்சையைத் தெளிவித்ததிலிருந்து அறிகிறோம் அல்லவா? அப்படியே காமாட்சி தேவியின் கடாட்சமாகிற இவ் ஔடதம் மாம் பூவைக் கணையாகக் கொண்ட மன்மதனுக்கு உயிர்ப்பூட்டும் வகையில் அமைந்திருக்கிறதாம். அத்தனை அழகிய பார்வை. இதுவே ஔடதத்தின் 'சஞ்சீவன சக்தி'. ஔடதத்திற்கு மோகத்தை உண்டு பண்ணும் சக்தியும் உண்டு. ஒரு வகை ஔடதத்தினால் கணவன் மனைவியையோ, மனைவி கணவனையோ வசீகரிக்க முடியும் என்று சொல்லப்படுகிறது. தேவியின் இக் கடாட்ச ஔடதம் இளம் பிறையணிந்த சந்திரசேகரனை மோகிக்கச் செய்கிறதாம். இதுவே ஔடதத்தின் 'சம்மோகன சக்தி'. சில மருந்துகள் ஒருவனைச் செயலற்றுப் போகச் செய்யும் வல்லமையுடையன. 'இது எனது' என்ற மமகாரம் பலரையும் ஆட்டிப் படைப்பதைப் பார்க்கிறோம் அல்லவா? மமதை என்ற பொல்லாத கிரகத்தின் சேஷ்டையை இக்கடாட்சம் கட்டிப் போட்டு விடுகிறதாம். இதுவே ஔடதத்தின் 'சம்ஸ்தம்பன சக்தி'. இவ்வாறு முச்சக்திகளைக் கொண்ட தேவியின் கடைக்கண் பார்வையாகிற ஔடதம், நாம் போற்றிப் பெற வேண்டிய நன்மருந்து என்று நவில்கிறார் கவிஞர்.

ஆதிசங்கரர் பாரத தேசமெங்கும் யாத்திரை செய்து, ஆங்காங்குள்ள தேவதைகளைக் குறித்துத் தோத்திரங்களைச் செய்திருக்கிறார். அவற்றுள் காசியிலுள்ள அன்னபூரணி தேவியும், மதுரை மீனாட்சியும் இவரால் துதிக்கப் பட்ட தேவதைகள். அன்னபூரணியின் கிருபையைப் பிச்சையாக அருளுமாறு அன்னபூர்ணா துதி என்ற தோத்திர நூலின் ஒவ்வொரு சுலோகத்திலும் வேண்டுகிறார். அதில் ஒன்றைப் பார்ப்போம்.

உலகுக்கெல்லாம் அன்னையாக விளங்கும் அன்னபூரணி, யோக நெறியில் நிற்போருக்குப் பேரானந்தத்தை அருளுகிறாள். மகிஷன் முதலான பகைவர்களை அழிக்கிறாள். அறம் வளர்த்த நாயகியாக இருந்து கொண்டு, தர்மத்திற்கு ஒரே உறைவிடமாக இருக்கின்றாள். சந்திரன், சூரியன், அக்கினி போன்று என்றும் ஞான ஒளி அலைகளைப் பரப்பிக் கொண்டிருக்கிறாள். மூவுலகத்தையும் என்றும் காத்து வருகிறாள். வேண்டுவோர் வேண்டுவதையெல்லாம் தருகின்ற ஐசுவரியம் உடையவளாக இருக்கிறாள். தவம் புரிவோருக்குத் தவத்தின் பயனை அருளுகிறாள். காசியம்பதியில் வாழும் இத் தேவதையை நோக்கி, ''அன்னபூர்ணேசுவரி அருட்பிச்சையிடு தாயே. அதை நான் பற்றிக் கொண்டு உய்தி பெறுவேன்'' என்று வேண்டுகிறார்.

ஸ்ரீ மீனாட்சி பஞ்ச ரத்னம் என்ற ஐந்து சுலோகங்கள் அடங்கிய தோத்திர நூலில் மதுரை மீனாட்சியின் பெருமையைப் பேசுகிறார் சங்கரர். இத்தோத்திரத்தின் ஒவ்வொரு சுலோகத்திலும், கருணைக் கடலாகிய மீனாட்சி தேவியை நான் என்றும் வணங்குகிறேன் என்று கூறி முடிக்கிறார். இத்தேவி சுந்தரேசுவரரின் நாயகி. மக்களின் அச்சத்தை அகற்றுபவள், ஞானத்தை அருளுகின்றவள், அனாதியே மல மற்றவள், நீல மேனியள். பிரமதேவனால் பூசிக்கப்பட்ட திருவடியை உடையவள். நாராயணனின் உடன்பிறந்தவள். யாழ் குழல் முரசு முதலான வாத்தியங்கள் ஒலிக்கவும், அவ்வொலியைக் கேட்டு ரசிப்பவள். அரசிக்குரிய பவனி ஆடம்பரமும் உடையவள் என்றெல்லாம் ஒரு சுலோகத்தில் போற்றி அக் கருணைக் கடலுக்கு வணக்கம் செலுத்துகிறார். இத்தகைய தோத்திர நூல்களைப் பொருள் தெரிந்து தினந்தோறும் ஓதி உய்தி பெறுவோமாக.

வள்ளலாரின் திருவுள்ளம்

'முத்தமிழ்க் காவலர்'

திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், திருச்சி.

முன்னுரை:

நமது தமிழ்நாடு, ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்கள் பலர் தோன்றியருளிய சிறப்புடையதாகும். அவ்வரிசையில் அண்மைக் காலத்தில், சென்ற நூற்றுண்டில் (கி.பி. 1823—1874) தோன்றி வாழ்ந்திருந்தவர், நம்முடைய இராமலிங்க வள்ளலார். அவர் பற்பல பெருந் தனிச் சிறப்புகள் உடையவர். அவர் ஒரு சிறந்த ஞானியாகவும், கவிஞராகவும் ஒருங்கே திகழ்ந்திருந்தார். ஞானிகள் பலர் கவிஞராக இருந்ததில்லை. கவிஞர்கள் பலர் ஞானிகளாக விளங்கியதில்லை. இராமலிங்க வள்ளலார் சிறந்த ஞானியாகவும், கவிஞராகவும் ஒருங்கே விளங்கியிருந்த திறன், பெரிதும் வியந்து போற்றுதற்குரியதாகும். வள்ளலார் அருளிச் செய்த திருவருட்பாப் பாடல்கள், கற்பவரின் உள்ளமெலாம் கொள்ளை கொண்டு, 'தேன் கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து, ஊன்கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிக்கும்'' இயல்பு மிக்குத் திகழ்கின்றன.

மூவகை மனம்:

திருவருட் பாப் பாடல் ஒவ்வொன்றும், ஆயுந்தொறும் ஆயுந்தொறும், அரிய பல கருத்துக்களைச் சுரக்கும் அருள் ஊற்றுகவும், அறிவு அநுபவக் களஞ்சியமாகவும் விளங்குகின்றது. அவற்றை ஓதுந்தோறும் நம் மனம் மாசுகள் அகன்று, தெய்விக நலம் பெறும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. வள்ளலார் தமது பாடல்களில், ஆங்காங்கே நமது மனித மனத்தின் இயல்புகளைப் பலவகைகளில் சுவை மிக எடுத்து விளக்குகின்றுர்! சிறப்பாக, நம் மனித மனத்தைப் பேதை மனம்—குரங்குமனம் — ஏவல் மனம் என மூவகைகளில், அவர் குறிப்பிட்டருளி யிருக்கின்றுர். இவற்றை முறையே சேய்மைமனம், ஆய்வுமனம், தூய்மைமனம் எனவும் குறிப்பிடலாம். தூய்மை மனத்தைச் சித்தி மனம் என்று குறிப்பிடுதலும் பொருந்துவதாகும்.

மகாதேவமாலை:

திருவருட் பாவில் 'மகாதேவமாலை' என்னும் பகுதியில் உள்ள ஒரு பாடலில் பேதை மனத்தின் இயல்புகளை வள்ளலார்சுட்டிக்காட்டி விளக்குகின்றுர். அவர் தம்முடைய மனத்தின் இயல்பைக் குறித்துக் கொள்வது போலப் பாடியிருந்தாலும், உண்மையில் அவர் நம்முடைய மனத்தின் இயல்புகளைப் பற்றியே குறிப்பிடுகின்றுர் எனலாம். நாம் நம் குற்றங்களை மறந்துவிட்டு, பிறர் குற்றங்களையே ஆராய்ந்து காண முற்படுவோம். ஆனல் சிறந்த ஞானிகளோ, பிறர் மீது குற்றங்களைக் கூற விரும்பாமல், பிறர் குற்றங்களைத் தம் மீது ஏறிட்டுக் கொள்ளும் இயல்பினராக விளங்குவர். இது ஞானிகள் அனைவருக்குமே உரிய பொது இயல்பாகும். அம்முறையில் நம் மனத்தின் இழிந்த இயல்புகளைத் தம் மனத்தின் இயல்புகள்போல வைத்துப் பாடுகின்றுர் வள்ளலார்.

பேதை மனம்:

உலகில் மரம் மலை மாடி முதலியவற்றில் நாம் ஏறுகின்றேம். அவைகள் நம்மீது ஏறுதல் இயலாது. ஆனல் இவ்வியல்பிற்கு மாருகச் சில பொருள்கள் உண்டு. நாம் வண்டியில் ஏறுகின்றேம். வண்டி நம் மீது ஏறுவதும் உண்டு. ஆனல் ஏறுதலும் ஏறப்படுதலும் ஒரே சமயத்தில் நிகழ்வதில்லை. ஒன்றே ஒன்றில் மட்டும், இரண்டும் ஒரு சேர நிகழும். தயிர் கடையும்போது மத்து தயிரில் ஏறும். தயிர் மத்தில் ஏறும். அதனல் தயிரும் மத்தும் ஆகிய இரண்டும் கலங்கி அலையும். அதுபோல நம்முடைய மனித மனம், உலகியலாகிய வஞ்சக வாழ்க்கையில் மயக்கமுற்று, விருப்பம் மிக்கு, மதங் கொண்டு, பித்தம் பிடித்து, உழலத் தொடங்குகின்றது. அம்மனத்தால் நாம் படும் துன்பம், பேயின் பிடியுள் சிக்கியவர்கள் படும் தொல்லைகளிலும் கொடியதாக உள்ளது. இங்ஙனம் அறிவற்ற யான் படுகின்ற துன்பத்திற்கு ஓர் எல்லையே இல்லை எனக் கூறி வருந்துகின்றுர் வள்ளலார்.

> மத்தேறி அலைதயிர்போல் வஞ்ச வாழ்க்கை
> மயலேறி விருப்பேறி மதத்தி னேடு
> பித்தேறி உழல்கின்ற மனத்தால் அந்தோ
> பேய்ஏறி நலிகின்ற பேதை யானேன்

எனவரும் திருவருட்பாப் பாடலில், நம் பேதை மனத்தின் இயல்பினை, வள்ளற் பெருமான் நன்கினிது விளக்கியிருத்தலைக் காணலாம்.

குரங்கு மனம்:

இனி, வள்ளலார் நமது குரங்கு மனத்தின் இயல்பினையும், தமது பாடல்களில் ஆங்காங்கே பல இடங்களில் அழகுற எடுத்து விளக்கிக்கூறியிருக்கின்றுர். அவற்றுள் ஒன்றனை மட்டும்

ஈண்டுக் குறிப்பிடுதல் சாலும். சென்னைக் கந்தகோட்டத்து முருகனைப் பற்றிய தெய்வ மணிமாலையில், தம்முடைய குரங்கு மனத்தின் இயல்பினைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். ''சென்னையில் கந்தகோட்டத்தில் வளர் தலமோங்கு கந்த வேளே! தண்முகத் துய்ய மணி, உண்முகச் சைவமணி, சண்முகத் தெய்வ மணியே! என்னுடைய மனம் ஒரு குரங்கு ; வெறும் குரங்கு அன்று; பெரும் முரட்டுக் குரங்கு; அது பேய் கொண்டு திரிகின்றது ; கள்ளுண்டு கலங்குகின்றது, கோலினால் மொத் துண்டு உழல்கின்றது ; பித்துண்டு அலைகின்றது; அம்மட்டுமோ? குயவனின் சக்கரம்போலச் சுழல்கின்றது. சிறுவர்கள் விளையாடுகின்ற பந்து போல மேலும் கீழுமாக மாறி மாறித் தாவிச் செல்லுகின்றது. புலி சிங்கம் போன்ற கொடிய விலங்குகளைப் போலச் சீறிப் பாய் கின்றது. பெரிய சூறாவளிக் காற்றில் சிக்கிச் சுழல்கின்ற காற்றாடியைப் போல வானத்தில் பறக்கின்றது. இதனைக் காலவடிவம் என்பதா? இந்திர சாலவடிவம் என்பதா? அல்லது என் னுடைய கர்ம வடிவம் என்பதா? என்று தெரியவில்லை. உன்னுடைய திருவடிகளை நினை யாமல் பொன்னாசை மண்ணாசை பெண்ணாசை என்னும் மூவகை ஆசைகளில் அழுந்தித் திரியும் இம்மனத்தால், யான் படுகின்ற கொடுமைகளை என் வாயினால் எடுத்துச் சொல்வது இயலாது. யான் என் செய்வேன்! என் செய்வேன்!'' என்று, இராமலிங்க வள்ளலார் நம்முடைய குரங்கு மனத்தின் இயல்புகளை விவரித்துப் பாடு கின்றார்.

பேய்கொண்டு, கள்ளுண்டு, கோலினால்
மொத்துண்டு, பித்துண்ட வன்குரங்கோ?

பேசுறு குலாலனாற் சுழல்கின்ற திகிரியோ?
பேதைவிளை யாடு பந்தோ?

காய்கொண்டு பாய்கின்ற வெவ்விலங்கோ?
பெருங் காற்றினால் சுழல் கறங்கோ?

காலவடிவோ? இந்தர சால வடிவோ? எனது
கர்ம வடிவோ? அறிகிலேன்

தெய்வமணி மாலை:

இங்ஙனம் குரங்கு மனத்தின் கொடுமை களை நன்கனம் விவரித்த வள்ளலார், கந்த கோட்டத்து முருகப் பெருமானிடம் ஒரு வேண்டுதல் புரிகின்றார். உலகத்தில் பெரும் பாலான ஞானிகள், மனை மக்கள் சுற்றம் என்னும் மாய வலையிலிருந்து விடுபடுதலையே, பெரிதும் விரும்பியுள்ளனர். இவ்வுலக வாழ்வும், மனிதப் பிறப்பும் வேண்டாம் எனவே, பெரிதும் பெறுத்துப் பாடியுள்ளனர். ஆனால் ''மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மா நிலத்தே'' என நாயன்மார்களில் திருநாவுக் கரசரும், ''இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண் டேன்'' என்று ஆழ்வார்களில் தொண்டரடிப் பொடியாழ்வாரும் தான் பாடியுள்ளனர். அது போல நம்முடைய வள்ளற் பெருமானும், இல்லற வாழ்வின் தொல்லைகளை நீக்கியருள்க என்று பாடிய ஏனையரைப் போல இல்லாமல், நல்லதோர் இல்லற வாழ்வை முருகப் பெரு மான்பால் நயந்தினிது வேண்டுகின்றார்.

அலையிலாச் சிவஞான வாரியே! ஆனந்த
அமுதமே! குமுத மலர்வாய்
அணிகொள்பொற்கொடி பசுங்கொடி இருபுறம்
படர்ந்து அழகுபெற வருபொன் மலையே!
தலைவர்புகழ் சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்த வேளே!
தண்முகத் துய்யமணி! உண்முகச் சைவமணி!
சண்முகத் தெய்வ மணியே!

வள்ளலார் விரும்பும் மனைவாழ்வு:

இல்லற வாழ்விற்கு அன்பு மிக்க மனைவி ஒருத்தி வேண்டும். அவள் உயர் குலத்தில், உயர்குடியில் தோன்றியவளாக இருத்தல் வேண்டும் என்றும், வள்ளலார் விரும்புகின்றார். அம்மட்டோ! நல்ல புதல்வன், செல்வம், துணை வன், நண்பன், வேலையாள், வசதியான இடம் ஆகிய வீடும் வேண்டும் என்கின்றார். நிராசை (விருப்பமின்மை), அதுவும் 'நிலையுறும் நிரா சை' ஆகிய மனைவியும், சாந்தம் என்னும் புதல் வனும், உதார குணம் என்னும் நல்ல செல்வ மும், அறியாமை இருளை நீக்குகின்ற அறிவு ஆகிய துணைவனும், நிராங்காரம் (செருக்கு இன்மை, பணிவுடைமை) என்னும் நண்பனும், சுத்தம் (தூய்மை) மிகுந்த மனமென்னும் ஏவ லாளனும், சகலம் (பகல்), கேவலம் (இரவு) இல்லாத நல்ல வசதியான இடமாகிய வீடும், ஆகியவைகளைப் பெற்று இன்பமாக வாழ்கின்ற வாழ்வை அருளுவாயாக! என்பது, இராம லிங்க வள்ளலாரின் வேண்டுகோள்.

நிலையுறு நிராசையாம் உயர்குலப் பெண்டிரொடு,
நிகழ் சாந்தமாம் புதல்வனும்,
நெறிபெறும் உதாரகுணம் என்னும்நற் பொருளும்
மருள்நீக்கும் அறிவாம் துணைவனும்,
மலைவறு நிராங்கார நண்பனும், சுத்தமுறும்
மனம் என்னும் நல்ஏவலும்,
வருசகல கேவலம் இலாத இடமும் பெற்று,
வாழ்கின்ற வாழ்வு அருளுவாய்!

சிறந்த இனிய இந்தத் தெய்வமணிப் பாடலில் ''சுத்தம் உறும் மனம் எனும் நல் ஏவலும்'' என்று வள்ளலார் குறித்திருப்பது, இங்குச் சிறப்பாகக் கருதற்பாலது. மனம் சுத்தமாக இருக்க வேண்டும். நாம் அதற்கு ஏவல் செய்யா மல், நமக்கு அது ஏவல் செய்ய வேண்டும், என்று கூறியிருப்பது சிந்திப்பதற்குரியது. இதனையே ஏவல் மனம் அல்லது தூய்மை மனம் என முன்னர்க் கண்டோம்.

தூய்மை மனம்:

இத்தகைய தூய்மை மிக்க மனம்தான், கூத்தப் பெருமான் எழுந்தருளி விளங்குவதற் குரிய உண்மையான கோயிலாகும். இம் மன மாகிய கோயிலை நாம் தூய்மையாக வைத்தி ராமல், அதன்கண் காமம் வெகுளி மயக்கம் முதலிய அழுக்குகளை மிகுதியாகச் சேர்த்து

வைத்திருப்பதனுல்தான், கூத்தப் பெருமான் நம் மனக் கோயிலில் இராமல், தில்லைக் கோயிலுக்குச் செல்ல வேண்டியவனுகி விட்டான். நாம் நம் உடம்பின் புறத்தே அழுக்கெதுவும் படாதபடி, எவ்வளவோ முயற்சிகள் எடுத்துக் கொள்ளுகின்ருேம். ஆனல் மனத்தில் ஏராளமான அழுக்குகளை நிரப்பி வைத்துக் கொண்கின்ருேம். நம்முடைய தலைமுடி முதலியன கோணலாக இல்லாமல் பல வகைகளில் முயன்று கண்ணுடியின் முன்நின்று பார்த்து அழகு படுத்திக் கொள்கின்ருேம். ஆனல் மனத்தை அங்ஙனம் கோணல்கள் இல்லாமல் அழகு படுத்தி வைத்துக்கொள்ள நினையாமல், அருவருக்கத் தக்க நிலையில் வைத்துக் கொண்டிருக்கின்ருேம். மனக்கோணல்களை யெல்லாம் போக்கி, நாம் நம்முடைய மனத்தை ஒரு சிறந்த கோயிலாக மாற்றி யமைக்க வேண்டும்.

ஒளி வழிபாடு:

நம் தமிழ் நாட்டில் ஆயிரக்கணக்கான கோயில்கள் இருப்பினும், மூன்று கோயில்கள் மிகவும் முதன்மையானவை. அவை திருவொற்றியூர், தில்லை, திருவாரூர் என்பனவாகும். 1,300 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்த திருநாவுக்கரசர் ''திசை எட்டும் தெரிப்பதற்கு முன்னே பின்னே திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே'' என்று திருவாரூர்க் கோயிலின் பழமையைக் குறிப்பிடுகின்ருர். பழமை மிக்க இம் மூன்று கோயில்களும், வள்ளற் பெருமானின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தவை. திருவாரூரிலும் திருவொற்றியூரிலும் தியாகராசரும், தில்லையில் நடராசரும் எழுந்தருளி விளங்குகின்றனர். தொன்மை மிக்க இம் மூன்று கோயில்களிலும் பண்டைக் காலம் தொட்டே, ஒளி வழிபாடு நிகழ்ந்து வருகின்றது. அதனுலேயே வள்ளற் பெருமான்சோதி தரிசனம் என்னும் ஒளி வழிபாட்டினையே நமக்குப் பெரிதும் அறிவுறுத்தியருளினுர்.

முடிவுரை:

ஒளி வழிபாடு ஒரு நாட்டார்க்கோ, ஒரு இனத்தார்க்கோ, ஒரு சமயத்தார்க்கோ மட்டுமே உரியதன்று. எல்லாருக்குமே உரியதானதாகும். இந்த ஒளி வழிபாட்டை வற்புறுத்தியவர், வள்ளலார். ''அருட்பெருஞ் சோதி'' என்பது எல்லாம் வல்ல சிவம் ஆகிய தந்தை; 'தனிப் பெருங் கருணை' என்பது அருளே உருவமாகக் கொண்ட சத்தியாகிய தாய். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். அருட்பெருஞ் சோதி தரிசனம், ''அம்மையப்பர்'' வழிபாடேயாகும். ''அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்று அறிக; அம்மையப்பர் அப்பரிசே வந்தளிப்பர்'' என்பது சிவஞானச் செல்வர்கள் கூறிப்போந்த திருமொழியாகும்.

வாழ்க வள்ளலார் புகழ்!

வளர்க வள்ளலார் நெறி!

அருட்பெருஞ் சோதி! தனிப் பெருங்கருணை!

இறையருள் நூல்கள், இன்பவூற்று

எத்தகை இன்ப ஊற்ருய், இறையருள் நூல்கள் உள்ள!
அத்தகை யவற்றை, அந்தோ! அறிவிலார் கடினம் என்பர்!
வித்தகக் கண்ணன் ஊதும் வேய்ங்குழல் இசைபோல், இன்பம்
மிக்கொளிர்ந்து, அறிஞர்க்கு ஆரா விருந்தென விளங்கும் நன்றே!

தமிழாக்கம், ந. ரா. முருகவேள்.

"How charming is divine philosophy!
Not harsh and crabbed as dull fools suppose;
But musical as is Apollo's lute
And a perpetual feast of nectar'd sweets
Where no crude surfeit reigns ...."

—John Milton, Comus.

சீர்காழிக் கோவை

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை :

நம் நாட்டில், சென்ற பத்தொன்பதாம் நூற்றுண்டில், தமிழ்ப் புலமை வானில் மிகவும் ஒளிபரப்பிப் புகழ் பெற்றுத் திகழ்ந்தவர்களுள், பெரிதும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர்கள் மூவர்! அவர்கள் முறையே பெரும் புலவர் மீனுட்சி சுந்தரம் பிள்ளை (1815—1876), வடலூர் வள்ளல் அருட்டிரு இராமலிங்க அடிகள் (1823—1874), யாழ்ப்பாண நல்லூர் சிவத்திரு ஆறுமுக நாவலர் பெருமான் (1822—1874) என்பவர்கள் ஆவர். இம்மூவரையும் 19ஆம் நூற்றுண்டின் 'முப்பெருந் தமிழ்ச் சுடர்மணிகள்' என்று கூறுதல் பொருந்தும்.

சீர்காழிக் கோவை :

இம்மூவருள் பெரும் புலவர் மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பாடிய, எத்தனையோ பல நூல்களுள், சீர்காழிக் கோவை என்பது சிறந்த தொன்றுகும். மணிவாசகப் பெருமான் பாடிய திருச்சிற்றம்பலக் கோவையார் முதலாக, நம் தமிழ் இலக்கியங்களில் எத்தனையோ பல கோவை நூல்கள் இருக்கின்றன. கோவை நூல் என்ற அமைப்பு ஒன்றேயாயினும், அதனை அவரவர்கள் பாடியிருக்கும் திறம் வெவ்வேறுகும். அந்தந்த ஆசிரியரின் கல்வி, புலமைநலம், மனப்போக்கு, பண்பு நலம் முதலியன, அவ்வந் நூல்களில் இயல்பாகப் புலப்படக் காணலாம்.

அகப்பொருள் தமிழ் இலக்கண நெறிமுறைகளைப் பிறழாமல் தழுவியிருப்பது மட்டுமின்றி, ஒவ்வொரு பாடலிலும் சீர்காழியின் சிறப்பும், அங்கு எழுந்தருளி யுள்ள சிவபெருமானின் அருட்டிறம், சீர்காழியைச் சுற்றியுள்ள பிற தலங்களின் மாட்சி, சீர்காழியில் தோன்றியருளிய சம்பந்தரின் மாண்பு, பிற நாயன்மார்களின் வரலாற்றுச் செய்திகள், சைவ நூற் கருத்துக்கள், சங்க இலக்கியப் பொருள் நலங்கள், உலகியல் அநுபவக் குறிப்புக்கள், நல்ல இனிய கவிதை வளம், சொற் பொருள் நுட்பச் சுவைகள், முதலிய பலவகைக் கலைக் கூறுகளும் அமையும்படி, பெரும் புலவர் மீனுட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள், சீர்காழிக் கோவையை இயற்றியுள்ளார். பொதுவாகக் கோவை நூல்களுள் 400 பாடல்களும் துறைகளுமே அமைந்து காணப்படும். ஆனுல் அவற்றையே நமது பெருங் கவிஞர் அவர்கள், 531 கவிதைகளும் துறைகளுமாக அமையும்படி யாத்துள்ளார்கள். அவை அனைத்தையும் விரிப்பிற் பெருகும், தொகுப்பின் எஞ்சுமாதலின், அவற்றில் ஒரு சிலவற்றை மட்டும், ஈண்டுக் கண்டு அமைவோம்.

சம்பந்தர் :

(1) சீர்காழிக் கோவையில், சீர்காழியில் தோன்றியருளிய சம்பந்தரைப் பற்றிய பல செய்திகளை, அகப்பொருள் துறைகளுக்கும் இலக்கணத்திற்கும் பொருந்த, ஆங்காங்கே கற்பனை நலம், சிறந்து திகழும் வண்ணம் அமைத்துப் பாடிச் செல்கின்றுர், பெரும் புலவர் மீனுட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள்! தலைவியின் கண்கள், தலைவனுக்கு முதலில் காதல் நோய் தோன்றக் காரணமாயின. அவைகளே பின்னர், அந்நோய் தணிக்கும் மருந்தாகவும் ஆயின. அத்தன்மை, திருஞான சம்பந்தப் பெருமான் மதுரையில் பாண்டிய மன்னருக்கு முதலில் தீப் பிணியைப் 'பையவே செல்க' எனப் பணித்து வெப்பு நோய் உண்டாகச் செய்ததனையும், அவரே பின்னர், 'மந்திரமாவது நீறு' என்னும் திருநீற்றுப் பதிகம் பாடித் திருநீறு பூசி அவ் வெப்பு நோயைத் தணித்ததனையும் போன்று இருந்ததாம்.

(2) தலைவன் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிகின்றுன். அப்போது அவன், ''சம்பந்தர்க்கு ஆயிரம் பொன் வழங்கியருளிய திருவாவடுதுறைப் பெருமானின் திருவருளால், செல்லுதற்கரிய பாலைநில வழியே சென்று, உங்கள் தலைவிக்குரிய முலைவிலைப் பொருளை யான் விரைவில் தேடிக் கொணர்வேன்'' என்று தோழியிடம் ஆறுதல் கூறிச் செல்கின்றுனும்.

(3) தலைமகன் வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிதலை உணர்ந்த தலைமகள், ''தலைவர் பொருள் தேடி வருதல் குறித்துச் செல்ல இருக்கின்றுர் போலும்! சீர்காழியில் கவுணியர் குலத்தில் தோன்றிய திருஞானசம்பந்தப் பெருமான், பாலை நிலத்தை நெய்தல் நிலமாக மாறும்படியும், திருமயிலையில் என்பை அழகிய பெண்ணுகும்படியும், அற்புதங்கள் நிகழ்த்தி அருளினர். தம்முடைய பிரிவாற்றுமையால் யான் உயிர் துறந்து இறந்து போயினுல், மீளவும் என்னை உயிர்ப்பித்து எழுப்புவதற்கு, நம்முடைய தலைவர் அத்தகைய அற்புதச் செயல்களை நிகழ்த்துவதற்குக் கற்றுக் கொண்டிருக்கின்றுரோ?'' என்று தோழியிடம் வினவுகின்றுளாம்.

(4) தலைமகள் முன்பனிப் பருவம் கண்டு வருந்துகின்றுள். தம்முள் இகல்கொண்டு போர் இட முனைந்த அரசர்கள் இருவரை, ஒற்றுமைப் படுத்தி வைத்துப் போர் நிகழாமல் தடுத்து அமைதி ஏற்படுத்துதற்காகச் சென்ற தலைவன், தான் மீளுதற்குரிய கார் காலம் கடந்து கழிந்ததாயினும், இன்னும் வந்து சேர்ந்திலன். ஆனுல் கொடுமை மிக்க முன்பனிப் பருவம் வந்து சேர்ந்தது. அது தலைவனைப் பிரிந்த தலைவியைப் பெரிதும் வருத்துகின்றது. அந்நிலையில் என் செய்வது? என்று தலைமகள் கவலை கொள்கின்றுள். ''கொங்கு நாட்டில் திருக்கொடி மாடச் செங்குன்றூர் என்னும் தலத்திற்குச் சம்பந்தர் சென்றிருந்தபோது, அங்கே முன் பனிப் பருவ காலத்தில் கொடுமையான குளிர் மிகுதியினுல், கொடியதொரு நளிர் சுரம் எங்கும் பரவி மக்களை வருத்தியது. அப்போது சம்பந்தர் ''அவ்வினைக்கு இவ்வினையாம் என்று சொல்லும் அஃது அறிவீர்; உய்வினை நாடாதிருப்பதும் உந்தமக்கு ஊனம் அன்றே ; கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும் நாம் அடியோம்; செய்வினை வந்து எம்மைத் தீண்டப்பெறு திருநீலகண்டம்'' என்னும் திருப்

பதிகம் பாடி, அக்கொடிய நோயை நீக்கியருளினர். ஆதலின், நாமும் அத்திருநீலகண்டத் தமிழ்த் திருப்பதிகத்தைப் பாடி, நம் வருத்தத்தைத் தணித்துக் கொள்வோம்'' என்று தலைவி ஒருவாறு ஆறுதல் அடைகின்றுளாம்.

(5) தலைவன் தலைவியைப் பிரிந்து, பரத்தையின் இல்லத்திற்குச் செல்லப் புறப்படுகின்றான். அப்போது தலைவியின்பால் இருந்த சிறு புதல்வன் ஓடிச்சென்று, தேம்பித் தேம்பி அழுது தன் தந்தையை அழைத்தான். தன் மகன் தன்னை விடாமற் பொருமிப் பொருமி அழுதலைக் கண்ட தலைவன், அதனால் பரத்தையின் இல்லத்திற்குச் செல்ல முடியாமல் வீட்டிலேயே தங்கிவிட்டான். இந்நிகழ்ச்சியைத் தலைவி தன் தோழியிடம் சொல்லி, தன் குழந்தையைப் பாராட்டி மகிழ்கின்றாள்! ''தோழியே! இன்று நம்முடைய இந்தச் சிறுவன் யாது செய்தான் தெரியுமா? தன் தந்தைக்கு இரக்கம் உண்டாகுமாறு பொருமிப் பொருமி அழுது, அப்பா அப்பா என்று அழைத்தான். அதனால் அவர் தாம் விரும்பிய அந்த இடத்திற்குச் செல்ல முடியாமல், இங்கேயே தங்கி இருந்து விட்டார். இச் சிறுவனின் செயல், தன் தந்தையாகிய சீர்காழித் தோணியப்பரை அருள்மிகுமாறு பொருமிப் பொருமி அழுது அழைத்த ஞானசம்பந்தப் பெருமானின் செயலைப் போல இருந்தது'' என்கின்றுளாம் தலைவி.

பிற நாயன்மார் குறிப்புகள் :

(1) தலைவன் தலைவியை அடைதற் பொருட்டு, பலகால் அவள் தங்கியிருக்கும் தினைப் புனத்திற்குச் சென்று வருகின்றான். அப்போது தலைவியின் தோழி, தலைவனுக்கு அருமை செய்து அயர்த்து, அவன்பால் சினங் கொண்டவள்போலச் சீறிப் பேசிப் பலவாறு தலைவனை அலைக்கழிக்கின்றாள். ஆயினும் அத்தோழியே பின்னர்த் தலைவனையும் தலைவியையும் சேர்த்து வைத்து, அவர்கள் முறைப்படி மணந்து கொள்ளுதற்குத் துணை புரிகின்றாள். அந்நிலையில் ''செறுஅச் சிறுசொல்லும் செற்றார்போல்நோக்கும் உறுஅர் போன் றுற்றார் குறிப்பு'' என்று, திருக்குறள் கூறும் உண்மையை உணர்ந்து கொண்டு, தலைவன் மகிழ்கின்றானாம்.

''திருநாவுக்கரசர்க்குத் திருவதிகை வீரட்டானேச்சுரப் பெருமான் முதலில் தம் மறக் கருணையால் கொடிய சூலை நோயை உண்டாக்கினார். அப்பெருமானே பின்னர் அதனை நீக்கித் தம் அறக் கருணையால் அவரைப் பெரிதும் ஆட்கொண்டு அருள் புரிந்தார். அதுபோலவே இந்தத் தோழியும் என்னைப் பலகால் வன்சொல் கூறி வருத்தினளாயினும், இதுபோது என்பாற் பெரிதும் தண்ணளியுடையவளாய்ப் பெரு நலம் புரிந்துள்ளாள்'' என்கின்றானாம் தலைவன்.

(2) தலைவன், ஓர் அழகிய பூம்பொழிலில் தலைவியை முதற்கண் கண்டு தலைப்படுகின்றான். அவள்பால் தன் காதலன்பைப் பல வகைகளில் கூறி இணக்குவித்து, 'யான் நின்னைப் பிரியேன், பிரிந்தால் உயிர் தரியேன்' என்று சூளுரை புகல்கின்றான். இதனை அகப்பொருள் இலக்கணத்தில் ''பிரியேன் என்றல்'' என்னும் துறையாகப் புலவர்கள் கூறுவர். இவ்வகப்பொருள் இலக்கணத்தின் துறைக் கருத்து, நம் சீர்காழிக் கோவையில் பின்வருமாறு பாடப் பெற்றிருக்கின்றது. ''சீர்காழியைப் போல் விளங்கும் தலைவியே! முன்னொரு காலத்தில், திருவொற்றியூரில், மகிழ மரத்தின் அடியில், சுந்தரமூர்த்தி சுவாமிகள், என்றும் உன்னைப் பிரியேன் என்று சங்கிலி நாச்சியாருக்குச் சூளுரை செய்து கொடுத்துப் பின்னர் அச்சூளுரை தவறியதனால் அடைந்த துன்பங்களை, யான் நன்றாக அறிவேன். ஆதலின் நான் சூளுரை தவறுபவன் என்று நீ கருதற்க. நின்னை எஞ்ஞான்றும் பிரியமாட்டேன் என்று, நம் சீர்காழியில் உள்ள கண்கண்ட அருட்பெருந் தெய்வமாகிய சட்டைநாதர் முன்னே, யான் உனக்குச் சத்தியம் செய்து தருகின்றேன்'' என்கின்றானும் தலைவன்.

(3) அகப்பொருள் நூல்களில், ''அறத்தொடு நிற்றல்'' என்னும் பகுதியில், பூத்தரு புணர்ச்சி, களிறுதரு புணர்ச்சி, புனல்தரு புணர்ச்சி எனப் பல துறைகள் வரும். அவற்றுள் 'புனல்தரு புணர்ச்சி' என்பது ஒன்று. தலைவி தினைப்புனத்தின் அணிமையில் உள்ள, ஓர் அருவி அல்லது ஆற்றில் நீராடச் செல்கின்றாள். அங்கே அவள் வெள்ளத்தால் ஈர்க்கப் பெற்று உயிர் துறக்கும் நிலையில் தத்தளிக்கின்றாள். அதுபோது எதிர்பாராத வகையில் அங்கு வந்த தலைமகன் அவளைக் காப்பாற்றுகின்றான். தோழி அந்த நிகழ்ச்சியை எடுத்துக் கூறி, தலைவி அவனையே மணக்க விரும்புதலைத் தாய்க்குத் தெரிவிக்கின்றாள். சீர்காழிக் கோவையில் இத்துறைக்குரிய செய்யுள் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகத் திகழ்கின்றது.

''திருவிடைமருதூரில் ஏகநாயகன் எனப் பெயர் பெற்று விளங்கும் சீர்காழிப் பெருமானின், சோழ வள நாட்டுக்குரிய காவிரியாற்றின் ஒரு துறையில், தலைவி நீராடுவதற்காக இறங்கினாள். வெள்ளத்தின் வேகம் அவளை ஒரு சுழியில் இழுத்துச் சென்றது. அவள் அச்சுழியில் அகப்பட்டு அழுந்தி மயங்கி மிதந்தாள். திருக்கயிலையில் ஒரு பொய்கையில் மூழ்கிய திருநாவுக்கரசர், திருவையாற்றுக் குளத்தில் எழுந்தமை போல், ஒரு துறையில் மூழ்கிய தலைவி, இத்தலைவராற் காவிரியின் மற்றொரு துறையின் கரையில் காப்பாற்றிவிடுக்கப் பெற்றாள். அதனால் தன்னுயிரைக் காப்பாற்றிய தலைவனையே தலைவி மணக்க விரும்புகின்றாள்'' என்பது, தாய்க்குத் தோழியின் கூற்று.

(4) அகப்பொருள் இலக்கணத்தில் ''நாண் அழிபு இரங்கல்'' என்பது ஒரு துறை. தலைவனுடன் உடன்போக்குச் செல்ல நேரும் தலைவி, தான் தன்னுடைய நாணத்தை இழந்து, பிறர் பழிக்கும்படியாகக் களவு நிலையில் தலைவனுடன் செல்ல நேர்ந்தமை குறித்துக் கவல்கின்றாள். ''உயிரினும் சிறந்த நாணத்தைக் கைவிடுதலும் ஒரு பெண்ணிற்கு அடுக்குமோ? நாணத்தைக் கைவிட நேரும் பெண் பிறப்பைக் காட்டிலும், பேய்ப் பிறப்பே மேலாகும். அதனாலன்றோ, காரைக்கால் அம்மையார் தம் பெண் பிறப்பை ஒழித்து, இறைவன்பால் வானமும் மண்ணுமெலாம் வணங்கும் பேய்ப் பிறப்பை வேண்டிப் பெற்றார்'' என்று தலைவி குறிப்பிடுகின்றுளாம்.

—oOo—

வித்தகப் பெருங்கவிஞர் மீனாட்சிசுந்தரனார்

முன்னுரை :

ஒருவரின் உள்ளத்தில் புதிய புதிய கருத்துக்கள், கற்பனைகள் உதிப்பதும், அவற்றை அவர் வெவ்வேறு வகையான கவிதை—கட்டுரை—நூல்—வடிவங்களில் திறம்பட அமைப்பதும், ஒரு சிலர் நினைப்பது போல எளிதான செயல் அன்று. மிகவும் கடினமான—இடர்ப்பாடான செயல்களுள் ஒன்று அது.

''பெற்றவட்கே தெரியும் அந்த வருத்தம்; பிள்ளை பெறுப் பேதை அறிவாளோ?''

என்று, தாயுமான அடிகளார் பாடுவதுபோல, அதன் அருமைப்பாட்டினை, பிறர் சிறிதும் அறிதல் இயலாது. பிற பருப்பொருள்களை நாம் கருவிகளின் துணை கொண்டு செய்து உருவாக்குதல் போல, நாம் நம் முயற்சியினால் அரிய இனிய சிறந்த கருத்துக்களை உருவாக்குதல் இயலாது. கருத்துக்கள் தாமாகவே நம் உள்ளத்தில் இறையருளால் உதித்து உருப்பெறுதல் வேண்டும். மேலைநாட்டு அறிஞர்கள் பலர் தத்தம் நூல்களில், தாம் கட்டுரையோ கவிதையோ எழுதத் தலைப்பட்டு அடைந்த பல இன்னல்களையும் அநுபவங்களையும் அடைந்தவாறே பிற்கால மக்களுக்குப் பயன்படும் பொருட்டுக் கிளந்து கூறி மொழிந்திருக்கின்றனர்.

(1) ஏ. ஜி. கார்டினர் என்னும் புகழ் ஓங்கிய ஆங்கில எழுத்தாளர், தாம் எழுதிய ''கடற்கரையிற் கூழாங்கற்கள்'' என்னும் நூலின் கட்டுரை ஒன்றில், ''எழுதுவது என்பது மட்டுமே கடினம் அன்று! அதற்குரிய பொருளையோ—தலைப்பையோ—தேர்ந்தெடுப்பதும் கூட, மிகவும் கடினமான ஒரு செயல்! ஏதேனும் எழுதவிரும்பி முயலும்போதெல்லாம், அதற்கு உரிய பொருளோ கருத்தோ ஒன்றும் தோன்றாமையால், கைந் நகங்களைத் திருத்துவதும், எழுதுகோல்களைக் கூர்மையாக்குவதுமாகவே, பெரும்பாலும் காலங் கழிகின்றது. இவற்றால் மேலும் மேலும் திகைப்பு உண்டாகின்றதேயன்றிக் கருத்தொன்றும் உதிக்கின்றிலது'' எனக் குறிப்பிடுகின்றார்.

(2) கஸ்டாவ் ஃபிளாபர்ட் என்னும் பிரசித்தி பெற்ற ஃபிரெஞ்சு நூலாசிரியர், ''ஏதேனும் ஒரு சிறு சொல் தடைப்பட்டு விட்டால், அதனைக் கண்டுபிடிப்பதற்காகக் கைகளில் தலையை வைத்துக் கொண்டு, வறண்டு போன நற்பேறற்ற மூளையினின்று அச்சொல்லை வலிந்து கசக்கிப் பிசைந்து முயன்று வருவித்தற்பொருட்டு, ஒரு நாள் முழுவதும் உட்கார்ந்திருக்க நேரும் துன்பம் எத்தகையதென்று நீ அறிய மாட்டாய்! கலைத் துறையிற் கடினமான உழைப்பு இன்றியமையாததாக இருக்கின்றது. ஆதலின், உண்மையிலேயே எழுதுதலால் நேரும் வேதனைகளை யான் நன்குணர்கின்றேன்'' எனத் தம் நெருங்கிய நண்பர் ஆகிய ஜார்ஜ் சேண்ட் என்பவருக்குத் தெரிவிக்கின்றார்.

(3) ஏ. இ. அவுஸ்மன் என்னும் ஆங்கிலக் கவிஞர் ஒருவர், பின்வருமாறு தம்முடைய அனுபவம் ஒன்றை, எழுதுகின்றார் : ''யான் ஒரு சமயம் ஒரு கவிதை எழுத நினைத்துத் தொடங்கினேன். முதல் இரண்டு செய்யுட்களை (Stanzas) ஒருவாறு எழுதி முடித்தேன். மூன்றாவது செய்யுள் ஒன்றை எழுத முயன்றேன். அஃது எளிதில் வருவதாக இல்லை. சிறிது ஓய்வு எடுத்துக் கொண்டு, தேநீர் அருந்திய பின்னர்ச் சிறிது இடர்ப்பட்டு அம்மூன்றும் செய்யுளை எழுதி முடித்தேன். கவிதை முடிவதற்கு நான்காவது ஒரு செய்யுளும் தேவைப்பட்டது. அதனை எழுத எவ்வளவோ முயன்று பார்த்தேன். அஃது அறவே வர மறுத்துவிட்டது. எங்ஙனமேனும் எழுதியே தீர வேண்டியிருந்தமையால், அது மிகவும் தொல்லையான வேலையாகவே இருந்தது. அதனை யான் 13 முறைகள் திருத்தித் திருத்தித் திரும்பத் திரும்ப எழுதிப் பார்த்தேன். அப்போதும் அது செவ்வியதாக அமையவே இல்லை. பின்னர்ப் பன்னிரண்டு மாதங்கள் வரையிற் காத்திருந்து, மிகவும் முயன்றே அதனை முடிக்க வேண்டி நேர்ந்தது. அதற்குப் பின்னர்தான் அஃது ஓரளவு திருத்தமாக அமைவதாயிற்று.''

(4) இவ்வாறே மிகவும் புகழ் பெற்றவரும், உலகப் பெருங் கவிஞர்களுள் ஒருவராக மதிக்கப்பெறுபவரும் ஆகிய வில்லியம் வேர்ட்ஸ்வொர்த் என்பவர் (1770—1850), ''குயிலுக்கு (To the Cuckoo) என்னும் தலைப்பில் தாம் எழுத முற்பட்ட கவிதையில், அக்குயிலின் குரல் பற்றிக் கொடுக்கத் தக்க பொருத்தமான அடைமொழி (Adjective) ஒன்றனைக் காண மாட்டாமல், எத்தனையோ சொற்களை மாற்றி மாற்றித் திருத்தி அமைத்துப் பார்த்தும், அவைகளுள் ஒன்றேனும் செவ்வியதாக அமையாமையால் மன நிறைவு கொள்ளதவராய்ப் பல ஆண்டுகள் வருந்தி முயன்று வந்தார். கடைசியாக 43 ஆண்டுகள் கழித்துத் திடீரென

ஒரு நாள் 'அலைந்து திரியுங்குரல்' (Wandering Voice) என்னும் அடைமொழித் தொடர், அவர் உள்ளத்தில் உதித்தது. அதனையே அக் கவிதையில் அவர் பின்னர்த் திருத்தியமைத்துப் பதிப்பித்தார் என்று, அவர் தம் சகோதரியார் ஆகிய டொரத்தி வோர்ட்ஸ்வொர்த் அம்மை யார் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

(5) கருத்துக்களை நினைத்தலும், அவற்றைத் தொகுத்துத் திருத்தமாக வெளியிடுதலும் மிகவும் கடினமான, உழைப்பு மிக்க ஓர் அரும் பெரும் முயற்சியாகும். ''ஒரு வரி இயற்கைப் புனைவுரை எழுத அவர் நூறு (100) கல் தொலைவு பயணம் புரிந்தார். ஒரு சிறு சொற் றொடர் எழுதக் குறைந்தது இருபது (20) நூல் களையாவது ஆராய்ந்தார்'' என்று மெக்காலே என்னும் பேரறிஞரைக் குறித்து, தாக்கரே என்னும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

(6) இராபர்ட் லூயி ஸ்டீவன்சன், என்னும் பெரும் புகழ்மிக்க புதின ஆசிரியர், ஒருமுறை ஒருநாள் இரண்டு மணி நேரம் முயன்று ஒரு சிறு சொற்றொடர் மட்டுமே எழுத முடிந்தது. மறுநாள் அவர் அதனைப் படித்துப் பார்த்து, வெறுப்புற்றுக் குப்பைக் கூடையில் கிழித்தெறிந்து விட்டார்.

(7) தாமஸ் கிரே என்பவர், 'சிற்றூர்க் கோயிலின் முன்றிலில் எழுதிய இரங்கற் கவிதை' என்பதனை எழுதி முடிக்க எட்டு ஆண்டுகள் ஆயின. (கி.பி. 1732—1740).

(8) ஆல்ஃபிரெட் டென்னிசன் என்னும் கவிஞர், தமது நண்பராகிய ஆர்தர் ஹாலம் என்பவரின் மறைவு குறித்து ''நினைவின் பொருட்டு'' என்னும் கையறு நிலைச் செய்யுள் இயற்றப் பதினேழு (17) ஆண்டுகள் கழிந்தன. இங்ஙனமே ''உயிர் வகைகளின் தோற்றம்'' என்னும் நூலை எழுதச் சார்லஸ் டார்வின் என்பவர், பதினேழு ஆண்டுகள் அரிதின் முயன்று உழைக்க வேண்டியிருந்தது.

(9) ''மூலதனம்'' என்னும் நூலை எழுதக் கார்ல்மார்க்ஸ் பதினெட்டு ஆண்டுகள் செல விட்டார். நத்தானியேல் ஹாத்தார்ன் என்னும் ஆசிரியருக்குச் 'செவ்வண்ணக் கடிதம்' (Scarlet Letter) என்னும் புதினம் எழுத இருபது ஆண்டுகள் தேவைப்பட்டன. தாம் கேட்ட ஒரு சுவையான நிகழ்ச்சி ஒன்றைப் பற்றிய கதை யினை எழுதுவதற்குச் சாமர்செட் மாம் என்ப வர்க்கு நாற்பது ஆண்டுகளுக்குப் பின்னரே முடிந்தது.

(10) ஓவியன் ஒருவன் எங்ஙனம் ஓர் உரு வத்தைப் பலகால் அழித்தழித்துத் திரும்பத் திரும்ப வரைந்து வண்ணந் தீட்டி உருவாக்கு கின்றானோ, அங்ஙனமே ஓர் எழுத்தாளன் அல்லது கவிஞன் தனது உணர்வுக்கோல் கொண்டு ஒரு கருத்தை வெளியிடுவதற்குப், பலமுறை திரும்பத் திரும்ப முயன்று சிந்தித்து இடர்ப்பட்டு உழைத்துச் செப்பனிட வேண்டி யுள்ளது. உலகப் புகழ் வாய்ந்த எர்னஸ்ட் எமிங்வே என்னும் பெரு நூலாசிரியர் ''படை களுக்கு விடையளிப்பு'' (Farewell to Arms) என்னும் தமது நூலொன்றின் இறுதிப் பக்கத் தினை முப்பத்தொன்பது (39) முறை மாற்றி மாற்றி, அழித்தழித்து திருத்தித் திருத்தி எழுதி யதாகக் குறிப்பிடுகின்றார்.

இன்னோரனைய மேலை நாட்டுப் பேரறிஞர் களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் செய்திகளை யும் அனுபவங்களையும் பற்றி, நாம் இனிதறிந்து உணர்ந்து கொண்டு கருதுவோமாயின், பெருங் கவிஞர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் அரும்பெறல் மாட்சிமைகளையெல்லாம், நாம் செவ்விதில் தெளிந்து உணர்ந்து கொண்டு, மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்து வியந்து நிற்போம் என்பது திண்ணம்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை :

நம்முடைய கவிஞர் பெருமான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் பாடிய நூல்கள் பற் பல. அவைகள் பலவகைகளாகவும், பல அமைப்புடையனவாகவும் விளங்குகின்றன.

உலா	...	1
தூது	...	1
கலம்பகங்கள்	...	2
பதிகங்கள்	...	2
கோவைகள்	...	3
யமக அந்தாதிகள்	...	3
திரிபு அந்தாதிகள்	...	5
மாலைகள்	...	6
பிள்ளைத் தமிழ்கள்	...	9
தலபுராணங்கள்	...	22

ஆகிய பற்பல நூல்களை நம் கவிஞர் பெருந் தகை அவர்கள் இயற்றியிருக்கின்றார்கள். இவை களில் அடங்காமல் விடுபட்டுப்போன மற்றும் எத்துணையோ பலப்பல பாடல்களும், சிறு சிறு நூல்களும் வேறே இருக்கின்றன.

கலைப் படைப்பு என்பது, உழைப்பு மிகுதி யும், களைப்படைவும், இடர்ப்பாடும் இன்றி யாண்டும் நிகழ்தல் இல்லை. இத்துணை நூல்களை யும் இயற்றியக்கால், அவர்கள் எத்துணை இடர்ப் பாடும் துன்பங்களும் அடைந்திருப்பார்கள் ? எவ்வளவு முயற்சியும் உழைப்பும் மேற்கொண் டிருப்பார்கள்? என்று கருதியுணர்ந்தால், பிள்ளை அவர்களின் கடலனைய பெருமையை, நாம் ஒரு சிறிதேனும் உணரப்பெறலாம்.

முடிவுரை :

இத்தகைய சிறந்த வித்தகக்கவிஞர் குரிசில் ஆகிய, நம்முடைய மாட்சிமை மிக்க பெருங் கவிஞர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் அருமை பெருமைகளை உணர்ந்து, நாம் அப் பெருந்தகையாரின் நினைவு நாளைச் சிறப்புற ஆண்டுதோறும் தமிழகம் எங்கணும் உள்ள சிவதலங்களிலெல்லாம் நன்கினிது கொண்டாடு தல் வேண்டும். மேலும் அவர் இயற்றிய அழகிய அரிய சிறந்த சுவிதை நூல்கள் அழிந்து போய்விடாமல், அச்சிட்டுப் பாதுகாத்தல் வேண் டும். இவற்றிற்கெல்லாம் அடிபபடையாக, அவர் தம் அரிய இனிய நூல்களைப் பயின்று பாராட் டிப் போற்றி, நலம் பெற முற்படுவோமாக!

—ஆசிரியர்

நாயன்மார் தோன்றிய நற்பெருந் தலங்கள்....

(முற்றொடர்ச்சி)

(27) சாத்தமங்கை :

சிவலிங்கத்தின் மேல் சிலந்தி விழக்கண்டு, பதை பதைத்துக் குழந்தைமேல் விழும் சிலந்தியைச் செய்வதுபோல, சிவலிங்கத்தின் மீது வாயினல் ஊதித் துமிந்த மனைவியின் செயலை வெறுத்துப் புறக்கணித்தவரும் ; ஞானசம்பந்தருடன் வந்த திருநீலகண்டப் பெரும்பாணர், அவர்தம் மனைவியாராகிய மதங்கசூளாமணியார் என்னும் இருவரையும், அவர்தம் இழிகுலம் கருதாமல் திருவமுது செய்வித்து, தம் இல்லத்தின் நடுமனையில், வேள்விக் குண்டத்தின் அருகில் வேதிகையின் பாங்கர்ச் சிறப்பிடம் கொடுத்து விருந்தோம்பியவரும்; ஆச்சாபுரம் என்னும் திருநல்லூர்ப் பெருமணத்தில் ஞானசம்பந்தர்க்குத் திருமணம் நிகழ்ந்தபோது, அதனை நடத்தி வைத்தவரும் ஆகிய திருநீலநக்கநாயனர் தோன்றிய தலம்! இது தஞ்சை மாவட்டத்தில் அரிசிலாற்றின் வட கரையில் திருச்செங்காட்டங்குடிக்குத் தென்கிழக்கில் உள்ளது. திருநள்ளாற்றுக்குத் தென்மேற்கே 5 கல்லிலும், திருமருகலுக்கு 6 கல்லிலும் உள்ளது. இங்குள்ள இறைவனை அயன் வந்தித்து (பிரமன் பூசித்து) அருள் பெற்றன். ஆதலால் இங்குள்ள கோயில், ''அயவந்தி'' என வழங்கும். சாத்தமங்கை என்பது ஊர்ப் பெயரும், அயவந்தி என்பது கோயிற் பெயரும் ஆகும். இரண்டும் பொதுவாகச் ''சாந்தை அயவந்தி'' எனவும் வழங்கப் பெறும்.

(28) சீர்காழி :

சென்னை-திருச்சி நேர்இருப்புப் பாதையில் ஒரு நிலையம். இதற்குப் பிரமபுரம் வேணுபுரம் புகலி வெங்குரு தோணிபுரம் பூந்தராய் சிரபுரம் புறவம் சண்பை கொச்சைவயம் கழுமலம் என்னும் வேறு பெயர்களும் உண்டு. திருஞானசம்பந்தர், கணநாதர் என்னும்நாயன்மார்கள் அவதரித்த தலம். சிவபெருமான் இங்கு இலிங்கம் குரு சங்கமம் என்னும் மூன்று நிலைகளில் காட்சி தருகின்றர். பிரமன் வழிபட்ட பிரமலிங்கேசர் கருவறையிலும், கட்டுமலையின்மேல் தோணியப்பரும், உச்சிக் கோயிலின்மீது சட்டைநாதரும் எழுந்தருளி விளங்குகின்றனர். கோயில் சட்டைநாத சுவாமி கோயில் என வழங்குகின்றது. பிரமபுரீசர், திருநிலைநாயகி—தோணியப்பர், பெரிய நாயகி. சம்பந்தர் அப்பர் சுந்தரர் ஆகிய மூவரும் பாடியுள்ளனர்.

(29) செங்காட்டங்குடி:

வடநாட்டிலிருந்து பைரவர் கோலத்தில், உத்தராபதியார் என்னும் பெயரில், சிவனடியார் வடிவில் வந்த இறைவனுக்குப் பிள்ளைக்கறி அமுது செய்வித்த சிறுத்தொண்ட நாயனர், அவருடைய மனைவியார் திருவெண்காட்டு நங்கை, புதல்வர் சீராளதேவர், பணிப்பெண் சந்தன நங்கை ஆகியோர் அவதரித்து வாழ்ந்த தலம். மாயூரம்-திருவாரூர்க் கிளை இருப்புப் பாதையில், நன்னிலம் என்னும் நிலையத்தில் இருந்து சுமார் 6 கல் தொலைவில் உள்ளது. திருப்புகலூர் திருக்கண்ணபுரம் திருமருகல் ஆகிய தலங்கள் இதற்கு மிக அருகில் உள்ளன. இங்குக் கணபதி ஆகிய விநாயகர், கஜமுகாசுரன் என்னும் கொடிய அரக்கனைத் தம் தந்தத்தால் வென்று கொன்றபோது, அவனுடைய இரத்தம் வெள்ளமாகப் பரவி இத்தலத்தைச் சிவந்த நிறம் அடையச் செய்தது. அதனல் இதற்குச் செங்காட்டங்குடி எனப் பெயர் ஏற்பட்டது என்பது தல வரலாறு. நரசிம்ம வர்ம பல்லவனின் படைத் தலைவராக விளங்கியிருந்த சிறுத்தொண்ட நாயனர், பம்பாய்க்கு அருகிலுள்ள வாதாபி (பாதாமி) என்னும் இடத்தில், இரண்டாம் புலிகேசி என்னும் சாளுக்கிய அரசனைப் போரின் வென்று (கி.பி. 642), அங்கிருந்து ஓர் அழகிய விநாயகர் சிலையைக்கொண்டு வந்தனர் என்பர். அந்த ''வாதாபி விநாயகர்'' இங்குச் சிறுத்தொண்டரால் பிரதிட்டை செய்யப்பெற்று விளங்கி வருகின்றர். சித்திரைப் பரணி, ஐப்பசிப் பரணி என்னும் இரண்டும், பைரவ விரத நாட்களாகக் குறிக்கப் பெறும். இவற்றுள் சித்திரைப் பரணியினையே, திருச்செங்காட்டங்குடியில் சிறுத்தொண்டநாயனர் வீடுபேறுற்ற நாளாகக் கொண்டு, அமுது படையல் என்னும் திருவிழா மிகவும் சிறப்பாக நடத்தப்பெறுகின்றது.

(30) செங்குன்றூர்:

திருவாரூர்ப் பூங்கோயிலில், தேவாசிரிய மண்டபத்தில் இருந்த சிவனடியார்களைப் பணி

யாமல் ஒதுங்கிச்சென்ற சுந்தரர்பால் சீற்றங் கொண்டு, சுந்தரரையும், அவரை ஆட் கொண்டருளிய திருவாரூர்த் தியாகராசப் பெரு மானையும், புறகு என்று வெறுத்து ஒதுக்கி யவரும், சுந்தரர் திருத்தொண்டத் தொகை பதிகம் பாடுவதற்குக் காரணராக அமைந்த வருமாகிய விறல்மிண்ட நாயனுர் தோன்றிய தலம். கேரள நாட்டில் (சேர நாட்டில்) எர்ணுகுளத்திற்கு 55 கல் தெற்கிலும், கொல்லத்திற்கு 10 கல் கிழக்கேயுள்ள கொட்ட காரைக்கரைக்கு 25 கல் வடக்கிலும் உள்ளது. இப்பொழுது சேங்கனூர் என வழங்கி வரு கின்றது.

(31) செருவிலிபுத்தூர்:

நாட்டில் பெரும் பஞ்சம் தோன்றிய பொழுதும், இறைவனைக் குளிர்புனலும் மலரும் கொண்டு அருச்சித்து வந்து, பலநாள் பட்டினி கிடந்து வருந்திப் பசி மிகுதியால் நேர்ந்த தளர்ச்சியால், திருமஞ்சனக் குடத்தைத் தாங்க முடியாமல், இறைவன் மீதே வீழ்த்தி விட, இறைவனல் நாள்தோறும் ஒரு பொற்காசு வழங்கப்பெற்று அருள்பெற்ற புகழ்த்துணை நாயனுர் தோன்றிய தலம். இது இப்பொழுது அளகாத்திரிபுத்தூர், அளகாபுத்தூர் என வழங்குகின்றது. கும்பகோணத்திற்குத் தெற்கே 4 கல் தொலைவில், குடவாயிலுக்குச் செல்லும் பெருவழிச் சாலையில் உள்ளது.

(32) சேய்ஞலூர்:

இடையன் ஒருவன், பசுக்களை அடித்து வருத்த, அப் பசுக்களைத் தாமே மேய்த்துக் காக்கும் கடமையை மேற்கொண்டு, அவைகள் அன்பின் பெருக்கினுல் தாமே சொரிந்த பாலைக் கொண்டு, மணலால் இலிங்கம் அமைத்துச் சிவ பூசைசெய்தவரும்; தாம் பாலை வீணுக்குவதாகக் கருதிச் சினங்கொண்டு, சிவபூசைக்கு உரிய பாற் குடத்தைக் காலால் இடறிய எச்சதத்தன் என்னும் தம் தந்தையாரின் கால்களை அருகே கிடந்த கோலால் வீசித் தடிந்து, அருள் பெற் றவருமாகிய விசாரசருமர் என்னும் சண்டேசு வர நாயனுர் தோன்றிய தலம். இது கும்ப கோணத்திற்கும் திருப்பனந்தாளுக்கும் அருகில் மண்ணியாற்றின் கரையில் உள்ளது. கும்பகோ ணத்திற்கு வடகிழக்கில் 9 கல். சண்டேசுவரர் ஆக்களை மேய்த்த இடம் திருவாப்பாடி என்னும் தலமாக விளங்குகின்றது. முருகப் பெருமான் சூரபதுமனை வெல்வதற்காகக் கயிலாயத்தி னின்று திருச்செந்தூருக்குச் செல்லும் வழியில், இது நல்ல ஊர் என்று கருதி இங்குச் சிறிது நேரம் தங்கியிருந்து சிவபெருமானைப் பூசித்தார். சேயாகிய முருகன் நல்ல ஊர் என்று நினைத்துத் தங்கிய இடமாதலின், இது சேய் நல் ஊர் (சேய்ஞலூர்)எனப் பெயர் பெற்றது. வைணவ சமயத்தினரால் ''வியாக்கியானச் சக்கர வர்த்தி'' எனப் போற்றப்படும் பெரியவாச்சான் பிள்ளை அவர்களும், இத்தலத்திலேயே தோன்றி யருளினுர் என்பர். இப்பொழுது இது சேங்க னூர் என மருவி வழங்குகின்றது.

(33) தஞ்சை:

திருவாரூர்க் கோயிலில் பல்லவப் பேரரச ராகிய கழற்சிங்கரின் மனைவியார், இறைவ னுக்குரிய மலரினை எடுத்து மோந்ததற்காக, அவளது மூக்கை அரிந்து தண்டித்தவராகிய செருத்துணை நாயனுர் தோன்றிய தலம். இந்தத் தஞ்சை, இராஜராஜ சோழன் (கி.பி. 985—1014), பெருவுடையார் கோயில் எடுப் பித்த தஞ்சை நகரமன்று. அது தஞ்சை நாட்டுத் தஞ்சை. இதுவோ, மருகல் நாட்டுத் தஞ்சை ; கீழத் தஞ்சாவூர் என வழங்கப்படும். திருச் செங்காட்டங்குடிக்குத் தெற்கே 2 கல் தொலைவி லும், திருமருகல் என்னும் தலத்திற்குத் தென் கிழக்கில் 4 கல் தொலைவிலும் உள்ளது.

(34) தலையூர்:

திருவுருத்திரம் என்னும் வேத மந்திரத் தினை நாள்தோறும் கழுத்தளவு நீருக்குள் நின்று முறையே செபித்து அருள் பெற்ற உருத்திர பசுபதி நாயனுர், அவதாரம் செய்து வாழ்ந்த தலம். மாயூரம்-பேரளம் கிளை இருப்புப் பாதையில், கொல்லுமாங்குடி என்னும் நிலையத் திற்கு இரண்டு கல் தொலைவில் உள்ளது. இராவணன் இங்குத் தன் தலையை அறுத்து ஓமம் செய்து இறைவனை வழிபட்டு அருள் பெற்றுன் என்பது தல வரலாறு. அதனுல் இதற்குத் தலையூர் என்று பெயரமைந்தது. இராவணன் ஓமம் செய்ததாகக் கூறப்படும் இடம், இங்கு ஓமக்குளம் என வழங்கி வருகின்றது.

(35) திங்களூர்:

இது திருநாவுக்கரசு நாயனுரைப் பெரிதும் போற்றி, அவர் பெயரால் தண்ணீர்ப் பந்தர் முதலிய அறச் செயல்கள் புரிந்து வந்த, அப் பூதி அடிகள் நாயனுர் அவதரித்த தலம். திரு வையாற்றுக்கு அருகில் உள்ள ஒரு சிற்றூர். ''செப்பருஞ் சீர் அப்பூதி அடிகள் ஊர், திங்க ளூர்'' என்று பெரிய புராணம் இதனைக் குறிப் பிடும். திருப்பழனம் என்னும் தலத்திற்குத் தெற்கே ஒரு கல் தொலைவு.

(36) திருநின்றவூர்:

காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயிலைக் கட்டிய இராமசிம்ம பல்லவன் (கி.பி. 665—705) காலத்தில் வாழ்ந்திருந்தவரும், மனக் கோயில் கட்டிய மாதவரும் ஆகிய பூசலார் நாயனுர் அவதாரம் செய்த தலம். இஃது இப்போது திண்ணனூர் என மருவி வழங்கு கிறது. சென்னை-அரக்கோணம் இருப்புப் பாதையில் உள்ள ஒரு நிலையம். சென்னையி லிருந்து அடிக்கடி பேருந்துகள் செல்லுகின்றன. பூசலார் நாயனுர் மனக்கோயில் கட்டி வழி பட்டதனுல், இங்குள்ள இறைவனுக்கு, இருத யாலய ஈசுவரர் எனப் பெயரமைந்துள்ளது.

(37) திருப்பெருமங்கலம் :

சுந்தரமூர்த்தி சுவாமிகள், பரவை நாச்சியாரின் ஊடலைத் தீர்க்க, தூது அனுப்பி இறைவனைத் தமக்குக் குற்றேவல் செய்வித்ததற்காக, சுந்தரர்பால் மனவருத்தமும் சினமும்கொண்டு, தமக்குற்ற குடல் நோய் சுந்தரரால் தீர்க்கப் பெறுதலை விரும்பாமல், தம் உயிரைத் துறக்க முற்பட்டவரும், திருப்புன்கூர்ச் சிவலோக நாதர்பால் மழை பெய்யவும், மழை நிற்கவும் வேண்டிப் பன்னிருவேலி நிலங்களை இரு முறை அளித்தவருமாகிய ஏயர்கோன் கலிக்காமர் அவதாரம் செய்த தலம். வைத்தீசுவரன் கோயிலுக்கு மேற்கே இரண்டு கல்லிலும், திருப்புன்கூர்க்கு வடக்கே ஒரு கல்லிலும் உள்ளது.

(38) தில்லை:

இது புகழ் பெற்ற மிகப் பெரிய சிவத்தலமாகும். இந்நாளில், இது சிதம்பரம் என வழங்குகின்றது. இங்குள்ள நடராசப் பெருமானின் திருக்கோயில் மிக்க பெரும் சிறப்பும் புகழும் வாய்ந்தது. தில்லைவாழ் அந்தணர்கள் என்று போற்றப்படும் தீட்சிதர்கள், இக்கோயிலுக்கு உரியவர்களாய், இதனைப் பூசித்துப் போற்றி வருகின்றனர். ஆதலின் ''வேதியர் தில்லை மூதூர்'' எனச் சேக்கிழார் இதனைக் குறிப்பிடுகின்றார். தமது மனைவியார் ''தீண்டுவீராயின் எம்மைத் திருநீலகண்டம்'' என்று ஆணையிட்டபோது, ''ஏதிலார் போல நோக்கி, எம்மை என்றதனால் மற்றை மாதரார்தமையும் என்றன் மனத்தினும் தீண்டேன்'' என்று உறுதி பூண்டு ஒழுகிய திருநீலகண்ட நாயனார் அவதாரம் செய்து வாழ்ந்த தலம். தில்லை வாழ் அந்தணர், திருநாளைப் போவார், மாணிக்கவாசகர், சேக்கிழார் முதலிய எத்தனையோ பல பேரருளாளர்களின் வரலாற்றோடு தொடர்பு உடைய சிறந்த தலம். வியாக்கிர பாத முனிவர் பூசித்த திருப்புலீச்சரம், பதஞ்சலி முனிவர் வழிபட்ட திருஅனந்தீச்சரம், முதுமையுற்ற திருநீலகண்டரை மீளவும் இளமையடையச் செய்தருளிய இளமையாக்கினார் கோயில், தில்லைக் காளி கோயில், முதலிய கோயில்கள், இங்குத் தரிசித்து வழிபடத் தக்கவை.

(39) நாவலூர் :

சைவ சமய ஆசிரியர்களுள் ஒருவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவதரித்த தலம். சுந்தரரைப் பெற்றெடுத்த தாய் தந்தையராகிய சடையனார், இசைஞானியார் என்னும் இருவரும், அவரை அன்பினால் மகன்மை கொண்ட நரசிங்கமுனையரைய நாயனார் என்னும் சிற்றரசரும், வாழ்ந்திருந்த தலம். திருநாவலூர் என்னும் இத்தலம், திருவெண்ணெய் நல்லூருக்குத் தென்கிழக்கில் 5 கல் தொலைவிலும், திருவதிகையிலிருந்து 10 கல் தொலைவிலும் உள்ளது. இத்தலத்தின் சிறப்புமரம் நாவல் ஆதலின், இதற்கு நாவலூர் எனப் பெயர் அமைந்தது. ஆனால் இப்போது 'திருநாமநல்லூர்' என மருவி வழங்கப்படுகின்றது.

(40) நாகப்பட்டினம்:

செம்படவர் குலத்தில் பிறந்து, மீன் பிடிக்கும் தொழில் செய்து வந்த அதிபத்த நாயனார் அவதரித்த தலம். நாகை எனவும், நாகைக் காரோணம் எனவும் வழங்கும். 'கற்றவர் பயிலும் நாகைக் காரோணம்' என்று திருநாவுக்கரசர் இதனைப் புகழ்ந்துள்ளார். சம்பந்தர் அப்பர் சுந்தரர் ஆகிய மூவரும் பாடியுள்ள தலம். இது தஞ்சை மாவட்டத்தில் உள்ள, மிகவும் புகழ் பெற்ற கடற்கரைத் துறைமுக நகரத் தலம்.

(41) நாட்டியத்தான்குடி :

சோழர்களின் படைத்தலைவராய் விளங்கியவரும், சிவபிரான் கோயில்களில் திருவமுது படி வழங்குவதற்காகத் தாம் தொகுத்துக் கூடு கட்டி வைத்திருந்த நெல்லைக் கவர்ந்து எடுத்து உண்ட சிவாபராதக் குற்றத்திற்காகச் சுற்றத்தார் அனைவரையும் கொன்று தண்டித்தவரும் ஆகிய கோட்புலி நாயனார் அவதரித்த தலம். இது திருவாரூருக்கு அருகில் உள்ள மாவூர் என்னும் இருப்புப் பாதை நிலையத்திற்கு ஒரு கல் தொலைவில் உள்ளது. திருவாரூருக்குத் தெற்கே 6 கல். திருக்காரூயிலுக்கு வடமேற்கே 3 கல். சுந்தர மூர்த்தி சுவாமிகள் பாடல் பெற்றது.

(42) நீடூர்:

தம்மை வேண்டிக் கொள்ளும் அரசர்களுக்குப் படைத் துணையாகச் சென்று வெற்றி தேடித் தந்து, அவர்கள் அளிக்கும் பொருள் கொண்டு, அடியார்களுக்கு அமுதளித்துத் தொண்டு புரிந்த முனையடுவார் நாயனார் அவதாரம் புரிந்த தலம். ஊழிக்காலத்திலும் அழியாமல் நீடித்திருக்கும் சிறப்புடையதாதலின் நீடூர் எனப் பெயர் பெற்றது. ''செல்வம் நீடு ஊர், திருநீடூர்'' என்று சேக்கிழார் இதனைப் புகழ்ந்து போற்றி யுள்ளார். மாயூரம் என்னும் மயிலாடுதுறையை அடுத்து உள்ள ஓர் இருப்புப் பாதை நிலையம். நிலையத்தினின்று வடமேற்கே ஒரு கல் தொலைவில் கோயில் உள்ளது. சுந்தரர் தேவாரப் பாடல் பெற்றது.

(43) பழையாறை

சிவனடியார்களுக்குக் கீளாடையும் கோவண ஆடையும் வழங்கித் தொண்டாற்றி அருள் பெற்ற அமர்நீதி நாயனார் தோன்றிய தலம். சோழப் பேரரசர்களின் தலைநகரமாக இடைக் காலத்தில் விளங்கிய சிறப்புடையது. கும்பகோணத்திற்கு 5 கல் தொலைவில், பட்டீசரம் என்னும் பாடல் பெற்ற தலத்திற்கு அருகில் உள்ளது.

(44) பூம்புகார்:

இது காவிரிப்பூம்பட்டினம் எனவும் வழங்கும். சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் இரு பெரும் காப்பியங்களிலும், புகழ்ந்தோதப்

பெற்ற சிறந்த கடற்கரை நகரம். பண்டைக் காலத்தில் பல நாட்டுக் கப்பல்களும் வந்து தங்கும் புகழ் மிக்க ஒரு பெருந் துறைமுக நகரமாக விளங்கிய சிறப்புடையது. பண்டைக் காலத்தில் பட்டினம் என்றால், அது பூம்புகார் நகரத்தையே பெரிதும் குறிக்கும். இங்கு வாழ்ந்து வாணிபம் செய்து வந்ததினாலேயே, திருவெண்காடர் என்னும் இயற் பெயர் கொண்ட சைவப் பெரியார், பட்டினத்தார் என்னும் காரணப் பெயர் பெற்றார். அடியார்கள் விரும்பிக் கேட்கும் எதையும் இல்லையென்னாது கொடுக்கும் இயல்பினை உடையவரும், இறைவன் அடியவராகத் தோன்றி ''மன்னு காதல் உன் மனைவியை வேண்டி வந்தேன்'' எனக் கூற, ''என்னிடம் உள்ளதனையே நீர் விரும்பிக் கேட்டது யான் செய்த பேறு'' என்று மனமுவந்து அளித்துச் செயற்கரும் செய்கை செய்த தீரரும் ஆகிய இயற்பகை நாயனார், அவதாரம் செய்த தலம். இயற்பகை நாயனாரை ஆட்கொள்ளுவதற்குத் தூர்த்த வேடம் கொண்டு வந்த சிவபெருமான் 'இயற்பகை முனிவா ஓலம்' என்று மறைந்திருந்து ஓலமிட்ட சாய்க்காடு (சாயாவனம்) என்னும் தலம், இதற்கு மேற்கே ஒரு கல் தொலைவில் உள்ளது. திருஞானசம்பந்தர் பூம்புகாரையும், சாய்க்காட்டையும் சேர்த்துப் புகழ்ந்து பாடியுள்ளார்.

(45) பெருமிழலை :

சுந்தரமூர்த்தி சுவாமிகளையே தமது குருவாகக் கொண்டு, யோக நெறி கடைப்பிடித்து வீடுபேறு அடைந்த பெருமிழலைக் குறும்ப நாயனார் என்னும் சிவயோகியார் வாழ்ந்திருந்து அருள்பெற்ற தலம். மிழலை நாட்டின் தலை நகரமாக விளங்கியதனால், இது பெருமிழலை எனப் பெயர் பெற்றது. இது மிழலை நாட்டு மிழலை; வெண்ணி நாட்டு மிழலை என்பது இதனின் வேறு. தஞ்சை மாவட்டத்தில் தில்லைவிளாகம் என்னும் ஊருக்கு 2 கல் தொலைவிலும், புதுக்கோட்டைக்கு வடக்கே 4 கல் தொலைவிலும், வெள்ளாற்றின் தென் கரையில் இத்தலம் அமைந்துள்ளது. திருமெய்யம்-பேரையூர்க்கு அருகிலுள்ள தேவமலையில் ஒரு குடைவு அறையில், சிவலிங்கத்தின் முன் உள்ள ஒரு யோகியின் திருவுருவம் பெருமிழலைக் குறும்ப நாயனாரின் திருவுருவமே என்று கருதப்படுகின்றது.

(46) மங்கலம் :

சிவபிரானின் திருவைந்தெழுத்தினைப் புல்லாங்குழலின் இசையில் வைத்து ஓதி அருள் பெற்றவரும், பசுக்களை மேய்க்கும் ஆயர்குலத்தில் தோன்றியவருமாகிய ஆனாயநாயனார் அவதரித்த தலம். திருச்சிராப்பள்ளிமாவட்டத்தில் உள்ள லால்குடி என வழங்கும் திருத்தவத்துறைக்கு மிகவும் அருகில் உள்ளது.

(47) மணமேற்குடி:

மதுரையில் நின்றசீர் நெடுமாற நாயனார் என்னும் பாண்டிய அரசரின் அமைச்சராக விளங்கியவரும், மங்கையர்க்கரசியாரின் திருவுள்ளப்படி மதுரைக்குத் திருஞானசம்பந்தரை அழைத்து அவரால் சைவ சமயம் நிலைபெறச் செய்தருளியவரும் ஆகிய குலச்சிறை நாயனார் தோன்றியருளிய தலம். இது தஞ்சை மாவட்டத்தில், அறந்தாங்கி வட்டத்தைச் சேர்ந்த ஆவுடையார் கோயில் என வழங்கும் திருப்பெருந்துறைக்குத் தென்கிழக்கே 12 கல் தொலைவில் உள்ளது. முற்காலத்தில் பாண்டிய நாட்டைச் சேர்ந்திருந்தது. தற்போது தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்ததாக உள்ளது.

(48) மதுரை :

இத்தலம் பாண்டிய நாட்டின் தலைநகரம். நகரத்திற்கு மதுரை என்றும், இங்குள்ள கோயிலுக்கு ஆலவாய் என்றும் பெயர். மீனாட்சியம்மையும், சொக்கநாதப் பெருமானும் எழுந்தருளி விளங்கும் புகழ்மிக்க சிறந்த பெருங்கோயில், இங்கு அமைந்துள்ளது. சிவபெருமான் அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் செய்தருளிய தலம். சங்க காலப் புலவர்கள் சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்த தலம். நின்றசீர் நெடுமாற நாயனார், மங்கையர்க்கரசியார், குலச்சிறை நாயனார், மூர்த்தி நாயனார் ஆகியோர் வாழ்ந்து அருள்பெற்ற தலம்.

(49) வரிஞ்சை :

இது நாகப்பட்டினம் வட்டத்தில், கீழ்வேளூருக்கு அருகில் உள்ளது. சிவனடியார்களை இகழ்ந்து பேசுபவர்களின் நாக்கினைச் சத்தியால் (வாளினால்) அறுக்கும் ஆண்மைத் திருப்பணி செய்து, அதனால் சத்தியார் என்னும் காரணப் பெயர் கொண்ட சத்தி நாயனார் அவதாரம் செய்த தலம்.

தொடரும்

வில்லி பாரதம்

'சிலம்புச் செல்வர்' திரு. ம. பொ. சிவஞானம்

வில்லிபுத்தூராார் பாரதம் தமிழில் எழுதப்பட்ட தென்றாலும், தமிழர் வரலாற்றைத் தழுவியதல்ல. காரணம், அது தமிழில் தோன்றிய முதல் நூலாக அல்லாமல் வழி நூலாக இருப்பதுதான். வடமொழியில் வியாச முனிவர் இயற்றிய மகாகாப்பியத்தைச் சுருக்கமாகக் கூறும் வழி நூலாகவே வில்லிபுத்தூராார் தமிழில் பாரதத்தை இயற்றினர்.

கம்ப ராமாயணமும் வான்மீகி முனிவர் இயற்றிய வடமொழி நூலின் வழி நூல்தான் என்றாலும், தமிழர் பண்பாட்டு வழி அதனைத் திருத்தி அமைக்கக் கம்பர் பெரிதும் முயன்றிருக்கிறார். அதனால், கம்ப ராமாயணம் வில்லி பாரதத்தை வென்று, தமிழ் இலக்கிய உலகிலே சிறப்பிடம் பெற்று விட்டது. அந்த அளவிற்கு வில்லி பாரதம் தமிழ் இலக்கிய உலகில் செல்வாக்குப் பெற்றிருப்பதாகச் சொல்ல முடியாது.

கம்ப ராமாயணம் சமய எல்லைகளைக் கடந்து சர்வ சமயத்தவரும் ஏற்றுக்கொண்டு விட்ட சமூகக் காப்பியமாகிவிட்டது. அத்தகைய நிலை வில்லி பாரதத்திற்கு ஏற்பட்டிருப்பதாகச் சொல்வதற்கில்லை. ஆனால் தமிழ் மொழியிலுள்ள காப்பியங்களைச் சிலப்பதிகாரம், கம்ப ராமாயணம், பெரிய புராணம், வில்லி பாரதம் என வரிசைப்படுத்துமளவிற்கு நான்காவது இடத்தை வில்லிபுத்தூராாரின் வழி நூல் பெற்றுவிட்டது.

தமிழ்க் காப்பியங்களுள் தலையாயதான சிலப்பதிகாரம் தமிழினத்தாரை மொழிஅடிப்படையில் ஒன்றுபடுத்தி, அவர்களை இந்திய சமுதாயத்தோடு உறவுபடுத்தும் தேசிய ஒருமைப்பாட்டு இலக்கியமாக இருப்பதற்குக்காரணம், அது தமிழில் தோன்றிய— தமிழக சரித்திர நாயக நாயகியரைப் பாத்திரங்களாகக் கொண்ட—முதல் நூலாக இருப்பதுதான் எனலாம்.

வில்லி பாரதத்தின் பாத்திரங்கள் சரித்திர நாயக நாயகியரா? இதிலே அறிஞர்களுக்கிடையில் கருத்து வேற்றுமை இருந்து வருகிறது. காந்தியடிகள், தமது 'அனாசக்தி யோகம்' என்னும் நூலிலே, பாரத காப்பியத்தின் பாத்திரங்கள் வியாச முனிவரின் கற்பனையில் பிறந்தவர்களே என்கிறார். இந்த வாதத்தை வான்மீகி ராமாயண விஷயத்திலும் எழுப்ப முடியும் — ஏன், சிலப்பதிகாரம் போன்ற வரலாற்றுக் காப்பியங்களின் நாயக நாயகியரும் கற்பனைப் பாத்திரங்களே என்று வாதிப்போரும் உண்டு. இது எப்படி இருப்பினும், வியாச பாரதத்தின் பாத்திரங்கள் வட புலத்தவராக, ஆரிய நாகரிகப் படி வாழ்ந்தவர்களாக வியாசரால் அறிமுகப் படுத்தப்படுகின்றனர் என்பதில் கருத்து வேற்றுமை எழுவதற்கில்லை. ஆகவே, தமிழ் இலக்கியங்களிலே இனவுணர்ச்சியைக் காணும் எனது ஆய்வுக்கு வில்லி பாரதம் அதிகம் பயன்படுவதற்கில்லை. ஆயினும், எத்தகைய சூழ்நிலையில் வில்லி பாரதம் தமிழில் தோன்றியது என்பதனையும், நூலாசிரியரின் தமிழ்ப் பற்று எத்தகையதென்பதனையும், பாண்டவருக்கும் கௌரவருக்கும் நடந்த குருட்சேத்திரப் போரிலே தமிழ்நாட்டு மன்னர்களுக்குள்ள தொடர்பு எத்தகையது என்பதனையும் ஆராய்ந்தறிவது அவசியமாகிறது. மற்றும், தமிழகம் அயல் மொழியினருக்கு—குறிப்பாக, வடபுலத்தவருக்கு அரசியல் ரீதியில் அடிமைப்பட்டிருந்த காலத்தில் தமிழ் இலக்கியத் துறையில்—முக்கியமாக, தமிழரது வாழ்க்கைப் பண்பாட்டில் ஏற்பட்ட மாறுதல்களை அறியவும் வில்லி பாரதத்தை இனக் கண் கொண்டு ஆராய்வது அவசியமாகிறது.

முன்னர்ப் பல அறிஞர்களால் வில்லி பாரதம் ஆராயப்பட்டிருக்கிறது. ஆனால், அவர்கள் தமிழர் என்ற இனவுணர்வுடன் வரலாற்றுப் பின்னணியில் ஆய்வு நடத்தினர்கள் என்று சொல்வதற்கில்லை, அவர்களெல்லாம் வில்லிபுத்தூராாரின் காலம், மதம், புலமை, கற்பனைத் திறன் ஆகியவற்றை ஆராய்ந்ததோடு ஒய்ந்து விட்டனர். அந்த ஆராய்ச்சிகளும் தேவைப்படுகின்றனவென்றாலும், தமிழினத்தார் உரிமை வாழ்வு நடத்த—தங்களுக்கே உரிய பண்பாட்டில் காலூன்றி வாழ அவை பயன்படவில்லை.

வில்லி பாரதம் வடமொழி நூலின் வழி நூலென்றாலும், அதன் பாத்திரங்கள் ஆரிய பாரம்பரியத்தை ஒட்டிய வடபுலத்தவராக அறிமுகப்படுத்தப்பட்டிருப்பினும், தேவையற்ற வடமொழி வெறுப்பு, ஆரிய இன விரோதம் ஆகிய குறைபாடுகளுக்கு அப்பாற்பட்டு ஆராய்ச்சியாளருக்குத் தேவைப்படும் நடுநிலையைக் கடைப்பிடித்தே ஆராயப்போகிறேன் என்பதனை உறுதியாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வில்லி பாரதம் மிகச் சிறந்த இலக்கியம் என்ற கருத்து எனக்கும் உண்டு. தமிழ் மக்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை, பெரிய புராணம் ஆகிய தமிழில் தோன்றிய முதல் காப்பியங்களையே யன்றி, பிற மொழியில் — பிற இனத்தாரால் படைக்கப்பட்ட காப்பியங்களையும் பயில வேண்டுமென்ற கொள்கை எனக்கு உடன்பாடாகும். இராமாயணம், பாரதம் ஆகிய காப்பியங்களால் நாட்டில் ஏற்பட்ட தேசிய ஒருமைப்பாட்டுணர்ச்சி தமிழர் எளிதில் புறக்கணித்து விடக் கூடியதல்ல.

தேசிய ஒருமைப்பாட்டில் அழுத்தமான நம்பிக்கையுடைய நான் வடபுலத்தவருக்கும் தென்புலத்தவருக்கும் இடையே இலக்கிய ரீதியிலுள்ள கொடுத்து—வாங்கும் உறவு வலுப்பெறுவதை விரும்புகிறேன். ஆயினும், தமிழர் என்ற இனவுணர்ச்சியை அழிக்கக் கூடிய வகையில் மத ரீதியில் பிற இனத்தார் கடந்த காலத்தில் தமிழர் மீது பெற்றிருந்த ஆதிக்கங்களை விமர்சிப்பது தேசிய ஒருமைப்பாட்டிற்கு விரோதமான பணியாகாது. ஏனெனில், அந்த ஆதிக்

கங்களெல்லாம் பொய்யாய், கனவாய், பழங் கதையாய் போய்விட்ட காலத்தில் — ஒரு புதிய பாரதம் உருவாகி வரும் தருணத்தில் — நாம் வாழ்ந்து வருகிறோம். அத்துடனின்றி, ஆரியர்-திராவிடர் என்ற நிறவழி இனவாதங் கள் ஒய்ந்து, மொழி வழி இனக் கலாசாரங் களின் ஒருமைப்பாட்டிலே புதிதாக இந்திய கலாசாரம் உருவாகி வருவதையும் பார்க்கிறோம்.

இந்தியாவிலே வடக்குக்கும் தெற்குக்கு மான இலக்கியப் பரிவர்த்தனை நியாயமான முறையில் நடைபெறவில்லை. வடமொழியில் தோன்றிய வான்மீகி ராமாயணமும், வியாச பாரதமும் தமிழகத்துப் பண்டிதரிடமேயன்றிப் பாமரரிடமும் செல்வாக்குப் பெற்றுவிட்டன. அதுபோல, தமிழில் தோன்றிய சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற முதல் நூல்களை வடபுலத்தி லுள்ள பண்டிதர்கள் கூட வரவேற்றதில்லை. பாரததேசம் முழுவதையும் தமது தாயகமாகக் கொண்டு, தேச விடுதலைக்கும் தேசிய ஒருமைப் பாட்டிற்கும் பாடிப்பாடி, ''தேசியக் கவி'' என்னும் சிறப்புப் பெயர் பெற்றுவிட்ட பாரதி யாரின் பாடல்களைக் கூட வடபுலத்து மக்கள் ஏன் தேசியவாதிகள் கூடப் போற்றியதில்லை.

இந்தியாவில் இரு வேறு கலாசாரங்கள் வடக்கிலும் தெற்கிலுமாக நிலைபெற்றுவிட்டன. இந்த உண்மையை ஒப்புக்கொண்டு, அந்தக் கலாசாரங்களிடையே சமநிலையில் உறவு காண மத்திய அரசு திட்டமிட்டுச் செயல்படும்போது தான் இந்திய தேசிய ஒருமைப்பாடு முழுமை பெறுவது சாத்தியமாகும். இந்தப் பணியை இலக்கியப் பரிவர்த்தனை வாயிலாகத்தான் தொடங்க முடியும்.

வடமொழிக் காப்பியங்களின் தலைவிய ரான சீதைக்கும் பாஞ்சாலிக்கும் தமிழ் நாட் டில் ஏற்பட்டுள்ள சிறப்பு, சிலப்பதிகாரத் தலைவி யான கண்ணகிக்கு வடபுலத்தில் ஏற்பட வேண் டும். இதுதான் நான் விரும்பும் இலக்கியப் பரி வர்த்தனையாகும். இன்றைய நிலையில் இது கனவாக இருப்பினும், விரைவில் நிறைவேறத் தான் போகிறது. ஆயினும், தமிழ் நாட்டில் பிறந்து, தமிழைத் தாய்மொழியாகக் கொண்டு வாழும் மக்களைத் 'தமிழர்' என்னும் இனவுணர் வோடும் வாழ வைப்பது அவசியமாகிறதல் லவா? ஆந்திரரோ, வங்காளியரோ, குசராத்தி யரோ, மராத்தியரோ, இந்தி மொழியாளரோ மொழி வழிப்பட்ட இனவுணர்வைத் துறந்தவர் களாக இருக்கவில்லையே!

வியாச பாரதத்தில் வழி நூலாகவே வில்லி பாரதம் தோன்றியதாகத் தெரிகிறது. வட மொழியில் அகஸ்தியபட்டர் என்பார் வியாச பாரதத்தின் சுருக்கமாகப் பால பாரதம் பாடி யுள்ளார். அதன் வழி நூலாகவே வில்லி பாதம் தோன்றியது என்பாருமுளர். ஆனால், வில் லியே தமது பாரதம் வியாச பாரதத்தின் வழி நூல் என்று கூறுவதால் அதனை மறுப்பதற்கு ஆராய்ச்சி தேவைப்படவில்லை.

வியாச பாரதம் 18 பருவங்களைக் கொண் டது. அதன் முதல் 10 பருவங்களை மட்டுமே கொண்டு—அதாவது, காப்பிய நாயகர்களின் பிறப்பு தொடங்கி பாரதப் போர் முடிகிற வரை—வில்லி தமது பாரதத்தைப் படைத்துள் ளார். கம்பர், வான்மீகி ராமாயணத்தில் ஏழா வதான உத்தர காண்டத்தை விட்டு விட்டு, இராமாவதாரம் தொடங்கி இராவண வதம் வரையுள்ள முதல் ஆறு காண்டங்களை மட்டுமே —சில மாறுதல்களுடன் — தமிழில் பாடினர். அதுபோல, வில்லியாரும் கௌரவர் அழிவோடு கதையை முடித்து விட்டார் எனலாம். வியாச ரோ, கண்ணன், பாண்டவர் ஆகியோரின் முடி வையும் கூறிவிட்டுக் கதையை முடிக்கிறார். ஆம்; சர்வம் நாசம் என்ற போக்கில் வியாச பாரதம் முடிகின்றது. அத்தகைய சர்வ நாசத் தைத் தமிழர் விரும்ப மாட்டார்கள் என்பதனை யறிந்த வில்லி பாண்டவர்களின் வெற்றியோடு கதையை முடித்துவிட்டார்.

இங்கு, வில்லி பாரதத்திற்கு முதல் நூலான வியாச பாரதத்தையும் சிறிது ஆராய் வது அவசியமாகிறது. வடமொழியில் தோன் றிய முதல் காப்பியம் வான்மீகி ராமாயணந் தான். அதனால்தான், அது ஆதிகாவியம் எனப் படுகிறது. இந்த இரண்டுமே வைணவர் தெய்வ மான திருமாலை நாயகனாகக் கொண்டவை யாகும். ஆம் ; திருமாலின் பத்து அவதாரங் களில் இராமாவதாரமும் கிருஷ்ணாவதாரமும் சேர்ந்தவையாகும். வியாசர், பாரதக் கதையை மட்டுமின்றி, வேத வாக்குகளை ருக், யசுர், சாமம், அதர்வணம் என்று நான்கு பிரிவாகத் தொகுத்து அளித்தார் என்று சொல் லப்படுகின்றது. அதனால், அவர் வேத வியாசர் என்று அழைக்கப்படுகிறார்.

வியாசருடைய பிறப்பு சாதாரண மனித ருடைய பிறப்பைப் போன்றதாக அல்லாமல் அதிசயமானதாகக் கூறப்படுகின்றது. முனிவர் களின் பிறப்பு பற்றி அறிவுக்கும் மனித ஆற்ற லுக்கும் அப்பாற்பட்ட முறையில் சுவைமிக்க கற்பனையாகக் கூறுவது வடமொழி நூலாரின் வழக்கமாகும். அந்த வகையில்தான் இராமாய ணம், பாரதம் ஆகிய மகாகாப்பியங்களைப் பாடிய வான்மீகி, வியாசர் ஆகிய மகா கவிகளின் பிறப்பு பற்றியும் அறிவுக்குப் பொருந்தாத வகையில் கவிதைகள் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. அந்த மகாகவிகளும் தாங்கள் படைத்த காப்பிய நாயகர்களான இராம-இராவணாதியர், பாண் டவ-கௌரவராதியர் ஆகியோர் பிறப்பு பற்றி நம்ப முடியாத வகையில் கதைகள் புனைந்துள் ளனர்.

தமிழ்க் காப்பியங்களான சிலப்பதிகாரத் திலும், மணிமேகலையிலும் காப்பிய நாயகியரும் நாயகர்களும் சாதாரண மானிடர்களைப் போலவே பிறந்து வளர்ந்தவர்கள் என்பதனை இங்கு நினைவில் கொள்ள வேண்டும். ஆனால், வான்மீகி, வியாசர், இராம-இராவணாதியர், பாண்ட கௌரவாதியர் பிறப்பு பற்றிய கற்பனைக் கதைகள் மிகவும் சுவையானவையாக இருத்தலால், அவை சாதாரண மக்களால் நம்பப்பட்டு வருகின்றன.

வியாசர் மாபாரதக் காப்பியத்தை மட்டு மின்றி, சைவ-வைணவ தெய்வங்களைப் பாத்தி ரங்களாகக் கொண்ட பதினெட்டுப் புராணங் களையும் இயற்றியருளினர் என்று நம்பப்படு கிறது. இந்தப் புராணங்களைப் படைத்ததால் இந்து மதத்தை அழிவினின்று வியாசர் காப் பாற்றி விட்டதாக வேத மத ஆச்சாரியர்கள் வழி வழி நம்பி வந்துள்ளனர். (தொடரும்)

திருக்கண்ணமங்கை ஆண்டான்

முன்னுரை :

திருக்கண்ணமங்கை என்பது, சோழ நாட்டிலுள்ள திருமால் தலங்களுள் மிகவும் சிறப்புடையதொன்று. இந்தத் திவ்விய தேசம், திருவாரூர் இருப்புப் பாதை நிலையத்திலிருந்து வடமேற்கே, நான்கு கல் தொலைவில் உள்ளது. சுவாமியின் பெயர் பக்தவத்சலப் பெருமாள், பக்தர்ஆவிப் பெருமாள். தாயார், அபிடேக வல்லித் தாயார். விமானம், உத்பலாவதக விமானம். தீர்த்தம், தர்சபுட்கரிணி. கிழக்கே திருமுக மண்டலம். நின்ற திருக்கோலம், வருணனுக்கும் உரோமச முனிவருக்கும் அருள் புரிந்த தலம். முனிவர்கள் இங்குத் தேனீக்களாக இருந்து பெருமாளை ஆராதிக்கின்றனர் என்பது ஐதிகம். இதற்குச் சான்ருக இங்கு ஒரு பெருந் தேன்கூடு இன்றும் உள்ளது. திருமங்கையாழ்வார்இத்தலத்தைக் குறித்து 14 பாசுரங்கள் பாடி மங்களாசாசனம் செய்துள்ளார். கண்ணபிரானின் ஐம்பெரும் தலங்கள் (பஞ்ச கிருஷ்ணக்ஷேத்திரம்) எனப்படும் திருக்கண்ணபுரம், திருக்கண்ணங்குடி, திருக்கண்ணமங்கை, திருக்கண்ணன் கவித்தலம், திருக்கோவலூர் என்பனவற்றுள், திருக்கண்ணமங்கையும் ஒரு சிறந்த தலமாக விளங்கி வருகின்றது.

திருக்கண்ணமங்கை யாண்டான் :

இத்தகைய சிறப்பு மிக்க திருக்கண்ணமங்கையில், திவ்வியப்பிரபந்தம் நாலாயிரத்தையும் தேடித் தொகுத்து உலகிற் பரப்பியருளியவரும், அவற்றைத் தமிழ்வேதம் என வகுத்துக் கொடுத்தவரும், 'தமிழ் மறை இன்னிசை தந்த வள்ளல்' என்று வைணவப் பெருமக்களால் போற்றப்பெறுபவரும், வைணவ சமய ஆசாரியர்களில் முதல்வராக விளங்குபவருமாகிய நாதமுனிகள் என்னும் வைணவப் பெருஞ் சான்ருேடைய, சகோதரியின் புதல்வராக இலட்சுமிநாத தாதாச்சாரியார் என்பவர் ஒருவர், வாழ்ந்து வந்தார். அவர் செல்வளம் நிறைந்தவராக, திருக்கண்ணமங்கைத் தலத்தின் முதல்வராகி, மிக்க பெருஞ் சிறப்புடன் விளங்கி வந்தார். அதனுல் அவருக்குத் திருக்கண்ணமங்கை யாண்டான் என்றே, ஒரு சிறப்புப் பெயர் வழங்கி வருவதாயிற்று.

திருக்கண்ணமங்கையாண்டான், தனது தாய் மாமனுகிய அருட்டிரு நாதமுனிகளைப் போலவே, பலவகைக் கல்வி கேள்விகளில் தேர்ச்சி பெற்றுத் திகழ்ந்தார். நாதமுனிகளின் திருவடிகளை இடையருது வழுத்தி, ஞானபக்தி வைராக்கியங்களில் சிறந்தோங்கினுர். அந்தத் தலத்துப் பக்தவத்சலப் பெருமாளுக்குத் துளசி மாலைத் திருத்தொண்டு செய்து வந்தார்.

வேடர்களும்—நாய்களும் :

இங்ஙனம் திருக்கண்ணமங்கையாண்டான் இருந்துவர, ஒருநாள் இரண்டு வேடர்கள், வாள் ஏந்தியவர்களாய்த் தாங்கள் வளர்த்துக் கொண்டுவந்த வேட்டை நாய்களுடன், ஏதோ வேலையாக வேற்றூருக்குச் செல்லும் வழியில், திருக்கண்ணமங்கைப் பெருமாள் கோயிலைக் கண்டு வியந்து மகிழ்ந்தனர். அவர்கள் அக் கோயிலுக்குள் சென்று, பெருமாளை வணங்க விரும்பினுர்கள். அவ்விரு வேடர்களும் தாங்கள் அணிந்திருந்த தோல் மிதியடிகளைக் கோயிலுக்கு வெளியே கழற்றி, தம் நாய்களை அவற்றிற்குக் காவல் வைத்து விட்டுச் சென்றனர். இருவரும் கோயிலுக்கு உள்ளே சென்று பெருமாளை வணங்கிச் சிறிதுநேரம் கழித்துத் திரும்பினர். வேடர்கள் இருவரும் கோயிலுக்குச் சென்றிருந்த வேளையில் ஒரு நாய் மற்றெரு நாயின் காவலிலிருந்த தோற் செருப்பைக் கடித்தது. அது கண்ட அந் நாய் சினந்து, மற்றெரு நாயின் காவலிலிருந்த தோலின் செருப்பைக் கடிக்க முற்பட்டது. அதனுல் இரு நாய்களுக்குள்ளும் சீற்றமும் பூசலும் ஏற்பட்டன. அதனுல் இருநாய்களும் ஒன்றையொன்று கடுமையாகக் கடித்துக் கொண்டு, சண்டை செய்ய முற்பட்டன. அச் சண்டையில் ஒரு நாய் இறந்துவிட்டது. நாயின் பூசல் ஒலி கேட்டு, வேடர்கள் கோயில் வழிபாட்டை முடித்துக் கொண்டு விரைவில் வெளிவந்தனர். தன்னுடைய நாய் இறந்து கிடந்ததை, அவ் வேடர்களில் ஒருவன் கண்டான். மிகுந்த கோபம் கொண்டான். தன் நாயைக் கடித்துக் கொன்ற நாயை அடித்துக் கொன்ருன். அதன் சொந்தக்காரனுகிய வேடன்மீதும் மிகுந்த சீற்றம் கொண்டான். இருவருக்கும் பேச்சு முற்றிக் கைகலப்பும், தீவிரமான சண்டையும் ஏற்பட்டன. இருவருமே ஒருவரையொருவர் சினந்து, வாட்போர் செய்து, குத்திக் கொண்டு மாண்டொழிந்தனர்.

நிகழ்ச்சியும்—நினைவும் :

இந் நிகழ்ச்சியையும் காட்சியையும் காணப் பெருங் கூட்டம் கூடியது. அப்போது அவ் வழியே பல்லக்கில் ஏறிவந்த திருக்கண்ணமங்கையாண்டான், மக்கள் பெருந் திரளாகக் கூடி நிற்பதைக் கண்டு அருகிலிருந்தவர்களைக் காரணம் கேட்டார். அருகிருந்த மக்கள் சிலர், நாய்களின் சண்டை காரணமாக வேடர்கள் தங்களுக்குள் தாம் சண்டையிட்டுக் கொண்டு

மடிந்தொழிந்த செய்தியைக் கூறினர். அது கேட்ட திருக்கண்ண மங்கையாண்டான் மிகவும் வியப்பு அடைந்தார். நாய்களின் சண்டை முற்றி, நாய்கள் செத்ததுமன்றி, அவற்றின் உரிமையாளர்களாகிய வேடர்களும், தத்தம் நாய்களுக்காகப் பரிந்து ஒருவரை யொருவர் வாளால் வெட்டிக் கொண்டு இறந்தொழிந்தனரே என்று, அவர் பெரிதும் பரிவு கொண்டார். அவர் திருவுள்ளம் மிகவும் உருகியது. அவர் நீள நினைந்து பெரும் சிந்தனையில் ஆழ்ந்தார். ''நாய்கள் தங்களுடைய உரிமையாளர்களின் சேவையில் பெரிதும் ஈடுபட்டன. தம்முடைய உரிமையாளர்களின் தோற் செருப்பைப் பாதுகாக்கும் பொருட்டுத் தத்தம் உயிரையே துறந்தன. தம்மிடம் மிகவும் அன்பு கொண்டு தொண்டு பூண்ட நாய்களுக்காக, அவற்றின்பால் பரிவும் பாசமும் கொண்ட வேடர்கள், அவற்றின் பொருட்டுப் பழிக்குப் பழி வாங்க முயன்று தங்கள் உயிரையும் துறக்கத் துணிந்தனர். என்ன விந்தை இது!'' என்று வியந்தார்.

ஆண்டானின் பிரபத்தி :

'தன்னலம் மிகுந்த சிறுமா மனிதர்களே, இங்ஙனம் தம்மை நம்பித் தம் பக்கல் அன்புடன் தொண்டு பூண்ட நாய்களைக் காப்பாற்றத் தம் உயிரையும் ஒரு பொருட்டாக மதியாது துறந்தொழிக்க முற்படுவாராயின், கருணையே வடிவமான கடவுள் தன்னையே நம்பி, தனக்கே அடிமை பூண்டு, தன்னை வழிபட்டு வரும் அடியவர்களைக் காவாது கைவிடுவானோ? அருளே வடிவமான இறைவனின் பெருங்கருணை எப்படி யெல்லாம் தன்னை நம்பியுள்ள அன்பிற் சிறந்த அடியவர்களைக் காப்பாற்றுவதற்கு முனைந்து நலம் புரியும்!'' என்று, எத்தனையோ பல சிந்தனைகள் திருக்கண்ணமங்கையாண்டானின் திருவுள்ளத்தில் முகிழ்த்து அரும்பி மலர்ந்தன. தம்மை நம்பிய நாய்களுக்காகத் தம் உயிரையும் விடுவதற்குக்கூட மனிதர்கள் முற்படுவார்களாயின், கருணையே வடிவமான பெருமாளை நாம் மனமார நேசித்து, அவனையே நம்பி அன்பு பூண்டு ஒழுகி வந்தால், பெருமாள் நம்மைக் கைவிடுவானோ? ஒரு போதும் கைவிடான், காப்பாற்றியே கருணை புரிவான் என்று, அவர் தம் உள்ளம் தேறித் தெளிந்தது. அவ்வளவில் அவர் தம்முடைய செல்வம் பதவி அதிகாரம் சுற்றம் அனைத்தையும் துறந்தொழிந்தார். பெருமாள் கோயில் திருமுற்றத்திலேயே, அவனுடைய திருவடிகளே தஞ்சம் என்று அடைக்கலம் புகுந்து, வேறு எதிலும் சிந்தை செலுத்தாமல், படு காடு கிடந்து பக்தி செய்து வந்தார். அவருடைய பக்தியின் உறுதியையும், ஞானத்தின் சிறப்பையும், சரணாகதி நிலையினையும் கண்டு மகிழ்ந்த பெருமாள், அவருக்குப் பரமபதம் கொடுத்து அருள் புரிந்தார்.

பிள்ளை லோகாசாரியர் :

இறையருளைப் பெற விரும்புபவர்கள், நம்மை நாம் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று நினைத்தலாகாது. அவ்வாறே, இறைவனுக்குத் தொண்டு செய்பவர்கள், அத்தொண்டில் நாணம் கொள்ளலாகாது. நம்மை இறைவன் காப்பாற்றியருள்வான் என்று உறுதியான நம்பிக்கையும், திடமான பக்தியும் கொண்டிருக்க வேண்டுமேயல்லாமல், அவைகள் இன்றி, நாமே நம்முடைய ஆற்றலால் நம்மைப் பாதுகாத்துக் கொள்வோம், என்று, நாம் நம் சுய முயற்சிகளில் ஈடுபடுதல் ஆகாது.

இவ்வுண்மையை விளக்குங்கால் ''உபாயத்துக்குப் பிராட்டியையும், திரௌபதியையும், திருக்கண்ணமங்கையாண்டானையும் போல இருக்க வேணும். பிராட்டி தனது ஆற்றலைக் கைவிட்டாள். திரௌபதி நாணத்தை விட்டாள். திருக்கண்ணமங்கையாண்டான் தன் முயற்சியை விட்டான்'' என்று பிள்ளை லோகாசாரியர் தம்முடைய நூலில் குறிப்பிட்டருள்கின்றார்.

மணவாள மாமுனிகள்:

இதற்கு, மணவாள மாமுனிகள், ''ஒரு வேலைக்காரனுடைய நாயினை மற்றொரு வேலைக்காரன் அடிக்க, அவன் அது பொறாமல், அடித்தவனை எதிர்த்துப் பொருது, அவனையும் கொன்று, தானும் குத்திக் கொள்வதாக இருக்கிறபடியைக் கண்டு, ஒரு சிறிய மனிதன் தன்னபிமானத்திலே ஒதுங்கினது என்னும் இவ்வளவுக்காகத் தன்னை அழியமாறினபடி கண்டால், 'பரமசேதனன் அபிமானத்திலே ஒதுங்கினால் அவன் என்படுமோ!' என்று தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுதற்குரிய செயல்களை முழுவதும் விட்டு, அந் நாயினைப் போன்று, தம்மை நினைத்துக் கொண்டு, அப்போதே வந்து திருக்கண்ணமங்கையின் பத்தராவிப் பெருமாள் திருவாசலில் கைப்புடையிலே புகுந்து கண் வளர்ந்தார் என்பது பிரசித்தமன்றோ!'' என உரை விளக்கம் செய்தருளியிருக்கின்றார்.

வைணவச் சான்றோர் 'பட்டர்' :

வைணவப் பெருஞ் சான்றோர் ஆகிய பட்டர், தம்முடைய மாணவரான நஞ்சீயர் என்பவருக்குத் திருக்கண்ணமங்கையாண்டானின் சிறப்பை யுணர்த்தும் நிலையில், ''குருக்ஷேத்திரப் பூமியில் கண்ணபிரான் முன்னொரு கால் திருத்தேர்த்தட்டில் நீ எல்லாவற்றையும் கைவிட்டு, என்னுடைய திருவடிகளையே அடைக்கலமாகக் கைப்பற்று. யான் உன்னை எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுவித்து, உனக்கு வீடு பேற்றைத் தருகிறேன்'' என்று அருளிச் செய்த சரம சுலோகத்தின் பொருளியல் அனுபவம் இருக்கும் திறனைப் பக்தவத்சலப் பெருமாள் திருக்கண்ணமங்கையில் பலரும் அறிந்து கொள்ளும் பொருட்டுத் திருக்கண்ணமங்கை ஆண்டான் மூலமாகக் காட்டியருளினார்'' என்று அருளிச் செய்தாராம். இவ் வரலாறும், கருத்து விளக்கமும், நாம் நம் உள்ளத்தில் என்றும் இருத்தி வைத்துப் போற்றுதற்குரியனவாகும்.

—ஆசிரியர்.

தத்துவநெறிக் கொள்கைகள்

பேராசிரியர் திரு. க. வெள்ளைவாரணனார்,

தமிழ்த் துறைத் தலைவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

விழைவு, அறிவு, செயல் என்னும் மூவகையாற்றலும் படிப்படியே வளரப்பெற்று உலக நுகர்ச்சியில் ஈடுபடும் மக்கள் இன்ப நுகர்ச்சியில் விருப்பும் துன்ப நுகர்ச்சியில் வெறுப்பும் உடையராய்ப் பிறரால் ஈட்டப்படும் நல்வினைப் பயன்களைத் தாம் கவர்ந்து கொள்ளவும் தாம் செய்த தீவினைப் பயன்கள் தம்மைப் பற்றி வருத்தாதவாறு தப்பியோடவும் முயலுதலை உலகியலிற் காண்கின்றோம். இவ்வாறு ஒருவர்க்குரிய நல்வினைப் பயனாகிய இன்பத்தை மற்றொருவர் கவராதவாறும் தாம் நுகர்தற்குரிய தீவினைப் பயனாகிய துன்பத்தை நெகிழவிட்டு ஓடாதவாறும் அவரவரால் ஈட்டப்படும் இருவினைப் பயன்களை அவரவரே நுகரும்படி அரசனது ஆணைபோல் வரையறுத்துச் செலுத்துவது இறைவனது ஆணையாகும். இறைவனது ஆற்றலாகிய ஆணை, அவ்வவ்வுயிர்களின் இருவினைப் பயன்களை முன்னிட்டு அவ்வச் செயல்களை நிகழச் செய்வதாதலின், தனக்கென விருப்பு வெறுப்பு இன்றி உயிர்களது ஊழினைக் கருவியாகக் கொண்டு செயல்புரியும் இறைவனது ஆற்றலைப் 'பாலது ஆணை' என்றார் தொல்காப்பியனார். பால், வகை, ஊழ், நியதி, விதி என்பன ஒரு பொருட் சொற்கள்.

ஒருபாற் கோடாது நடுநிலையில் நின்று ஆட்சி புரியும் வேந்தனது ஆணை இல்லையாயின் எளியோர் பொருளை வலியோர் கவரும் முறைகேடுண்டாகும். அதுபோன்றே எல்லாப் பொருளையும் வகுத்து இயக்குபவனாகிய இறைவனது ஆணையாகிய முறை நிகழாதாயின் ஒருவர் செய்த வினைப் பயனை மற்றொருவர் கவர்தலாகிய முறைகேடு நிகழும். இருவினையும் உணர்வற்றன. எனவே அவை இன்ப துன்ப நுகர்ச்சிக்குக் காரணமாதலேயன்றி அந்நுகர்ச்சி வினைசெய்தானைச் சென்று அடையுமாறு செய்விக்கும் ஆற்றலுடையன அல்ல. ஆகவே உயிர்களுக்கு இருவினைப் பயன் இறைவனது ஆணையினால் வந்து சேரும் என்பதே பொருத்தமுடையதாகும். அரசன் தனது ஆணையை ஏனைய அதிகாரிகள்பால் வைத்து அவர்களைக் கொண்டு அவ்வத் தொழில் நிகழும்படி செய்வித்தல்போல, இறைவனும் தனது ஆணையினை உயிர்க்குரிய இருவினையின்மேல் வைத்து அவற்றைக் கருவியாகக் கொண்டு வினைப்பயன்களை உயிர்கள் நுகரச் செய்விப்பன். இக்கருத்தினை உள்ளத்துட் கொண்டே 'பால்வரை தெய்வம்' என்ற தொடரால் தொல்காப்பியர் இறைவனைக் குறிப்பிடுவாராயினர்.

உழவர் செய்யும் உணவு தொழிலுக்குத் தக்க பயனை விளைநிலம் விளைவிப்பதன்றி, அவ்வுழவுத் தொழில்தானே விளைக்கமாட்டாது. அது போலவே உணவும் விதையுமாகத் தொன்று தொட்டு வரும் வினைப்பயன்களை உயிர்கட்குக் கூட்டுவிப்பவன் இறைவனே யன்றி அவ்வினை தானே கூட்டுவிக்கும் ஆற்றலுடையதன்று என்பது பண்டைத் தமிழர் துணிபாகும். இவ்வாறு தெய்வத்தைக் குறித்தும் உயிர்களது வினையினைக் குறித்தும் தொல்காப்பியனார் காலத் தமிழ் மக்கள் கொண்ட துணிபினைப் 'பால்வரை தெய்வம்' என வரும் தொல்காப்பியச் சொற்றொடர் உய்த்துணர வைத்தல் உணரத்தகுவதாகும்.

இறைவன் இயல்பாகவே பாசங்களில் நீங்கியவன் என்பதும், முற்றுணர்வுடையவன் என்பதும் ஆகிய உண்மையினை 'வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்' (மரபியல்-94) எனவும், 'சிதைவில என்ப முதல்வன் கண்ணே' (மரபியல்-106) எனவும் வரும் தொல்காப்பியத் தொடர்கள் நன்கு விளக்குவன. வினையின் நீங்கி விளங்கிய பேரறிவினையுடையான் முனைவன் (முதல்வன்) எனவே அவனது அருளால் வினையின் நீக்கி விளக்கப் பெறும் சிற்றறிவினையுடையன உயிர்கள் என்பதும் உய்த்துணர வைத்தவாறும். வினையின் நீங்கியவன் முனைவன் எனவே இயல்பாகவே பாசங்களின் நீங்கிய அம்முதல்வனுக்கு வினை காரணமாக வுளவாகும் வேண்டுதல் வேண்டாமை இல்லை என்பதும் அவை இல்லையாகவே தூயமெய்யுணர்வினனாகிய இறைவன் பிறப்பு இறப்பு இல்லாதவன் என்பதும் தானே பெறப்படும்.

கடவுளை வழிபடுதல் மனவுணர்வுடையராகிய மக்களது கடமை என்பதும் தமக்குரிய வழிபடு தெய்வத்தின் திருவருளால் பெரும் செல்வத்துடன் தம் குடும்பம் வாழையடி வாழை

யாக இவ்வுலகில் நிலைபெற்று வளர இனிது வாழலாம் என்பதும் ஆகிய உண்மையினை முன்னைத் தமிழ்ச் சான்றோர் மக்களுக்கு அறிவுறுத்தி வந்தார்கள், இவ்வாறு தெய்வத்தைப் புறம் நிறுத்தி அத்தெய்வத்தின் திருவருளால் நீடு வாழ்வீராக எனப் பாட்டுடைத் தலைவரைக் குடும்பத்துடன் சேர்த்து வாழ்த்தும் வாழ்த்தியல், புறநிலை வாழ்த்து என வழங்கப் பெற்றது. எடுத்துக் கொண்ட செயல் இனிது நிறைவேறுவதற்கு ஏதுவாகிய தெய்வம் துணையாய் நின்று நின்னைப் புறங்காப்பப் பழிதீர்ந்த செல்வத்துடன் வழிவழியாகச் சிறந்து பொலிமின் என வாழ்த்துதலால் இது புறநிலை வாழ்த்து எனப்பெற்றது. இவ் வாழ்த்தியல் கலிப்பாவிலும் வஞ்சிப்பாவிலும் பாடப்பெருது ஏனைய பாக்களில் பாடப்பெறும் என்பதனை,

'வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வ மொடு வழிவழி சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே
கலிநிலை வகையும் வஞ்சியும் பெறுஅ

(தொல். செய். 110)

என்பதனுல் தொல்காப்பியனுர் வரையறுத்து உள்ளார். இதனுல் தெய்வ வழிபாட்டினல் மக்களுக்கு உளவாகும் நற்பயன்களை ஆசிரியர் அறிவுறுத்தியுள்ளமை புலனும்.

தெய்வத்திற்குத் திருவுருவமைத்து முன்னின்று பரவி வழிபடும் முறையும், அங்ஙனம் பரவுதற்கேற்ற செய்யுள் ஒத்தாழிசைக் கலி வகையுள் ஒன்ருக அடங்கும் என்பதும், அது தான் வண்ணகம் எனவும் ஒருபோகு எனவும் இருவகைப்படும் என்பதும்,

'ஏனை யொன்றே
தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே'

(செய்யுள்-138)

எனவும்,

'அதுவே
வண்ணகம் ஒருபோகென இரு வகைத்தே'

(செய்யுள்—139)

எனவும் வரும் நூற்பாக்களால் விளக்கப் பெற்றன. தாம் வழிபடு தெய்வத்தின் முன்னிலையில் நின்று சூளுறவு (சபதம்) செய்து தம் உள்ளத்துறுதியைப் புலப்படுத்தும் உலகியல் வழக்கினை 'முன்தேற்று' (தொல். சொல். 383) என்ற தொடராலும் தெய்வத்தின் முன்னிலையிற் சூளுறவு செய்வோர் தாம் சொல்லிய உறுதிமொழியில் தவறுவாராயின் அவர்தம் சூளுறவே அன்னோர்க்குத் தீங்கு விளைக்கும் என்பதனை 'இன்னுத் தொல்சூள்' (கற்பியல் 6) என்ற தொடராலும் தொல்காப்பியர் குறிப்பிடுகின்ருர்.

இன்னது நிகழும் என்று அறியாது அஞ்சு தலையுடைய களவுக் காலத்தே ஒருவனும் ஒருத்தியும் அன்புடையராய் ஒழுகுங்கால் அவர்கள் வருந்தாதபடி தோன்ருத் துணையாய் நின்று அருள்புரிவதோர் தெய்வம் உண்டு என உணர்ந்த தோழி, அவ்விருவர்க்கும் திருமணம் நிறைவேறுதல் வேண்டிக் கடவுளை ஏத்தி வழிபடும் இயல்பினை 'நாமக்காலத்துண்டெனத் தோழி, ஏமுறு கடவுள் ஏத்திய மருங்கினும்' (கற்பியல் 5) என்ற தொடராலும், மனைமாட்சியிற் சோர்வில்லாத தலைவியைத் தலைவன் மணந்து கொள்ளுதல் வேண்டித் தெய்வத்தைப் பரவிய தோழி அவ்விருவர்க்கும் திருமணம் நிறைவேறிய நிலையில் தெய்வத்திற்குப் பரவுக்கடன் கொடுத்தல் வேண்டும் என விரும்புந் திறனை ''அற்றமில்லாக் கிழவோட்கு அட்டிய தெய்வக் கடத்தினும்' என்ற தொடராலும், தலைவனை மணந்து கற்புக் கடம் பூண்ட தலைமகள் தன் கணவற்குத் தொழுகுலமாகிய தெய்வத்தை அஞ்சியொழுகுமியல்பினைத் 'தெய்வம் அஞ்சல்' (மெய்ப். 24) என்னும் மெய்ப்பாட்டினுலும், தலைவனுடன் போகிய தலைவிக்கு வழியில் தீங்கு நேராதவாறு அருள் புரிதல் வேண்டும் எனச் செவிலித்தாய் தெய்வத்தை வழிபடுந்திறத்தினைத் 'தெய்வம் வாழ்த்தல்' என்பதனுலும் தொல்காப்பியனுர் அறிவுறுத்துகின்ருர்.

வேந்தனது வெற்றிக்கு அடையாளமாகிய கொடியானது பிற வேந்தரது கொடியினும் மேற்பட்டு விளங்கும் நிலையும், வேந்தன் பகைவரது அரணையழித்தலும், மன்னன் தன்னைச் சார்ந்தோர் அனைவர்க்கும் வரையாது வழங்கும் வண்மையும் எனக் குற்றமற்ற சிறப்பினல் முற்படப் புகழ்தற்குரிய புறத்துறைகள் மூன்றையுங் குறித்து நல்லிசைப் புலவர் பாடுதற்குரிய பாடாண்திணை பற்றிய பாடல்கள் உலகினை இயக்கும் முழுமுதற் பொருளாகிய கடவுளை வாழ்த்திய குறிப்புடன் இயைந்து வரும் என்னும் இம்முறைமையினை,

'கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே'

(தொல். புறந். 33)

என வரும் சூத்திரத்தால் ஆசிரியர் குறிப்பிடுவர். அரசியல் வாழ்வில் வேந்தர் முதலாயினுர் பெறும் வெற்றிகளுக்கெல்லாம் கடவுளின் திருவருளே உறுதுணையாய் நின்று உதவுந் திறத்தைப் புலத்துறை முற்றிய சான்ருேர் ஆள்வோர்க்கு அறிவுறுத்தி அவர்களுடைய உள்ளத்தைத் திருத்துதல் வேண்டும் என்பதே தொல்காப்பியனுர் கருத்தாகும் என்பது மேற்காட்டிய நூற்பாவால் இனிது விளங்கும்.

எல்லாம் வல்ல கடவுளை நாயகனுகவும் அவன்பால் எல்லையற்ற பேரன்புடைய தம்மை அவனருள் விழைந்த தலைவியாகவும் கருதி வழிபடும் மரபு தொல்காப்பியனுர் காலத்திலேயே தமிழகத்தில் நிலைபெற்று வழங்கியதெனத் தெரிகிறது. இச்செய்தி,

'காமப் பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் பாங்கினும் என்மனுர் புலவர்' (28)

என வரும் புறத்திணையியற் சூத்திரத்தால் உய்த்துணரப்படும். இத்துறைப் பொருளாகக் கடவுள் மாட்டுத் தெய்வப் பெண்டிர் நயந்த பக்கமும், மானிடப் பெண்டிர் நயந்த பக்கமும் பாடப் பெறும் என்பர் இளம்பூரணர்.

இவ்வுலகில் மக்கள் அடைவதற்குரிய உறுதிப் பொருள் அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றுமேயாதலின் இம்மூன்றையும் 'மும்முதற்பொருள்' என்பர் தொல்காப்பியர். எல்லா உயிர்களாலும் விரும்பி நுகரப்படுவது இன்பம். இன்பத்திற்குக் காரணமாக அறிவுடைய மக்களால் ஈட்டப்படுவது பொருள். பிறவுயிர்க்குத் தீங்கு நினையாத தூயமனத்தினல் பொருள் செய்து ஒழுகும் முறை அறம். நுகர்தல் வேட்கை முறை பற்றி 'இன்பமும் பொருளும் அறனும் என்ருங்கு அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற் காமக் கூட்டம்' எனவும், செய்கைமுறை பற்றி 'அறமுதலாகிய மும்முதற் பொருட்கும்' எனவும் தொல்காப்பியர் எண்ணியுள்ளார். அறத்திஞற் பொருளாக்கி, அப்பொருளால் இன்பம் நுகர்தலே மக்களது நல்வாழ்க்கை முறையாகும். இவ்வாறு மூன்று பகுதிகளாக நிகழும் வாழ்க்கை முறையினை 'மூன்றன் பகுதி' எனத் தொகுத்துரைத்தார் தொல்காப்பியர். அவர் உரைத்த முறையே அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால்களாகத் திருக்குறளை வகுத்துரைத்தார் திருவள்ளுவர் என்பது இங்கு ஒப்பு நோக்குதற்குரியதாகும்.

நெல்லிஞற் கட்டுப்பார்த்தும் கழங்கு பார்த்தும் முருகனை வழிபடும் வேலனைக் கொண்டு வெறியாடச் செய்து அவ்விழாவில் வேலன் மேல் தெய்வம் ஏறி நிகழ்ந்தன உரைக்க உற்றன அறியும்முறை மலைவாணர் வழக்கம் ஆகும். வெறி-மணம். இச்சொல் தெய்வ மணமாகிய முருகு என்னும் பொருளில் வழங்கப்பெறுகிறது. தெய்வ மணமாகிய முருகு, வழிபடும் அன்பர் மேல் ஆவேசித்து நிற்கும் இயல்பினை வெறி என்பர். வழிபடு கடவுளாகிய முருகன் பூசை செய்யும் வேலன் மேல் ஆவேசித்து நின்று முக்கால நிகழ்ச்சிகளையும் அறிவித்தல் வேண்டும் என்னும் நோக்குடன் செய்யப்பெறும் வழிபாடு வெறியாட்டு எனப்படும். இவ்வழிபாட்டின் பயனுக மறைவில் நிகழ்ந்தனவும் தெய்வத்தால் வெளியாகி விடுதல் உண்டு. 'கட்டினுங் கழங்கினும் வெறியென இருவரும், ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்' (களவியல் 25) எனவும், 'வெறியாட்டிடத்து வெருவின் கண்ணும்' (களவியல் 21) எனவும் வருந்தொடர்களால் இவ்வழக்கத்தின் நம்பிக்கையினைத் தொல்காப்பியரும் குறிப்பிடுகின்றூர்.

மக்களது நல்லறிவின் பயனுக அமைவது ஒழுக்கம், வாழ்க்கையில் மேலும் மேலும் உயர்ச்சியடைவதற்குக் கருவியாகிய ஒழுக்கவுணர்வுடைய மக்கட் குலத்தாரை உயர்திணை எனவும் அவ்வுணர்வு வாய்க்கப் பெருத விலங்கு முதலிய தாழ்ந்த உயிர்களேயும் கல் மண் முதலிய உயிரல் பொருள்களையும் அஃறிணையெனவும் பிரித்து வழங்குதல் தொன்று தொட்டுவரும் தமிழ் மொழி மரபாகும். மக்கட் குலத்தாரை உயர்திணையாக உயர்த்துவது உயிரினும் சிறந்த ஒழுக்க நெறியேயாம். ஒழுக்க நெறியினை அடிப்படையாகக் கொண்டே தமிழ் மக்களின் குடும்ப வாழ்வும் அரசியலாட்சி முறையும் தத்துவக் கொள்கைகளும் உருப்பெற்று வளர்ந்தன. இவ்வுலகியல் வாழ்வுக்கு இன்றியமையாச் சிறப்பினதாக வற்புறுத்தற்குரியது ஒழுக்க நெறி என்பார், 'கட்டமை ஒழுக்கம்' என்றும், அந்நெறியில் வழுவாதொழுகும் சான்ருேர் தம் சால்பினது வெற்றி உலகமாந்தர் எல்லோராலும் கண்டு பாராட்டிப் போற்றுதற்கேற்ற நல்ல காட்சியாகும் என்பார், 'கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை' என்றும் ஒழுக்கத்தினது விழுப்பத்தினைத் தொல்காப்பியனர் வற்புறுத்துரைத்தார். அறவோராகிய அந்தணர் பாலும் சான்ருேர் கண்ணும் அழியாச்சிறப்பினையுடைய ஏனைப் பெரியோரிடத்தும் இவ்வாறு ஒழுகுதல் வேண்டும் என ஒருவர் ஒருவர்க்கு அறிவுறுத்தும் முறையினை 'அந்தணர் திறத்தும் சான்ருேர் திறத்தும், அந்தமில் சிறப்பிற் பிறர் பிறர் திறத்தினும், ஒழுக்கம் காட்டிய குறிப்பு' என்பர் ஆசிரியர். தலைவன் தனக்குரிய ஒழுக்கத்தினைப் பேணுது வழுவியது கண்ட தலைவி, தன் கணவனது பழிநிலைக்கு நாணுந் திறத்தைப் 'பேணு ஒழுக்கம் நாணிய பொருளினும்' என்ற தொடராலும், பெரியோர்க்கு ஒழுக்கமே பெருமை தரும் எனத் தோழி அறிவுறுத்தும் இயல்பினைப் 'பெரியோரொழுக்கம் பெரிது எனக் கிளந்து' என்ற தொடராலும் ஆசிரியர் புலப்படுத்தியுள்ளார். ஆகவே ஒழுக்கம் உயிரினுஞ் சிறந்ததென்பது தொல்காப்பியனர் துணிபாதல் பெறப்படும். ஒழுக்க நெறியினைக் குறிக்கொண்டு போற்ருது ஒருவர் பிறர்க்குச் செய்த கொடுஞ் செயல், செய்த அவரையே பற்றி வருத்துவதாகும். இவ்வுண்மையினைக் 'கொடியோர் கொடுமை சுடும்' எனத் தம் காலத்து வழங்கிய பழமொழியின் வாயிலாகத் தொல்காப்பியனர் அறிவுறுத்தும் திறம், நல்ல தன் நலனும் தீயதன் தீமையும் தவருது பயன் தரும் என்பதில் அவர் கொண்ட உறுதிப்பாட்டினை இனிது புலப்படுத்துதல் காணலாம்.

இப்பிறப்பிற்குரியனவாகிய இம்மைச்செல்வமும் இனி வரும் பிறப்புக்களிலும் துணை செய்வனவாகிய அறச் செயல்களும், பிறப்பற முயலும் பெருநெறியாகிய துறவும் ஆகிய இம்மூன்று நிலைகளும் மக்கள் வாழ்க்கையின் திறங்கள் என முன்னைத் தமிழ்ச்சான்ருேர் ஆராய்ந்து உணர்த்தினர். கணவனும் மனைவியுமாக வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து மக்களொடு மகிழ்ந்து மனையறம் பேணிச் சுற்றத்தாரைப் போற்றி விருந்தோம்பி இவ்வாறு எல்லோர்க்கும் ஆதரவாக வாழ்வதே இம்மை வாழ்வாகும். இல்லறம் நிகழ்த்துவோர் தாம் நுகர வேண்டிய இன்பங்களை யெல்லாம் நுகர்ந்து முடித்து முதுமைப் பருவந் தொடங்கிய நிலையிலே மிக்க காமத்து வேட்கை நீங்குதல் வேண்டும். இங்ஙனம் ஐம்புல நுகர்ச்சியில் தமக்குள்ள பற்றினை விட்டொழித்தலாகிய இத்தூய வொழுகலாற்றினைக் 'காமம் நீத்த பால்' எனத்தொல்காப்பியர் சிறப்பித்துப் போற்றுவர். இளமையும் யாக்கையும் செல்வமும் நிலையாதன எனத் தெளிந்து எவ்வுயிர்க்கும் இரக்கமுடையராய் உலக வாழ்விற் பற்றற ஒழுகுதல் துறவு நிலையாகும். இத்துறவினை 'அருளொடு புணர்ந்த அகற்சி' என்பர் ஆசிரியர்.

செருக்கு, சினம், சிறுமை, இவறல், மாண்பிறந்த மானம், மாணுஉவகை என்பன அறுவகைக் குற்றங்கள், எளிதில் வெல்லுதற்கரிய உட்பகையாகிய இவ்வறுவகைக் குற்றங்களையும் சான்றோர் தம் உள்ளத்துறுதியால் வென்று மேம்படுந்திறத்தினை 'அரும்பகை தாங்கும் ஆற்றல்' என்பர் தொல்காப்பியர். 'குற்றமே அற்றந் தரூஉம் பகை' என்றார் திருவள்ளுவரும். மக்களது நல்வாழ்வினைச் சிதைப்பன மனத்தின் கண் உண்டாகும் தீய நினைவுகளே என்பதும் அத்தகைய மணமாசுகளைக் 'களையவல்ல நல்லுணர்வுடையவர்கள் ஆற்றல் மிக்க நன்மக்கள் என்பதும் 'அரும் பகை தாங்கும் ஆற்றலானும்' என வருந் தொல்காப்பியத் தொடரால் இனிது புலனும். நீராடல், நிலத்திடைக் கிடத்தல், தோலுடுத்தல், சடை புனைதல், எரியோம்பல், காட்டிற் கிடைத்த உணவினை உட்கொள்ளுதல், கடவுள் வழிபாடு, விருந்தோம்பல் எனத் தவஞ் செய்வோர்க்குரிய இயல்புகள் எட்டு என்பர். இவற்றை 'நாலிரு வழக்கிற் றாபதப் பக்கம்' எனத் தொல்காப்பியனார் தொகுத்துக் கூறியுள்ளார்.

இல்வாழ்க்கையினைக் களவும் கற்பும் என இருவகைப்படுத்துணர்த்திய ஆசிரியர், கணவனும் மனைவியுமாக இல்லறம் நிகழ்த்திய இருவரும் இன்ப நுகர்ச்சியெல்லாம் குறைவற நுகர்ந்து மனவமைதி பெற்ற நிலைமைக்கண் மனையறத்திற்குப் பாதுகாவலாகிய மக்களால் நிறைந்து அறத்தையே புரியும் சுற்றத்துடன் உயிரினுஞ் சிறந்த செம்பொருளாகிய முழுமுதற் கடவுளின் இயல்பினை அறிஞர்பால் கேட்டு ஒரு நெறிய மனம் வைத்து உணர்ந்து போற்றுதலே இது வரையும் தாம் அன்பினல் நிகழ்த்திப் போந்த இல்லறத்தின் முடிந்த பயனாகும் என்பதனைக்,

'காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே'
(தொல். கற். 51)

எனவருங் கற்பியற் சூத்திரத்தால் வாழ்க்கையின் முடிபொருளாக அறிவுறுத்துவர் தொல்காப்பியர் 'என்னிலும் இனியான் ஒருவன் உளன்' எனப்பெரியார் கூறியவாறு எல்லாவுயிரிடத்தும் உயிர்க்குயிராய்ச் சிறந்து விளங்குதல் இறைவனது இயல்பாதலின் உயிர்கட்குத் தோன்றாத் துணையாய் உள்நின்று அருள்புரியும் கடவுளைச் 'சிறந்தது' என்ற பெயரால் தொல்காப்பியனார் குறித்துள்ளார். சிறந்தது எனத் தொல்காப்பியனார் குறித்த முழு முதற் பொருளையே 'செம்பொருள்' எனத் திருவள்ளுவர் குறித்துள்ளார் என்பது, 'பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ், செம்பொருள் காண்பதறிவு' (358) என்புழிச் சிறப்பென்னுஞ் செம்பொருள்'. என அடைபுணர்த்தோதிய சான்றால் காணலாம். சிறந்தது எனச் சான்றோராற் போற்றப் போற்றப் பெற்று வரும் முழுமுதற் பொருள் என்பது மேற்குறித்த திருக்குறள் தொடரின் பொருளாகும்.

'கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி' (356)

'ஓர்த்துள்ளம் உள்ள துணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு' (357)

எனவரும் திருவள்ளுவர் வாய்மொழிகள் தொல்காப்பியனார் கூறியவாறு சிறந்தது பயிற்றும் இயல்பினை விரித்துரைப்பனவாம்.

இவ்வாறு ஆசிரியர் தொல்காப்பியனார் தம் காலத்தில் தமிழகத்தில் நிலவிய கடவுள் வழிபாட்டு முறைகளையும் முன்னைத் தமிழ்ச் சான்றோர் அறிவுறுத்திய மெய்ந்நெறிக் கொள்கைகளையும் இயற்றமிழிலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் ஒத்த மதிப்புடன் விளக்குதலால், அவ்வாசிரியர் இவ்வுலகிற் பல்வேறு வகையில் நிகழும் எல்லா வழிபாடுகளையும் ஏற்றுக் கொள்ளும் முழு முதற் பொருள் ஒன்றே என்னும் தெளிவுடைய கொள்கையினர் என்பது நன்கு தெளியப்படும்.

**

நூல்கள் அறிமுகம்

பெரியபுராண ஆய்வுரை (நான்காம் தொகுதி) : இந்நூல், மும்மொழிப் புலமை வேந்தர்—செந்தமிழ்ச் சிவநெறிப் பேரறிஞர்—அருட்டிரு மறைமலை அடிகளார் அவர்களின் புதல்வர் 'திருமுறைச் செல்வர்—சித்தாந்த தினகரர்' பேராசிரியர் திரு. மறை. திருநாவுக்கரசு அவர்களால் எழுதி வெளியிடப் பெற்றது. சைவ சமய ஆசிரியர்களாகிய சம்பந்தர் அப்பர் சுந்தரர் என்னும் மூவர் வாழ்க்கை வரலாறுகள், தனித் தனியே மூன்று தொகுதிகளாக இவரால் முன்பே வெளியிடப்பட்டுள்ளன. இந் நான்காம் தொகுதியில், ஏனைய அறுபது (60) நாயன்மார்களின் வரலாறுகள் அனைத்தும், அழகுற விரிவாக ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளன. எளிய இனிய தெளிவான, சிறந்த விறுவிறுப்பான நல்ல தமிழ் நடை. நாயன்மார்களின் தெய்விக வரலாறுகளை, அகச் சான்றுகளுடனும், அரிய ஆராய்ச்சிக் குறிப்புக்களுடனும், நூலாசிரியர் திறம்பட எழுதியுள்ளார். இடையிடையே பல வினாக்களை எழுப்பிக் கொண்டு, அதற்குத் தகுந்த தெளிவான விடைகளையும் அளித்துள்ளார். பெரிய புராணம் பற்றி இத்தகைய ஆராய்ச்சி நூல், இனிய எளிய முறையில், இவற்றிற்கு முன் பரவலாக எழுதப்படவில்லை எனலாம். அன்பர்கள் அனைவரும் படித்துப் பயன்பெறத் தக்க சிறந்த நல்ல நூல். திருத்தமான நல்ல அழகிய பதிப்பு. விலை ரூபா: பத்து

இந்நூல் கிடைக்குமிடம் : **மறைமலை அடிகள் மன்றம்,**
புன்செய்ப் புளியம்பட்டி — 638439
கோவை மாவட்டம்.

—ஆசிரியர்.

வேதமும் வேதாந்தமும்

—வித்வான்
இராம. பட்டாபிராமன்

நம் இந்து மதம் வேதத்தினைச் சட்ட நூலாகக் கொண்டது. நம் தமிழ் அறிஞர்களும் வேதக் கருத்துக்களைச் சங்க காலந்தொட்டுத் தம் நூல்களில் எடுத்தாண்டு வந்துள்ளனர். நான்மறைக் கருத்துக்களை நயம்பட எவ்வாறு தம் நூலுள் ஏற்றியுள்ளனர் என்று காண முயல்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

பரிபாடல் :

வேதத்தில் உரைத்தவைகளை வலந்து (தொகுத்துக்) கூறுவதாக பரிபாடலில் (3 : 10-11) ''மாயோய்நின் வயிற் பரந்தவை யுரைத்தேம், மாயா வாய் மொழி யுரை தர வலந்து'' என்ற வரிகள் வந்துள்ளன. இவ்வரிகட்கு உரை எழுதிய பரிமேலழகர், ''நித்தமாகிய வேதம், தேவரும் மூவேழுலகுகளும் உயிர்ப்பன்மையும் நின்கண் தோன்றியவாறு அறிந்து கூறும். சிற்றறிவினேமாகிய யாம் அவற்றுள் சிலவற்றை முறை பிறழக் கூறுவதல்லது அவ்வாறு எல்லாம் கூறுதற்கு உரியமல்லம் என்பார் வலந்துரைத்தேம் என்ருர்'' என்று கருத்தினை விளக்கி நயவுரை அளித்துள்ளார்.

''கருடன் திருமாலினைத் தாங்கிச் செல்வதாகத் தன்னை வியப்ப, அறிந்தமால், 'மெய்ம்முழுதும் தாங்க வேண்டா; ஒரு கையிற் சிறு விரற்றுணைத் தாங்கினை யெனின் போதும்' எனக் கூறி அத்துணை அவன்மேல் வைப்ப, அவ்விரற்கு ஆற்ருது பாதலத்து வீழ்ந்து துதித்தான்'' என்ற வரலாறு சாம வேதத்திற் கூறப்பட்டுள்ளது. இதனைப் பரிபாடல் (3-62) தொகுத்துக் கூறி, ''ஏ எ இனகிளத்தலின்' என்றெடுத்து ஓதுகின்றது. இங்கு 'ஏஎ' என்னும் இசையுடைய சாம வேதம் உபசார வழக்கால் 'ஏஎ' எனக் குறிப்பிடப்படுகின்றது.

வேதாந்தம் :

'ஓங்கு பரிபாடல்' என்று சிறப்பித்துக் கூறப்படும் நூலுள் மூன்ரும் பாடல், கடுவன் இளவெயினனர் என்ற வேதாந்தப் புலவரால் இயற்றப்பட்டு, பெட்டனுகனரால் பண்ணுப் பாலை யாழில் இசையமைக்கப்படட்து. இப்பாடற்றிறனுக்கோர் காட்டாக அடியிற் கண்ட வரிகளை ஸ்ரீமத் பகவத் கீதையுடன் ஒப்பிடுவோம். பரிபாடல் (3 : 3 முதல் 8, 10) ''மணிதிகழ் உருபின்மா அயோயே! நீ வளி விசும்பு நிலன்நீர் ஐந்து, திங்களுமறனுமை வரும், திதியின் சிருரும் விதியின் மக்களும், மாசில் எண்மரும் பதினெரு கபிலரும், தாமா விருவரும் தருமனும் அடங்கலும், மாயோய் நின்வயிற் பரந்தவை.''

கடுவன் இளவையினர் :

கீதையில் கண்ணனுடைய பெருமைகளைக் கேட்ட அருச்சுனன் அவற்றை நேரில் காண வேண்டும் என்று விருப்பமுற்றுக் கண்ணனை வேண்ட, அவர் அவற்றைக் காட்ட விசுவரூபம் தாங்கினர். பேருருக் கொண்ட கண்ணன் 'ஆதித்யர்களைப் பார். வசுக்களைப் பார். அசுவினி தேவரைப் பார். மருத்துக்களைப் பார். பாரதா, இதற்கு முன் கண்டிராத பல ஆச்சர்யங்களைப் பார். அர்ஜுனு! இன்று, இங்கே, என் உடலில் சராசரமான உலகம் முழுதும் ஒருங்கு நிற்பதைப் பார். இன்னும் வேறு நீ எதைக் காண விரும்பினும், அதை இங்குக் காண்' என்று கூறினர். இக்காட்சியை அப்படியே கண்டவர் போல் கடுவன் இளவெயினனர் கூறியுள்ளார். என்னே! இந்து சமய அறிஞர்கள் தம் ஒற்றுமை மனம்!

கலித்தொகை :

கலித்தொகைக் கடவுள் வாழ்த்தில் ''ஆறறி அந்தணர்க்கு அருமறை பல பகர்ந்து, தேறுநீர் சடைக்கரந்து திரிபுரம் தீமடுத்து'' எனச் சிவபெருமான் புகழப்படுகின்ருர். இவ்வரிகளில் வந்துள்ள 'ஆறறி' என்ற தொடர் ஆறு அங்கங்களாகிய நிருத்தம், வியாகரணம், கற்பங்கள், கணிதம், பிரம்மம், சந்தம் முதலியவைகளைக் குறிப்பதாகவும், ''அருமறைபல'' என்ற தொடர் ''தைத்திரியம்'', பௌடியம், தலவகாரம், சாமவேதம் என்ற நான்கினையும் அல்லது வேதவியாதர் வகைப்படுத்திய காலத்து ஓதுகின்ற நான்கு வேதங்களுமாம்'' என ஆசிரியர் நச்சினர்க்கினியர் உரை எழுதிச் செல்கின்ருர். மேலும் அவர் தம் உரையில் ''அந்தத்தை அணவுவார் அந்தணர் என்றது வேதாந்தத்தையே பொருள் என்று மேற்கொண்டு பார்ப்பார்'' என்று விளக்கந் தருகிருர்.

இவ்வாறு நம் சமயம் வேத வேதாங்க வேதாந்தங்களை அடிப்படையாகக் கொண்டது என்பதனைச் சங்க நூல்களும் விளக்குகின்ற பான்மை அறிவிற்கு விருந்தாகின்றது.

அத்வைதன் :

ஐங்குறுநூற்றின் முதற் பாடல், நீல மேனிவால் இழை பாகத்து ஒருவன் இருதாள் நிழற்கீழ் மூவகை உலகும் முகிழ்த்தன' என்று உறுதியாகக் கூறுகின்றது. இப்பாடலில் படைப்புக் கடவுளாகிய பிரமன் 'மூவகை உலகும் முகிழ்த்தன' என்ற தொடராலும், காத்தல் கடவுளாகிய திருமால் 'நீலமேனி ' என்ற தொடராலும் அழித்தல் கடவுளாகிய சிவபெருமான், 'வால்இழை பாகம்' என்ற தொடராலும் குறிப்பிடப்படுவதை உய்த்துணரலாம். இப்பாடலில் சிவபெருமான் உலகு தோன்றக் காரணமாவார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கலித்தொகையில் 'மணிமிடற்று எண்கையாய்' எனும் கடவுள் வாழ்த்துப்பாடலில் விளக்கப்படுபவனை நோக்கி ஆசிரியர், 'பல இயம்பப் பல்உருவம் பெயர்த்து நீ' என்று புகழ்கின்ருர். 'கட்புலனுய பலவடிவங்களையும் மீண்டு நின்னிடத்தே ஒடுக்கிக் கொண்டு' என்று உரை விரிக்கின்றது. ஆகவே பல வடிவினனுகிய ஒருவன் —ஆம்— அத்வைதனுகிய அப்பரமன் சங்கத் தமிழரால் வழிபட்ட வகை அறியப்படுகின்ருன்.

இதுகாறும் ஒருவாற்ருல் நம் தமிழிலக்கியங்களில் நம் இந்து சமய நற்கருத்துக்கள் பொதிந்து இருப்பதனை அறிந்து இன்புற்ருேம்.

நாதமுனிகளும், ஆளவந்தாரும்

திரு எம். எஸ். இராசகோபாலாச்சாரியார், திருவரங்கம்.

வைணவ சமயப் பெருஞ் சான்ருேர்கள் ஆழ்வார்கள் என்றும், ஆசாரியர்கள் என்றும் இருவகைப்படுவர். ஆசாரியர்களின் வரிசையில் முதல்வர், நாதமுனிகள் என்பவரே ஆவர். இவர் சிதம்பரத்திற்கு அருகேயுள்ள வீரநாராயணபுரம் என்னும் காட்டுமன்னர்கோயிலில் அவதரித்தவர்; நாதமுனிகளின் நற்பெருந் தொண்டினுலேயே, நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் நாடெங்கும் பரவித் தழைத்து நலமுற வளர்வதாயிற்று. வடமொழி வேதத்திற்கு வேதவியாசர் போல, தமிழ் மறைகளாகிய திவ்வியப் பிரபந்தங்களுக்கு நாதமுனிகள் செய்தருளிய நல்ல பெருந்தொண்டு, எல்லையில்லாததாகும்.

நாதமுனிகளின் புதல்வராகிய ஈசுவர பட்டாழ்வார்க்கு மைந்தராகத் தோன்றியவரே, ஆளவந்தார் ஆவர். இவருக்கு யமுனைத் துறைவர் எனவும் ஒரு பெயர் உண்டு. இவர், மணக்கால் நம்பிகள் பக்கல், பகவத் கீதையின் பதினெட்டு அத்தியாயப் பொருளும் நுண்ணிதின் ஆய்ந்து முறையே கேட்டுணர்ந்து தெளிந்தவர்.

''அண்டர்கோன் அணியரங்கன் என் அமுதினைக்
கண்ட கண்கள் மற்று ஒன்றினைக் காணுவே''

என்றபடி, அரங்கநாதன்பால் அளவற்ற அன்பும் ஈடுபாடும் கொண்டு, திருவரங்கநாதனுக்கு ஆட் செய்வதற்காகவே துறவு நெறி பூண்டு, தென் திருவரங்கமே பதியாகக் கொண்டு வாழ்ந்தருளி வந்தவர். ''ஆம் முதல்வன் இவன்'' என்று ஓர்ந்தறிந்துணர்ந்து, தமக்குப் பின்னர் எப்பெருமானுர் என்னும் இராமாநுசரை, ஸ்ரீ வைஷ்ணவ சமய தரிசனத்திற்குத் தலைவராக அமர்ந்து அதனைப் பாதுகாத்துப் பரப்பியருளும்படி புரிந்தவர், ஆளவந்தாரேயாவார். ''ஆளவந்தாரோடு யான் கூடியிருந்து குளிரப் பெற்றிருப்பேனுயின், பரமபதத்திற்கே படிகட்டியிருப்பேனே'' என்று, தம் அன்பும் ஆராமையும் தோன்ற, இராமாநுசர் பலகாலும் பணித்தருள்வாராம். இதனுல் ஆளவந்தாரின் அருமை பெருமைகளை, நாம் அனைவரும் இனிதறியலாம்.

தேவாலயங்களில் இறைவனுடைய திருவுருவங்களைத் திருப்பிரதிட்டை செய்து வழிபடுவதும், திருவிழாக்களை நடத்தி மன நிறைவு பெறுவதும், நம் நாட்டிற்கே உரிய தொன்மையானதோர் நெறியாகும். இதற்கு ஆதாரங்கள் பலவற்றை வடமொழி மறைகளில் ஆங்காங்குக் காணலாம். ஆயினும் இப்பொழுது இங்கு ஓதப்படும் இந்த மறைகளின் முன் பகுதியில் வேள்விகள் நடத்தப்பெறும் முறைகளும், பின் பகுதியான உபநிடதங்களிலே இறைவனைத் தியானிக்கும் முறைகளுமே பெரும்பாலும் தெளிவாகவும் விரிவாகவும் விளக்கப்பட்டு உள்ளன.

சுவேதத்வீபத்தில் உள்ளோர் ஓதும் மூல வேதத்தில், ஆலய வழிபாட்டு முறைகளும் அர்ச்சாமூர்த்திகளின் திருப்பிரதிட்டை முதலியனவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன என்பர் பெரியோர். இதனை இறைவனே அடியார் மீதுள்ள கரை புரண்ட கருணை வெள்ளத்தால் நம் முன்னேர்க்குத் தானே உபதேசம் செய்து அருளினுன். இதையே பாஞ்சராத்திர ஆகமம் என்பர்.

இறைவன் வழிபாட்டு முறைகள் ஆறில், இதனைத் தவிர மற்ற ஐந்தும் தெளிவாகக் கூறப்படாமையால், இருள் நிறைந்த இரவு போல் உள்ளதாக உணர்த்துவதற்கே இந்த ஆகமத்தைப் பாஞ்சாத்திரம் எனக் கூறலாயினர். வேதத்தைப் பிரமாணமாக (மூலாதாரமாக) ஏற்றுக் கொண்டுள்ள சங்கரரும், அவருடைய வழியில் வந்த சுரேசுவரர் போன்றவர்களும், பாஞ்சாத்திர ஆகமத்தில் உள்ள வழிபாட்டு முறைகளையும், ஒருநாளை ஐந்தாக வகுத்து அவ்வக் காலத்தில் அந்த அந்த நித்திய கருமங்களைச் செய்யும் மரபினையும் அப்படியே ஒத்துக் கொள்வதாகத் தம் தம் நூல்களில் ஐயம் திரிபிற்கிடமின்றி எழுதி வைத்துள்ளனர்.

வேதவியாச பகவானும், மகாபாரதத்தில், இந்தப் பாஞ்சராத்திர ஆகமத்தின் பெருமையைப் பரக்க விவரித்துள்ளார். இவரே தமது பிரம்ம சூத்திரங்களிலும் இதன் மகத்துவத்தைத் தாபித்துள்ளதும் தெளிவு.

ஆயினும் சிலர் இந்த ஆகமத்தை மூலப் பிரமாணமாக ஒத்துக் கொள்வதில்லை. சங்கரரும் பிரம்ம சூத்திரங்களுக்கு உரையிடும்போது, இதில் சில குறைகள் இருப்பதாக எழுதியுள்ளார். இவை அனைத்துக்கும் பதில் கூறி, மாசற்ற இதனுடைய மகிமையை, ஸ்ரீ ஆளவந்தார் தமது 'ஆகமப் பிராமாணியம்' என்னும் தமது நூலில் விரிவாகக் காட்டியுள்ளார். இவர் ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சோழவள நாட்டில் தோன்றியவர். இவரு

டைய திருப்பாட்டனுரான ஸ்ரீமந் நாதமுனிகள் இந்த ஆகமத்தை உலகில் பரப்பத் திருவுள்ளம் கொண்டார். நேர்மையுடன் ஈட்டிய பொருள் களைக் கொண்டு, நெறி பிறழாது நடத்தவேண் டிய வைதிகப் பொருள்களைச் செவ்வனே செய்வ தற்கு, இந்தக் கலிகாலத்தில் மாந்தரின் தகுதி யின்மையை, அவர் உணர்ந்ததுவே இதற்குக் காரணமாகும்.

இந்த நாதமுனிகளே அரும் தவமியற்றி ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் ஆகிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தை நம்மாழ் வாரிடத்தே ஓதி, நாடெங்கணும் மறை ஓது விழா நடத்தித் தமிழ் மறையின் மணத்தைப் பரப்பினர் என்று வரலாற்றில் காணலாம். தமர் உகந்து தமக்கென அளித்த திருவுருவங் களில், இறைவன் நித்திய சாந்நித்தியம் செய்து அடியவர்களுக்குக் குறைவின்றி அருள்பாலிக்கும் அர்ச்சாவதாரங்களில் ஆழ்வார்கள் மண்டிக் கிடந்ததையும், நாதமுனிகள் கண்டு கொண் டது, இன்னெரு காரணமாகும். இறை உணர்வை இனிதாக அளித்து அதனை மேன் மேலும் வளர்க்க வல்ல பாஞ்சராத்திர ஆகம முறைப்படி ஆலயங்களைச் சீர்படுத்தியும், இதை ஆட்சேபித்தவர்களின் வாதங்களுக்குத் தக்க பதில் கூறியும், பாஞ்சராத்திர ஆகமத்தை நிலை நாட்டிய பெருமை நாதமுனிகளுக்கு உரியது. அவருடைய ஆணையைச் சிரமேற் கொண்டு, அவர் திருப்பேரனுரான ஆளவந்தார், பிற் காலத்தில் இது மங்காமலிருப்பதன் பொருட்டுக் கல்வெட்டாக இருக்க வேண்டுமென்று எண் ணியே, 'ஆகமப் பிராமாணியம்' என்னும் தமது அரிய நூலை எழுதி உதவியுள்ளார்.

திருமால் வழிபாட்டுடன் கூடிய விசிட்டாத் வைத வேதாந்த சித்தாந்தத்தைத் தழைக்கச் செய்த பெருமையும், இந்த இரண்டு ஆசார்யர் களுக்கும் உண்டு. நாதமுனிகள் பிரம்ம சூத்தி ரத்தின் பொருளை அறிய உதவியாக இருக்கும் பொருட்டு, நியாய தத்துவம் என்றும், யோகாப் பியாசம் செய்வோர்க்கு உதவி, யோக ரகசியம் என்றும், இரு நூல்களை எழுதி வெளியிட்டார். இப்படி இவர் தொடங்கிய பணியைத் தொடர்ந்து, இவருடைய திருப்பேரனுரான ஆளவந்தார் இந்த விசிட்டாத்வைத சித்தாந் தம் நாடெங்கும் பரவும்படி செய்து எட்டு நூல்களை எழுதியுள்ளார்.

வீட்டிலும் ஆலயங்களிலும் திருமால் வழிபாடு செய்யும் முறையை விளக்கும் பாஞ்ச ராத்திர ஆகமங்களின் பெருமையை நிலை நாட் டுவது, இந்த ஆகமப் பிராமாணியம் எனும் நூல். இது வைகாநச ஆகமத்தின் உயர்த் தியைத் தாபிப்பதுமாகும். புருஷ சூக்தம் முதலிய வேதமந்திரங்கள் திருமாலின் பெரு மையைப் பேசுவதை விளக்கும் புருஷ நிர்ணயம் என்பது இவர் எழுதிய இரண்டாவது நூலாகும். அறிவாக மாத்திரமின்றி அறிகிறவனுகவும், பிறப்பில்லாதவனுகவும், சடப்பொருளைக் காட் டிலும் வேறுபட்டவனுகவும், அணு அளவுள்ளவ னுகவும் உள்ள சீவனை விளக்கும் ஆத்மசித்தியும், அறிவின் தன்மையைத் தெரிவிக்கும் சம்வித் சித்தியும், இறைவனை விளக்கும் ஈசுவர சித்தி யும் என்று இவர் எழுதிய சித்தித்திரயம் எனும் நூலை ஆதாரமாகக் கொண்டே பகவத் இராமா நுசர் தமது பாஷ்யத்தை அருளிச் செய்தார். பகவத் கீதைக்கு உரிய பொருளைச் சொல்ல வேண்டிய வழியை வகுக்கும் கீதார்த்த சங்கிர கமும் இவர் எழுதியதே.

பகவத் கீதையில் இறுதியில் கண்ணபிரான் உபதேசித்த சரமசுலோகத்தின் பொருளான சரணுகதியைச் செய்ய வேண்டிய முறையைத் தன் செய் முறைகளால் விளக்கக் கருதிச் சது சுலோகி, தோத்திரரத்திநம் எனும் இரு நூல் களையும் அருளிச் செய்துள்ளார். நம் வினைகளுக் கேற்பப் பயனளிக்கும் இறைவனைச் சாந்தப் படுத்தி அவருடைய திருவடிகளில் நாம் சரணு கதி செய்ய அவரை அணுகலாம்படி பரிந்துரை செய்யும்படி பெரிய பிராட்டியாரை வேண்டிக் கொள்வதாக அமைந்தது சதுசுலோகி. நம் அவல நிலைமையைக் காட்டிப் பெருமாளுக்கு எதிரிடையாகப் போகாமல், அவர்க்கு உட்பட் டிருந்து, அவரிடம் முழு நிறைவான நம்பிக்கை வைத்து வேண்டும் பயனை அறிவித்து அதனைப் பெற வேறு சாதனங்களை அநுட்டிக்காமல் அந்தப் பொறுப்பை அந்தப் பெருமாள், தாயார் இருவரிடம் ஒப்புவித்து விடுவதையே, தோத்திர ரத்திநம் எனும் அரிய துதி நூல் விளக்குகின் றது.

இவற்றுள் இந்தப் பஞ்சராத்திர ஆகமத் தை எதிர்ப்பவர்கள் கூறும் வாதங்களையும், இவற்றிற்கு இந்நூலில் கூறப்படும் விடைகளை யும் ஒரு சிறிது சுவைத்து இன்புறுவோம் :

கேள்வி : இந்த ஆகமம் வேதத்திற்கு எதிரானது. வேதம் சீவாத்மா பிறப்பில்லாத வன் என்கிறது. பரப்பிரம்மத்திடமிருந்தே மனம் முதலிய புலன்கள் பிறந்ததாகச் சொல்லு கிறது. ஆனுல் இந்தப் பாஞ்சராத்திரத்தில் சங்கருடணன் என்கிற ஜீவாத்மா பிறக்கிறுன். இவனிடமிருந்து மனம் பிறக்கிறது என்கிறது. இப்படி வேதத்துடன் முரண்படுவதால் இதனை வைதிகர்கள் நிராகரிக்க வேண்டாமா?

பதில் : இந்த வாக்கியத்திற்கு இது பொருளன்று. சீவர்களுக்கு அதிட்டான தேவ தையான சங்கருடணராக இறைவனே அவதா ரம் செய்கிறுன். இவர்க்குப் பிறகு மனதிற்கு அதிட்டான தேவதையாகப் பிரத்தியும்நர் அவ தரிக்கிறுர் என்றே அதற்குப் பொருள். மேலும் ஆன்மாக்களும் சடப் பொருளும் இறைவனு டைய சொத்தேயாகும். இவற்றுள் சடப்பொரு ளான பிரகிருதி கணந்தோறும் மாறும் இயற் கையை உடையது. ஆன்மாக்கள் பிறப்பது மில்லை. இறப்பதுமில்லை எனப் பாஞ்சராத்திர ஆகமம் தெளிவாகச் சொல்லியுள்ளது.

இறைவனைத் தியானிப்பதற்கு வாய்ப்பாக அவரை வாசுதேவர், சங்கருடணர், பிரத்தி யும்நர், அநிருத்தர் என்று நான்கு திருவுருவங் களைக் கொண்டு காட்சி தருகிறுர். தியானிப்ப வர்களின் தகுதி உடைமைக்கேற்ப இந்த உரு வங்களில் சிற்சில பிரம்ம குணங்களே வெளி யிடப்படுகின்றன. இவ்வவதாரங்கள் பல்வேறு

பொருள்கட்கு அதிட்டாந தேவதைகளாவர். இது வியூகம் எனப்படும்.

கேள்வி : நான்கு வேதங்களாலும் பயன் ஏதும் காணுத சாண்டில்யர் சனகரை அடைந்து பாஞ்சராத்திர ஆகமத்தைக் கற்றுப் பயனடைந்தார் என்று இதில் சொல்லியிருப்பதாலும், இது வேதத்தைக் குறைகூறியும், பாஞ்சராத்திரத்தைப் புகழ்ந்தும் உள்ளதாலும், இரண்டிற்கும் முரண்பாடு தெளிவாக இல்லையா?

பதில் : இது வேதத்தைக் குறை கூறுவதாக ஆகாது. நால் வேதத்தைக் கற்றுச் சாண்டில்யர் அவற்றில் சொல்லிய தருமங்களைச் செய்து, அதன் பலனை விரைவில் பெறத் தாம் ஆற்றல் பெற்றிருக்கவில்லை யென்று தம்மையே சனகரிடம் முறையிட்டுக் கொண்டார். சனகர் இந்த ஆகம முறைப்படி அர்ச்சா மூர்த்தியின் பூசனை நெறிகளை எடுத்துரைத்தார் என்றுதான் இங்குக் கூறப்பட்டுள்ளது. எனவே முரண்பாடு எதுவும் இல்லை என்பது கண்கூடு.

இம்மாதிரி பல வினுக்களுக்கு விடைகள் அளித்து, இந்நூலை ஆளவந்தார் இயற்றியுள்ளார். இந்நூல், இது காறும் எளிதில் கிடைக்கப்பெறுத குறையை நீக்கச் சென்னை இராமநுசர் ஆய்வுக் கழகத்தின் கௌரவச் செயலாளரான சீநிவாச ராகவ ஐயங்கார் அவர்கள், இதனை மிகவும் அழகாக அச்சிட்டு உதவியுள்ளார். வடமொழி பயிலாதவர்க்கு உதவும் பொருட்டுச் சிகாகோ பல்கலைக் கழகத்தின் வடமொழிப் பேராசிரியரான டாக்டர் வான்பீயூடினன் என்பவரின் சீரிய ஆங்கில மொழி பெயர்ப்பையும், இந்த ஆகமத்தின் சிறப்பை விளக்கவல்ல அவருடைய அருமையான முகவுரையையும், இதில் சேர்த்துள்ளது மிகப் பாங்காக உள்ளது. வடமொழியில் உள்ள முதல் நூலினைப் பல பத்திகளாகப் பிரித்து, அவற்றிற்கு எண்களிட்டு, அந்த எண்களுடனேயே மொழி பெயர்ப்பையும் வெளியிட்டுள்ளதால், வடமொழியில் சிறிதே பயிற்சியுள்ளவர்களும் மொழி பெயர்ப்பைக் கொண்டு மூல நூலில் தெளிவு பெறுவது எளிதாக உள்ளது. மிக நுட்பமானவாதப் பிரதிவாதங்களைத் தெளிவாக ஆங்கிலத்தில் தந்துள்ள பேராசிரியரின் வடமொழிப் புலமையை எவ்வளவு பாராட்டினுலும் தகும்.

வைணவப் பெருஞ் சான்றேருர் ஆகிய ஆளவந்தார் அருளிச் செய்த ''ஆகமப் பிராமாணியம்'' என்னும் நூலை ஆராய்ந்து அழகுற வெளியிட்டவர்களுக்கு வைணவ உலகம் மிகக் கடமைப்பட்டுள்ளது என்பது சொல்லத் தேவையில்லை.

நூல்கள் அறிமுகம்

புலால் தின்பது தீவினையா? : இந்நூல், புலவர் மாமணி, சித்தாந்த வித்தகர் திரு முரு. பழ. இரத்தினம் செட்டியார் அவர்களால், தொகுக்கப் பெற்றது. இது, பத்து இயல்கள் கொண்டது. புலால் உண்போர் எழுப்பும் வினுக்கள் பலவற்றிற்குத் தெளிவான விடைகள் தரப்பட்டுள்ளன. அவ்விடைகள் அறிவுடைய எவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையிலும், ஊனுண்போர் உள்ளம் ஊறுபடாத முறையிலும், வரையப்பெற்றுள்ளன. கொல்லாமையையும், புலால் உண்ணுமையையும், உலகச் சமயங்கள் எவ்வாறு ஏற்றுப் போற்றியுள்ளன என்பது, இந்நூலில் திறம்பட விளக்கப் பெற்றிருக்கிறது. அயல்மொழிச் சொற்களுக்கு, நல்ல சிறந்த தமிழ்ச் சொற்கள், புதியனவாக அழகுறப் புனைந்து கையாளப் பெற்றுள்ளன. எழுத்துச் சீர் திருத்தமாக 'ஈக்கு' 'இ' பயன்படுத்தப் பெற்றிருப்பது வரவேற்கற்பாலது. இங்ஙனமே 'ணை', 'லை', 'ளை', 'னை' இவ்வடிவங்களுக்கு மாற்ருக 'ணை' 'லை', 'ளை', 'னை' இவற்றையும், 'ணு', 'ரு', 'னு'வுக்கு மாற்ருக 'ணா', 'றா', 'னா'வையும், ஆசிரியர் முன்னரே இந்நூலில் கையாண்டிருப்பது போற்றத் தக்கதும், பலவகைகளில் நலம் பயப்பதுமாகும். இதன் விலை ரூ. 8.

இந்த நூல், பின்வரும் முகவரியில் கிடைக்கும்:

''மறைமலை அடிகள் மன்றம்,
புன்செய்ப் புளியம்பட்டி—638439,
கோவை மாவட்டம்.''

—ஆசிரியர்.

தென்காசிக் கோபுரக் கல்வெட்டுக்கள்

[திரு. மா. செந்தில் செல்வக்குமரன், M.A., தூத்துக்குடி]

சங்ககாலப் பாண்டியர்கள் போன்ருே, இடைக்காலப் பாண்டியர்கள் போன்ருே, மா பெரும் நிலப்பரப்பை ஆண்டு, பல போர்களில் பல மன்னர்களைப் புறம்கண்டு, மாபெரும் புகழோடு திகழ்ந்தவர்கள் அல்லர் பிற்காலப் பாண்டியர்கள். இவர்கள் தென்பாண்டி நாட்டை கி.பி. 14ஆம் நூற்ருண்டின் பிற்பகுதி முதல் 17ஆம் நூற்ருண்டின் பிற்பகுதி வரை ஆட்சி செய்தனர். இப்பிற்காலப் பாண்டியர்களைப் பற்றிய வரலாறு தொடர்ச்சியாகத் தெளிவாக, விரிவாகத் தெரியவில்லையாயினும், நெல்லை மாவட்டத்தில் காணப்படும் கல்வெட்டுக்கள் இவர்களைப் பற்றிய செய்திகளை ஓரளவு தரத்தான் செய்கின்றன. குறுகிய நிலப்பரப்பை ஆண்டவர்களாயினும் இறைவனுக்குப் பணி செய்வதில் இவர்கள் குறுகி நிற்கவில்லை என்பதனைத் தென்பாண்டிய நாட்டில் இவர்கள் எழுப்பிய பல கோயில்கள் உறுதி செய்வதாய் உள்ளன.

பராக்கிரம பாண்டியன்

பிற்காலப் பாண்டியர்களுள் சிறப்புற ஆண்டு, தன் பெயர் நிலைக்கச் செய்தவன் பராக்கிரம பாண்டியன். இவன் கி.பி. 1422 முதல் கி.பி. 1463 வரை ஆட்சி செய்தான். இறைவன் கனவில் தோன்றி 'வடகாசியில் உள்ள தம் கோயில் அழிவுறும் நிலையிலிருப்பதால் சித்திரா நதியின் வடபுறத்தில் தென்காசியினையும், அதில் ஒரு கோயிலினையும் அமைக்குமாறு'' வேண்ட இம்மன்னர் தென்காசி விசுவநாதர் திருக்கோயிலை அமைத்தான் என்று இக் கோயில் முன்பு உள்ள கற்றூணில் காணப்படும் கல்வெட்டு கூறுகிறது. தென்காசி விசுவநாதர் கோயில் கோபுரக் கல்வெட்டுக்களில் காணப்படும் செய்திகளைத் தொகுத்து வழங்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கோபுரக் கல்வெட்டுக்கள் :

கல்வெட்டுக்கள் பொதுவாகத் தானம் கொடுத்தவர்கள் பற்றியும் கொடுக்கப்பட்ட தானம் பற்றியும் பேசுவனவாக அமைதல் உண்டு. ஆனல் தென்காசிக் கோயில் கோபுரக் கல்வெட்டுக்கள் இவற்றிலிருந்து மாறுபட்டு தென்காசி விசுவநாதர் கோயிலில் எந்தெந்த அமைப்புக்கள் எந்தெந்தக் காலங்களில், யாரால் எடுக்கப்பட்டன என்பதனையும், பராக்கிரம பாண்டியன்தான் எடுத்த கோயிலினைப் பிற்காலத்தவர் அழிவினின்று காத்தருள வேண்டுமென விடுத்த வேண்டுகோளினையும், பராக்கிரம பாண்டியன் கோபுரப் பணி முடிக்காமல் விண்ணுலகு அடைந்ததனையும், அண்ணன் பணி அரை குறையாய்க் கிடத்தல் கூடாது என்றெண்ணிக் குலசேகரன் கோபுரப் பணி முற்றுவித்ததனையும், நெல்வேலி மாறன் வல்லவன், வீரபாண்டியன் ஆகிய மன்னர்கள் முடிசூட்டு நிகழ்ச்சிகளினையும் பாடல் வடிவில் பகர்ந்து நின்கின்றன.

கோயிற் பணி தொடங்கல் :

கட்டிடப் பணி தொடங்கும் முன்பு நல்ல நாள் பார்த்து நல்ல நேரம் பார்த்துக் கால் நடுதல் வழக்கம். அதன்படி பராக்கிரம பாண்டியன் தென்காசி விசுவநாதர் கோயில் எடுப்பதற்கு நல்ல நாள் பார்த்துக் காழ்சணை செய்த நிகழ்ச்சியினைக் கோபுரப் பாடல்களுள் ஒன்று அழகாகக் கூறி நிற்கிறது. சகாப்தம் 1368ல் (கி.பி. 1426) வைகாசி மாதம் 10ஆம் நாள் தென்காசியில் வெள்ளிக்கிழமையன்று, பராக்கிரம பாண்டியன் தென்காசிக் கோயில் காணச் சென்று அதற்கான காழ்சணை செய்தான். இச் செய்தியினைக் கூறும் பாடல் :

அன்பினுடன் சகாத்தம் ஆயிரத்து முந்நூற்று
அறுபத்தெட்டு அதன்மேல், வைகாசித்திங்கள்

மந்தியதி ஈரைந்தில் புருவபக்கம்
மருவு தசமியில் வெள்ளி வாரம் தன்னில்,

மின்திகழ் உத்திரநாள் மீனத்தில் வாகை
வேல்அரி கேசரி பராக்கிரம மகிபன்

தென்திசையிற் காசிநகர் கோயில் காணச்
சென்றுநின்று காழ்சணைதான் செய்வித் தானே

தெள்ளமுதூட்டல் :

சகாப்தம் 1369ல் (கி.பி. 1447) ஒரு சனிக்கிழமையன்று தென்காசி விசுவநாதர் கோயிலின் உள்ளமைப்புக்களை யெல்லாம் முடித்துக் கும்பாபிடேகம் செய்கின்ருன் என்று ஒரு கோபுரப் பாடல் கூறுகிறது. கி.பி. 1425 ஆம் ஆண்டு கோயிற் பணியைத் தொடங்கிய மன்னர் கி.பி. 1447ஆம் ஆண்டு முடிக்கிருன். இதன்படி பார்த்தால் கோயில் உள்ளமைப்பு முடிய 21 ஆண்டுகள் பிடித்தன என்று அறிய முடிகிறது. ஆனல் இக்கோயிலில் உள்ள மற்ருெரு கல்வெட்டொன்று கோயில் கட்டி முடிப்பதற்குப் பதினேழு ஆண்டுகள் பிடித்தன என்று கூறுகின்றது. இந்த முரண்பாட்டிற்குக் காரணம் என்னவென்று விளங்கவில்லை. ஈண்டு உள்ளமைப்புக்கள் யாவை என்று அறியப் பராக்

கிரம பாண்டியனின் மற்றொரு கல்வெட்டு நோக்கத் தக்கது.

''தென்வாரி நாட்டுச் சித்திராநதி உத்திர தீரத்தில்
தட்சின காசியிலே
உடையார் விச்வநாதனுக்கு அபிநவமாக உபாநாதி
ஸ்தூபி
பர்யந்தமுந் திருப்பணி செய்து, உடையார் விச்வ
நாதனையும்
பிரதிஷ்டித்து, அர்த்தமண்டபம், இடை நாழிகை,
மஹாமண்டபம்,
ஸோபாநம் இவையுந்திருப்பணி செய்து''..

கோபுரப் பணி :

விசுவநாதனுக்கு அழகிய கோயில் எடுத்து முடித்தவுடன் பார்த்தோர் வியக்கும் வண்ணம் மாபெரும் கோபுரத்தை எடுக்கும் பணியில் முனைந்தான் பராக்கிரம பாண்டியன். இச் செய்தியினைக் கோபுரத்தில் காணப்படும் இரண்டு பாடல்கள் தெளிவாகக் கூறியுள்ளன. கலியுகம் 4558ல் கார்த்திகை மாதம் ஐந்தாம் நாள் செந்நெல் வயல் சூழ்ந்த தென்காசி நகர் தன்னில் உலகில் உள்ள உயர்ந்தோர் அனைவரும் பணிந்து தொழுது போற்றும்படியான, மலை போன்ற கோபுரத்தை அமைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் கோபுரத்தைக் கட்டத் தொடங்குகிறான், என்று ஒரு பாடல் கூறுகிறது.

பன்னு கலியுகம் நாலாயிரத் தைந்நூற்றைம்
பத்தெட்டின் மேல்எவரும் பணிந்து போற்றச்
செந்நெல்வயல் தென்காசி நகரில்நற் கார்த்திகைத்
திங்கள், தியதிஐந்தில், செம்பொன்வாரம்
மன்னிய மார்கழி நாளில் மதுரை வேந்தன்
வடிவெழு தொணுத பராக்கிரம மகிபன்
சொர்ணவரைபோல் திருக்கோபுரமும் காணத்
துடியிடையாய்! உபானமுதல் துடக்கி னனே

இச் செய்தியினை மற்றொரு கோபுரப் பாடல் வேறு விதமாகக் கூறுகிறது. சகாப்தம் 1379ல் (கி.பி. 1457) கார்த்திகை மாதம் ஐந்தாம் தேதி வியாழக் கிழமையன்று உபானம் முதல் கோபுரத்தைக் கட்டத் தொடங்குகிறான் என்று குறிப்பிடுகிறது. இப்பாடல், ஆண்டினைச் சகாப்தத்தில் குறிப்பிட்டுள்ளது.

தென்காசி கோபுரத்தை மிக உயர்வாகக் கட்ட வேண்டுமென்று எண்ணிய பராக்கிரம பாண்டியன், நற்பணியை மட்டும் ஆறாண்டில் முடித்தான் என்று மற்றொரு பாடல் கூறுகின்றது. அதாவது கி.பி. 1457ல் தொடங்கி கி.பி. 1463ல் கட்டி முடித்துள்ளான். கோயிலின் உள்ளமைப்புக்களை கி.பி. 1447ஆம் ஆண்டு முடித்த மன்னன் கோபுரப் பணியைக் கி. பி. 1457ஆம் ஆண்டுதான் தொடங்குகிறான். கோயிற் பணியினை முடித்தவுடன் கோபுரப் பணியைத் தொடங்கியிருந்தால், மன்னன் தன் காலத்திலேயே கோபுரத்தை முழுமையாகக் கட்டியிருக்க முடியும் என்று எண்ணத் தோன்றுகிறது. இவன் கட்டிய கோபுரக் கற்பணி இன்றளவும் அழியாமல் உள்ளது. இதில் பல தெய்வச் சிற்பங்கள் புராணக் கதைகளின் அடிப்படையில் வடிக்கப்பட்டு, அழகே உருவாக உயிர் உள்ளனவாகக் காட்சி தந்து, பராக்கிரம பாண்டியனின் கலை உணர்வினை உலகில் உள்ளோர்க்கு உணர்த்தி நிற்கின்றன.

மீன்கள் துள்ளி விளையாடும் வயல்களால் சூழப்பட்ட அழகிய தென்காசி நகரில் ஒப்பற்ற பெருங் கோயிலைத் தெய்வத்தின் அருளாலே செய்து முடித்தேன். இக்கோயிலினை மேன் மேலும் விரிவுபடுத்திப் பாதுகாப்பவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கி அவர் கீழ்ப் பணி புரிவேன்.

குளிர்ந்த பூஞ்சோலைகளால் சூழப்பட்ட தென்காசி நகர்தனை தம் சுற்றத்தாருடன் வந்து பாதுகாப்பவர்கள் எந்நாளும் பராக்கிரம பாண்டியனால் வணங்கப்படுவர்.

மனத்தளவில் கூட நினைத்துப் பார்க்க முடியாத ஒரு மாபெரும் பணியினை விசுவநாதப் பெருமாள் என்னைச் செய்யுமாறு ஆணையிட்டான். நானும் அப்பெருமானின் திருக்கருணையால் தென்காசித் திருக்கோயிலைக் கட்டி முடித்தேன். இக்கோயிலை என்றென்றும் நினைத்துப் பாதுகாத்துப் போற்றும் மன்னர் அடிகளைத் தாழ்ந்து வணங்கித் தலைமீது சூடிக் கொள்வேன்.

தென்காசித் திருக்கோயிலுக்கு வரக் கூடாத தீங்கு வந்துவிட்டால், உடனே அங்கு வந்து அத்தீங்குதனை நீக்கிக் கோயிலினைப் பாதுகாப்பவர்களைப் பாரறியப் பணிந்தேன் நான்.

தென்காசிக் கோயிலை, விலை மதிப்பற்ற வலம்புரி சங்குகளைத் தன்னிடத்தே கொண்ட கடலால் சூழப்பெற்ற உலகமே போற்றும்படியாகக் கட்டி முடித்தேன். இவ்விறைவன் மீது அன்பு கொண்டு இக்கோயிலைத் திரிசேர் விளக்கெனக் காப்பவர் அடிகளை என் முடி மீது வைத்துக்கொள்வேன்.

சாத்திரங்கள் பார்த்து யான் தொடங்கிய பூசைகளைக் காலந்தவறாமல் நடத்தி, அன்போடு விசுவநாதனின் பொற்கோயிலை என்றும் பாதுகாக்க, புவியிலுள்ளோர்க்குப் பரிவோடு அடைக்கலம் கூறினேன்.

ஒப்பற்ற திருக்கோயிலினைச் சமைத்து, அதனைக் காப்பவர் அடிகளைத் தன் முடி மீது தாங்கி, உலகில் உள்ளவர்க்கே அடைக்கலங் கூறிய மன்னனைப் புலவர் ஒருவர் புகழ்ந்து பாடியுள்ள பாடல் ஒன்று கோபுரத்தில் காணப்படுகிறது. பொன் காசை நிலையானது என்று நினைந்து, அதனைப் போற்றி வாழ்பவர்கள் இருக்கும் உலகத்தில் காசினை ஒரு பொருட்டாக மதியாது விசுவநாதனுக்குக் கோயில் அமைத்தவன் பராக்கிரம பாண்டியன் எனப் புகழ்கிறார்.

ஈசர் உருவம்....

(சிவத்திரு தத்புருஷ தேசிகர் அவர்கள், தேவகோட்டை)

சிவபெருமானே ஈசர், ஈசுவரர், ஈசானர் முதலிய திருப்பெயர்களால் வேதாகமங்களும், செந்தமிழ்த் திருமுறைகளும் போற்றிப் பரவு கின்றன. 'ஈசர்' என்பது, ஆளுகின்றவர் என்னும் பொருளை உடையது. இது ஈசாவாசியம், அதர்வ சிகையாதிய உபநிடதங்களிற் காணப்பெறுவதாகும். ''எங்கும் ஈசன் எனுத வர்க்கில்லையே'' என்று, ஈசநாம செபத்தின் சிறப்பை ஆளுடைய அரசர் அருளியுள்ளார்.

எல்லாச் செல்வங்களையும் தனது உடைமைகளாகக் கொண்டிருப்பவன் ஈசுவரன், அவனது உடைமைகளை அவன் தரச் சில காலம் வரை ஆன்மாக்கள் அனுபவித்து வருகிறார்கள். ஈசுவரனது ஆணைக்குட்பட்டே ஆன்மாக்களுக்கு அவ்வுடைமைகளில் தொடர்பும் பிரிவும் நிகழுமாதலின், ஆன்மாக்களை அவனது அடிமைகளென்று ஞான நூல்கள் கூறும். ''எல்லாம் உன் அடிமையே'', ''எல்லாம் உன் உடைமையே'' என்பது தாயுமான அடிகள் திருவாக்கு. ''உடையாய் அடியேன் உன் அடைக்கலமே'' என்பது திருவாசகம்.

பரமேசுவரராகிய சிவபெருமானது ''ஈசானர்'' என்ற திருப்பெயருக்கு உபநிடதங்களில் பல பொருள்கள் கூறப்பெற்றுள்ளன. ''எல்லா உலகங்களையும் ஆளுவனவும் உண்டாக்குவனவுமாகவுள்ள மேலான சத்திகளை உடையவர் எவரோ, அவரே 'ஈசானர்' என்பது, அதர்வ சிரசிற் காணப்பெறுகின்றது.

உலகுயிர்களைக் கடந்து சொரூப நிலையில் அகளமாய் இருக்கின்ற பரசிவம் உயிர்களின் உய்திப்பாட்டில் திருவுளம் வைத்து, அவ்வுயிருலகுகளைக் கலந்து சகளமாய் உருவங் கொண்டு வந்தருளும்.

''அகளமாய் யாரும் அறிவரி தப்பொருள்
சகளமாய் வந்ததென் றுந்தீபற
தானாகத் தந்ததென் றுந்தீபற''

என்று திருவுந்தியாரும்,

''அகளமய மாய்நின்ற அம்பலத்தெங் கூத்தன்
சகளமயம் போலுலகில் தங்கி-நிகளமாம்
ஆணவ மூல மலமகல ஆண்டனன்காண்
மாணவக என்னுடனாய் வந்து''

என்ற திருக்களிற்றுப்படியாரும், இவ்வுண்மையை உணர்த்துவனவாகும்.

இங்ஙனம் சொரூபசிவமே, கூத்த சிவமாக வந்து அருள்புரிகின்ற பெருமையைத் திருமூல தேவநாயனார் தமது திருமந்திர மாலைக் கடவுள் வாழ்த்து இருபதாவது செய்யுளில் தெளிவு செய்தருளுகின்றார். அச் செய்யுள்,

''முடிவும் பிறப்பையும் முன்னே படைத்த
அடிகள் உறையும் அறநெறி நாடில்
இடியும் முழக்கமும் ஈசர் உருவம்
கடிமலர்க் குன்ற மலையது தானே''

என்பதாகும்.

'எங்கிருந்து பிறந்தோம்? எவரால் நிலையுறுகின்றோம்? எவரில் ஒடுங்குகின்றோம்? எவரால் இன்ப துன்பங்களை ஏற்று நுகர்கின்றோம்? எவரால் கட்டு நீக்கம் எய்துகின்றது? என்று கடவுள்வாதிகள் கூறுவர்'' எனச் சுவேதாசுவதர உபநிடதம் உரைத்தது. ''விண்முதல் பூதலம், ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும், படைத்தளித் தழிப்ப மும்மூர்த்திகள் ஆயினை'' என்பது, நம்மை ஆளுடைய பிள்ளையார் அருள் மொழி.

படைத்தல் முதலிய ஐந்து தொழில்களும் பரமசிவனுக்குச் சுதந்தரமானவையே யெனினும், அழித்தற்றொழிலே அவனது பரத்துவத்தைப் புலப்படுத்தி நிற்பதாதலின், ''முடிவும்'' என்று அதனை முன்னே வைத்துக் கூறினார் ஆசிரியர். முடிவும் பிறப்புமாகிய இரண்டும் கூறவே, இடைப்பட்டனவாகிய 'நிலை' முதலிய மூன்றும் கூறியதாக ஆயிற்று. ''முன்னேபடைத்த'' என்பதனால் காலங் கடந்த அநாதி குறிக்கப் பெற்றது.

'அடிகள்' என்னும் சொல்லால் ஆண்டவனை உணர்த்திச் சிவசக்தியையும் தனக்குள் ஒடுக்கிக் கொண்டு தானொருவனேயாய் அவன் நிற்கும் கடையூழிக் காலத்து ஒடுக்கத்தையும் அதன்பின் நிகழும் மறுபடைப்பையும் இங்கே ஆசிரியர் நினைவுபடுத்துகின்றார். கடையூழி யொடுக்க மொன்றே பரசிவத்தால் நிகழ்த்தப் பெறுவ தென்பதும், இடையூழிகளில் நிகழும் ஒடுக்கங் கள் மற்றையோராலும் நிகழ்த்தப் பெறுவன வென்பதும் அறியத் தக்கனவாகும்.

உயிர்களை அநாதியே பற்றி நிற்கின்ற ஆணவ மலத்தைக் கெடுத்துக் கன்மங்களை நுகர்வித்தொழித்து, மாயைத் தொடர்பை நீக்கிக் கரையேற்றுவதற்காக முடிவையும் பிறப்பையும் மாறிமாறி அவற்றிற்குத் தந்தருளுவது இறைவனது செயல். முடிவு என்பது, அவன் எல்லாவற்றையும் தன்ன கத்தே ஒடுக்கிக் கொள்வதையும், பிறப்பு என்பது அங்ஙனம் ஒடுக்கிக் கொண்டவற்றை மீண்டும் படைப்பதையும் உணர்த்தும்.

வேதாகமங்கள் சிவபெருமானால் அருளிச் செய்யப் பெற்றவை. வேதத்தில் ஒழுக்க நெறியும், ஆகமத்தில் உய்யும் நெறியும் உரைக்கப் பெற்றுள்ளன. வேதாகமங்கள் ஞான வடிவினனாகிய சிவபெருமான் மகிழ்ந் துறையும் இடங்களாகும். இதனாலேயே வேதா கமங்களைச் சிவபெருமானது திருமேனிகளாக வைத்துப் பூசிப்பது மரபாயிருந்து வருகின்றது. அறநெறியாகிய வேதாகமங்கள் சிவபெருமா னால் அருளிச் செய்யப் பெற்றன என்பதைவிட, அவை சிவபெருமானது நிலைக்களங்கள் என்பது சிறந்ததாகையால், ''அடிகள் உறையும்'' என உறைதலை விதந்து கூறினார்.

வேதாகம உண்மைகள் கலையறிவுக்குப் புலப்படுவனவல்ல. திருவருளே கண்ணாகக் காண்பவர்க்கு மட்டும் தெளிவுறுவன. ''ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி'' என்பது, சிவஞான போத உரைப்பாயிரம். எனவே, திருவருளில் அடங்கி நின்று, அது காட்டக் காணும் மெய்ஞ் ஞானியரது காட்சியே, உண்மைக் காட்சியா கும். இவரைத் ''தவந்தரும் ஞானத்தோர்'' என்று அருணந்திசிவம் அருளிச் செய்கின்றார்.

இத்தகைய ஞான நாட்டத்தினர் 'வானத் தில் உண்டாகிற இடி மின்னலையும், அதன் ஓசையையும், மனமலர் மிக்க மலையையும் கடலையும், ஈசர் உருவங்களே என்று காண்பார் கள்'' எனப் பின்னிரண்டடிகளில் ஆசிரியர் அருளியுள்ளார். சொரூப சிவம் தடத்த சிவ மாக வருகின்றபோது அருவம், அருவுருவம், உருவம் ஆகிய மூவகைத் திருமேனிகளையும் கொண்டு எழுந்தருளியிருக்கும்.

இத் திருமந்திரத்தில் ''அடிகள் உறையும் அறநெறி'' என்பது சிவபெருமானது ஞான வடிவத்தை உணர்த்தி, அவரது சொரூப நிலையை அறிவித்தது. தடத்த நிலையில் முதற் படியாகிய அருவத் திருமேனியை இடிமுழக் கமும், இரண்டாவதாகிய அருவுருவத் திரு மேனியை மின்னலும், மூன்றாவதாகிய உருவத் திருமேனியை மலை-கடல்களும் உணர்த்திக் கொண்டிருக்கின்றன.

காட்சிக்கும் கருத்துக்கும் உட்படுகின்ற எல்லாப் பொருள்களையும் அவ்வப்பொருள்க ளாகவே காண்பது, நம்மனைய உலகியல் நெறி யாளர் இயல்பு. அங்ஙனமின்றி எல்லாப் பொருள்களையும் இறைவனது திருவுருவங்க ளாகவே மெய்ஞ்ஞானியார் கண்டு இன்புறுவர். ''பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறை கின்ற பரிபூர ணானந்தமே'' என்பார் தாயு மானப் பெருந்தகை. ''பர ஞானத்தாற் பரத்தைத் தரிசித்தோர் பரமே, பார்த்திருப் பர் பதார்த்தங்கள் பாரார்'' என்பது சிவஞான சித்தியார்.

மன வாக்குக் காயங்களுக்கு எட்டாது கடந்த நிலையிலிருக்கும் கடவுளை எல்லாவற்றி லும் கண்டு களிக்கும் இயல்பு, யாருக்கும் எளிதிற் கைகூட மாட்டாதென்பதை ''நாடில்'' என்ற ஒரு சொல்லை வைத்து உணர்த்தியும், காண்டற்கரிய கடவுளாயினும் கருதுவார்க்கு ஆற்ற எளியனாயிருப்பவன் அவன் என்பதை, இடியோசையாயும் மின்னலாயும் மலையாயும் கடலாயும் அவன் காட்சி தரும் இயல்பில் வைத்து அறிவித்தும், ஆசிரியர் தெளிவுறுத்தி யுள்ளார்.

''ஓதி யாருமறி வாரிலை ஓதி உலகெலாம்
சோதி யாய்நிறைந் தான்சுடர்ச் சோதியுட் சோதி யான்
வேதி யாகி விண்ணாகிமண் ணோடெரி காற்றுமாய்
ஆதி யாகிநின் றானுமை யாறுடை ஐயனே''

என்னுந் திருஞான சம்பந்தப் பெருந்தகையார் திருவாக்கை, இத்திருமந்திரத்துடன் ஓதி யுணர்ந்து பயன் பெறுவோமாக !

**

158636

முடி காணிக்கை மண்டபம் திறப்பு விழா
5—9—1978

முடி காணிக்கை மண்டபம் கட்ட நன்கொடை ஈந்த சிங்கப்பூர் திரு கோவிந்தசாமி பிள்ளை அவர்களின் குமரார் திரு ஜி. இராமகிருஷ்ணன் அவர்களுக்கு அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் பொன்னுடை போர்த்தி கௌரவித்தல்



சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் கோயில் முடி காணிக்கை மண்டபக் கட்டிடத் தோற்றம். திறப்பு நாள் 5—9—1978

பதிவு எண். எம். 7039

நாள் 5—9—1978

முடி காணிக்கை மண்டபம் திறப்பு விழா

திருப்பணிக் குழுத் தலைவரும், பக்த பிரமுகருமான திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் வரவேற்புரை நிகழ்த்துதல். அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன், நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு சௌந்தரராஜன், வருவாய்த் துறைத் துணை அமைச்சர் மாண்புமிகு முசிறிப்புத்தன், அறநிலைய ஆணையர் திரு. யு. சுப்பிரமணியன், I.A.S., முதலிய பெருமக்கள் பலர் விழாவிற் கலந்து கொண்டனர்.